Not for sale

செப்டம்பர் - அக்டோபர் 2018

தமிழாக்கம்

# The Herald
## of Christ's Kingdom



# கிறிஸ்துவின் வாழ்க்கை

இயேசுவின் வாழ்க்கை வரலாறு மற்றும் அவருடைய குணலட்சணங்கள்

குணலட்சணங்கள் பற்றிய இயேசுவின் போதனைகள் • மூன்று முக்கியமான உவமைகள்

எஜமானால் தொடப்படுதல் • கிறிஸ்துவுக்குள்ளாக நம்முடைய நன்மைகள்

இயேசுவின் இறுதி நாட்கள்

## கிறிஸ்துவின் வாழ்க்கை

# ஆதியிலே



விசுவாசிகள் நம்முடைய ஆண்டவரின் வாழ்க்கையைப் படிக்க வேண்டியது மிக அவசியம், அவருடைய உபதேசங்களுக்காக மட்டுமல்ல, அவரது அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கை முறைகளிலிருந்தும் கற்றுக் கொள்ள வேண்டும். நமது உலகம், அவர் வாழ்ந்ததைவிட மிகவும் வித்தியாசமானது. ஆகையால், ஒரு பரிசுத்தமான வாழ்க்கை வாழ்வதற்கு, அவர் நமக்கு விட்டுச் சென்ற கொள்கைகளை, எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை நாம் புரிந்துக்கொள்ள வேண்டியது அவசியம். நம்முடைய கர்த்தருடைய வாழ்க்கையைப் படிப்பதற்கு பல அணுகுமுறைகள் உள்ளன. இந்த இதழில் குறிப்பிட்ட இடத்தில், ஒவ்வொரு அம்சத்தையும் விரிவாக காண்பது இயலாத ஒன்றாகும். நம்முடைய கவனத்தை ஒருமுகப்படுத்த சில முக்கிய பகுதிகளை மட்டுமே நாங்கள் தேர்ந்தெடுத்தோம்.

"இயேசுவின் வாழ்க்கை வரலாறு மற்றும் அவருடைய குணலட்சனங்கள்" லோகோஸ் மற்றும் மனுஷனாக வருவதற்கு முன், தேவனுடைய சிருஷ்டிப்பின் வேலைகளில் ஒரு தொழிலாளியாக அவருடைய அனுபவம் துவங்கியது. அவரது பக்தியான அனுபவங்கள், பிள்ளைப் பருவத்திலேயும் காணப்பட்டது. வனாந்திரப் பகுதிகளில் நடந்த சோதனைகள் பரிசோதிக்கப்பட்டு, முதல் அற்புதம் என்ற கட்டுரை கொடுக்கப்பட்டுள்ளது. அவருடைய ஊழியம் இப்போது விரிவடைய ஆயத்தமானது.

"குணலட்சனங்களைப் பற்றிய இயேசுவின் போதனைகள்" இயேசுவைப் பற்றி நான்கு படிப்பினைகளை ஆராய்கிறது. மேலும் அதற்குள்ளிருக்கும் முக்கியமான கொள்கைகளை கற்பிக்கின்றது. "இரக்கமான ஊழியக்காரன்", மன்னிப்பின் முக்கியத்துவத்தை காட்டுகிறது. "பத்து குஷ்டரோகிகள்", மனதார பாராட்டுதலையும், நன்றியுணர்வின் அவசியத்தையும் கற்பிக்கிறது. "நல்ல சமாரியன்", இரக்கம் மற்றும் பரிவை நாம் காட்டவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. ஏழை விதவையானவள் அவளுடைய இரண்டு காசுகளை கோவில் உண்டியலில் போட்டபொழுது, ஏராளமானவைகளிலிருந்து நன்கொடை அளித்த அனைவரையும் விட இவள் அதிகமாக கொடுத்ததாக இயேசு ஆழ்ந்த உணர்வுகளோடு கூறினார். இயேசு தம்முடைய வார்த்தைகளினால் மட்டும் அல்ல, அவருடைய தனிப்பட்ட தியாகம் மற்றும் பக்தியின் எடுத்துக்காட்டுகளின் வழியாகவும் கற்பித்தார். "மூன்று முக்கிய உவமைகள்", "ஐசுவரியவான் மற்றும் லாசர்", "கோதுமை மற்றும் களைகள்" மற்றும் "புத்தியுள்ள மற்றும் புத்தியற்ற கன்னிகைகள்" ஆகியவைகளுக்குள் இருக்கும் முக்கிய போதனைகளை ஆராய்கிறது.

நிக்கோதேமு, சமாரிய பெண், நூற்றுக்கு அதிபதி மற்றும் இயேசுவின் பாதங்களைக் கழுவிய பாவமுள்ள ஸ்திரீ ஆகியோரோடு இயேசுவின் நான்கு விவாதங்களைப் பற்றி "எஜமானரால் தொடப்படுதல்" என்ற தலைப்பு, மதிப்பாய்வுச் செய்கிறது.

மீட்கும் பொருளைப் புரிந்துகொள்வது எவ்வளவு பெரிய நம்பிக்கையை அளிக்கிறது என்பதையும், நம்முடைய நீதிமானாக்கப்பட்ட நிலை, தேவனோடு தனிப்பட்ட தொடர்பை பெற நமக்கு உதவுகிறது என்பதைக் குறித்து "கிறிஸ்துவுக்குள்ளான நம்முடைய நன்மைகள்" விவாதிக்கிறது. கூடுதலாக, "நம்முடைய சுதந்திரமாக" பரிசுத்த ஆவி நமக்கு வழங்கப்படுகிறது. ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தின் மேல் முழு நம்பிக்கை வைக்கவும், இரட்சிப்பின் விலையேறப் பெற்ற திட்டத்தில் ஒரு ஆழமான ஐக்கியத்தில் ஒரு பங்கைப் பெறுவதையும் பற்றி இப்போது நாம் புரிந்துக்கொள்ளலாம்.

ஒரு மனிதனாக இயேசுவின் இறுதி அனுபவங்களை "இயேசுவின் இறுதி நாட்கள்" விவரிக்கிறது. வெள்ளைக்கல் பரணியிலிருந்து அவருடைய பாதங்களை அபிஷேகித்த அந்த ஸ்திரீ அவருக்கு ஆறுதல் அளித்தாள். கால்களை "கழுவி", என்ற ஒரு முக்கியமான பாடத்தோடு, இயேசுவின் கடைசி பஸ்கா, சீஷர்களோடு ஒரு மதிப்புமிக்க ஞாபகார்த்தமாக இருந்தது. கெத்செமனேயில் இயேசுவின் வேதனைமிக்க ஜெபம், நம்முடைய சொந்த விருப்பங்களுக்கு மேலாக, தேவனுடைய சித்தத்தை விரும்புவதற்கான கடைசி எடுத்துக்காட்டாக இருந்தது.


**செப்டம்பர் / அக்டோபர் 2018, தொகுப்பு 100, எண் 5**

**இயேசுவின் வாழ்க்கை வரலாறு மற்றும் அவருடைய குணலட்சணங்கள்** - 2
கிறிஸ்துவின் வாழ்க்கை

**குணலட்சணங்கள் பற்றிய இயேசுவின் போதனைகள்** - 6
ஆழமான பாடங்கள்

**மூன்று முக்கியமான உவமைகள்** - 10
ஐசுவரியவான், கோதுமை மற்றும் களைகள், பத்து கன்னிகைகள்

**எஜமானால் தொடப்படுதல்** - 14
வாழ்க்கையை மாற்றும் இயேசுவோடு நான்கு சம்பாஷணைகள்

**கிறிஸ்துவுக்குள்ளாக நம்முடைய நன்மைகள்** - 21
கிறிஸ்துவின் வாழ்க்கை நமக்கு செய்த காரியங்கள்

**இயேசுவின் இறுதி நாட்கள்** - 25
இயேசுவினிடமிருந்து நம்முடைய பரம்பரைச் சொத்து

**இன்றைய தீர்க்கதரிசனம்** - 29
குடியேறுதலில் முரண்பாடு


இறுதியாக, கடைசி கட்டுரை, ஃப்ரெடரிக் ஃபார்ராரின் கிறிஸ்துவின் வாழ்க்கையிலிருந்து ஒரு அழகான பகுதியாகும். நம்முடைய கர்த்தரும் இரட்சகருமானவருடைய போதனைகளையும், முன்மாதிரியையும் சிந்திக்கையில், இந்த பிரதி ஆசீர்வாதமாக இருக்கும் என்று நாம் உண்மையாக நம்புகிறோம்.

**கிறிஸ்துவின் வாழ்க்கை**



# இயேசுவின் வாழ்க்கை வரலாறு மற்றும் அவருடைய குணலட்சணங்கள்

ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது."
(யோவான் 1:1)

*Joe Megacz*

கிறிஸ்துவின் (கிறிஸ்டோஸ் என்ற கிரேக்க வார்த்தைக்கு "அபிஷேகம்" செய்யப்பட்டவர் என்று பொருள்) வாழ்க்கை பற்றிய கதை, இயேசு முப்பது வயதில் ஞானஸ்நானம் பெற்று, ஜெநிப்பிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்பட்ட போது technically யோர்தானில் துவங்கியது. அந்த நொடியில் இயேசு, கிறிஸ்துவானார். இயேசு அபிஷேகிக்கப்பட்டார். ஆனால் உண்மையான அர்த்தத்தில், பெத்லகேமில் அவர் ஒரு குழந்தையாக பிறப்பதற்கு நீண்ட காலத்திற்கு முன், கிறிஸ்துவின் வாழ்க்கை தொடங்கியது. தேவன் தன்னந்தனியாக இருந்த போதும், அவருடைய சிருஷ்டிப்பின் வேலைகள் இன்னும் துவங்காததற்கு முன்னும், புரிந்துக ொள்ள முடியாத கடந்த காலத்திலேயே, கிறிஸ்துவின் வாழ்க்கையைப் பற்றிய கதை துவங்கியது.

### இயேசு மனிதனாக இருப்பதற்கு முன்னிருந்த இயல்பு

இயேசு மனிதனாக இருப்பதற்கு முன்னிருந்த நிலையைக் குறித்து நீதிமொழிகள் 8:22-30 பேசுகிறது. இந்த வார்த்தைகளை பேசும் நபரை, 12ம் வசனத்தில் "நான், ஞானம்" என்று இயேசு மனிதனாக வருவதற்கு முன்னிருந்த நிலையை (1கொரிந்தியர் 1:30) உருவகப்படுத்துகிறது. இந்த வசனம் சகல சிருஷ்டிப்புக்கும் துவக்கத்தில், உள்ள ஒரு முக்கிய உட்பார்வையை நமக்கு தருகிறது. அதாவது அவர் தேவனோடு நித்தியமாக (அதே அளவிலான வாழ்நாள்) இணைந்தவராக இராமல், அவருடைய எல்லா சிருஷ்டிப்புகளில் முதன்மையாக இருக்கிறார். ஆகவே, இயேசு தேவனாக இருக்க முடியாது. அந்த ஒரு துவக்கத்தின் போது, இயேசுவின் பெயர் இன்னும் இயேசுவுக்கு கொடுக்கப்படவில்லை. அவர் பூமியில் பிறந்தபோது அந்த பெயர் அவருக்கு வழங்கப்பட்டது.

இயேசுவின் ஆரம்ப பெயரையும், சிருஷ்டிப்பின் வேலையில் அவருடைய பங்கையும் பற்றி யோவான் 1:3ம் வசனம் நமக்கு கூறுகிறது. "சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை." முதலாம் வசனத்தில் "வார்த்தை" என்பதற்கு "லோகோஸ்" என்ற கிரேக்க வார்த்தைக்கு பொருள் "பிரதிநிதி" அல்லது "முகவர்" என்பதாகும்.

"அந்த வார்த்தை தேவனாக இருந்தது" என்று முதலாம் வசனத்தில் உள்ள வார்த்தை, நீதிமொழிகள் 8-க்கு முரணாக தோன்றுகிறது. ஏனெனில், இந்த வசனம் லோகோஸ் பிறப்பிக்கப்பட்டார் அல்லது தேவனால் சிருஷ்டிக்கப்பட்டார் என்று கூறுகிறது. இங்கு முரண்பாடாக காணப்படும் காரியத்திற்கு, கிரேக்க இலக்கணத்தின் ஒரு சிறிய அளவில் அறிவைக் கொண்டிருக்க வேண்டும். கிரேக்க மொழி பெயர்ச் சொற்களுக்கு முன்னால், "ஒரு" என்ற காலவரையற்ற கட்டுரையை வைக்கவில்லை. பெயர்ச்சொற்களுக்கு முன்பாக கிரேக்க மொழியில் "ஆ" "a" என்னும் வரையறாச் சுட்டுகச் சொல் வராது. ஆனால் பேச்சாளர் அல்லது எழுத்தாளர் அதை பயன்படுத்தும் போது, பெயர்ச் சொற்களுக்கு முன்னால் "இந்த, அந்த" என்ற வார்த்தைகளை கிரேக்க மொழியில் குறிப்பிடு கிறார்கள். ஆனால் கிரேக்க மொழி "தி" (the) என்னும் வரையறு சுட்டுச் சொல்லை, பேசுபவரோ எழுதுபவரோ அதை உபயோகிக்கும் போது, பெயர்ச்சொற்களுக்கு முன்பாக இணைக்கும். கிரேக்கில், "இந்த அல்லது அந்த", "ஹோ"( *ho*) என்பதாகும், ஆனால் அது மேலே ஒரு உச்சரிப்பின் அடையாளத்துடன ' "ஓ" ( *o*) என்று எழுதப்படுகிறது. கிரேக்கில், "தேவன்", என்ற வார்த்தைக்கு ஹோ தியோஸ் (*ho Theos*). "அந்த வார்த்தை தேவனாயிருந்தது" என்ற வாக்கியத்தில், திட்டவட்டமான article *ho* (ஹோ) காணப்படுவதில்லை. ஆகவே, "அந்த வார்த்தையும் தேவனாக இருந்தது" என்று யோவான் 1:1 ம் வசனம் வாசிக்கப்படவேண்டும். இதற்கு வலிமை வாய்ந்தது என்றும் ஆனால் அது தேவன் அல்ல என்றும் பொருள்படுகிறது.

மிக பெரிய கட்டிட கலைஞரான யெகோவா தேவனால், வடிவமைக்கப்பட்டபடி, இப்பிரபஞ்சத்தையும், அதன் குடிமக்களையும் சிருஷ்டிக்கக் கூடிய, சிருஷ்டிப்பின் வேலையில் லோகோஸ் ஒரு பொறுப்பாளராக பங்கு வகித்தார்.

### இயேசுவின் பிள்ளைப் பருவம்

இயேசுவின் பன்னிரண்டு வயதை நோக்கி நாம் நகரலாம். இதைக் குறித்து லூக்கா 2:40-52ல் வாசிக்கிறோம். "அவருடைய தாய் தகப்பன்மார் வருஷந்தோறும் பஸ்கா பண்டிகையில் எருசலேமுக்குப் போவார்கள். அவருக்குப் பன்னிரண்டு வயதானபோது, அவர்கள் அந்தப் பண்டிகை முறைமையின்படி எருசலேமுக்குப் போய்," (41,42)

"வருஷத்தில் மூன்றுதரம் புளிப்பில்லாத அப்பப்பண்டிகையிலும், வாரங்களின் பண்டிகையிலும், கூடாரப்பண்டிகையிலும், உன் ஆண்மக்கள் எல்லாரும் உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திலே, அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து காணப்படக்கடவர்கள்." என்று உபாகமம் 16:16 கூறுகிறது. யோசேப்பும், மரியாளும் மோசேயின் நியாயப்பிரமாணத்தை கடைபிடிப்பதில் மிகவும் கவனம் வைத்தவர்களாகவும், அதோடு முடிந்தவரையில் இயேசு உள்பட அவர்களுடைய பிள்ளைகளுக்கும் எபிரெய வரலாறு, கலாச்சாரம் ,

பொறுப்புகள் மற்றும் தேவனுடைய சட்டங்களை அவர்களின் ஆரம்ப வயது முதல் கற்பிக்க ஜாக்கிரதையுள்ளவர்களாக இருந்தார்கள் என்றும் லூக்காவிலுள்ள வசனங்கள் கூறுகிறது.

இன்று யூத குழந்தைகளின் வாழ்வில் பதிமூன்று வயது (பெண்களுக்கு பன்னிரண்டு) ஒரு முக்கிய மைல்கல்லாக கருதப்படுகிறது. அதற்குபின் அந்த பையன் "நியாயப்பிரமாணத்தின் புத்திரனாகிறான்" (எபிரெயு, பார் மிட்ஸ்வா) அதன் பிறகு அவன் தானே அந்த பிரமாணங்களை கடைபிடிப்பதற்கு பொறுப்புள்ளவனாகிறான். நம்முடைய ஆண்டவரின் முதல் வருகைக்கு பிறகு பல நூற்றாண்டுகளுக்குப்பின் பார் மிட்ஸ்வா விழாக்கள் நிறுவப்பட்டன என்றாலும், நியாயப்பிரமாணத்தின் கீழ் அவருடைய பொறுப்புகளை அவர் ஏற்றுக்கொண்டார் என்பதில் எந்த சந்தேகமில்லை. எனவே, நியாயப்பிரமாணத்தை தனக்கு கற்பிக்கக்கூடிய அறிஞர்களையும், பேராசிரியர்களையும் நாடுவதற்கு உந்தியது. வீடு திரும்பியபோது, அவர்களுடைய குமாரனை காணவில்லை என்று கண்டறிந்து பெற்றோர், மிகவும் வேதனையோடு, கடுமையாக மூன்று நாட்கள் தேடி கண்டுபிடித்தபின் இயேசு அவர்களுக்கு அளித்த பதில், "அதற்கு அவர்: நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா என்றார்." (லூக்கா 2:49) "நான் சுயமாக நியாயப்பிரமாணத்தை கடைபிடிக்கக் கூடிய ஒரு குமாரனாக செயல்படக்கூடிய வயது வரையிலும் நீங்கள் என்னை வளர்த்துவிட்டீர்கள். இந்த பிரமாணத்தை சிறந்த முறையில் கற்றுக்கொள்ளக்கூடிய இடத்தில் இருப்பேன் என்பதை நீங்கள் உணரவில்லையா ? " என்ற உணர்வுகளை அந்த சிறுவனுடைய பதில் வெளிப்படுத்தியிருக்கவேண்டும். ("என் பிதாவுக்குடுத்தவைகளில்" என்பதன் இன்னும் சிறப்பான மொழிபெயர்ப்பு - " என் பிதாவின் காரியங்களில்")

இதில் இரண்டு முக்கியமான பாடங்கள் உள்ளது. முதலாவது, பெற்றோரர்களாக இருப்பவர்கள், யோசேப்பு மற்றம் மரியாளுடைய முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும். அதோடு, நம் பிள்ளைகளுக்கு யுகங்களைப் பற்றிய தெய்வீக திட்டத்திலும், விசேஷமான தேவனுடைய நீதிநெறிகளுக்கான நியமங்களிலும் உள்ள அறிவிலும், பக்தியிலும் அவர்களை நடத்த வேண்டும். இரண்டாவதாக, இன்னும் இளம் வயதினரானவர்கள் இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றி, தேவனுடைய காரியங்களைப் பற்றிய நமது அறிவை விரிவாக்கக் கூடியவர்களோடு தொடர்புகொள்ள முயல வேண்டும்.

### இயேசுவின் ஞானஸ்நானம்

முப்பது வயதில், இயேசு ஒரு முதிர்ச்சியான மனுஷனாக, ஆசரிப்புக் கூடாரத்தில் அதற்குபின் ஆலயத்தில் சேவை செய்யவும் தகுதிப் பெற்ற ஒரு முக்கிய கட்டத்தை அடைந்தார். (எண்ணாகமம 4:1-3) இதை பற்றி மத்தேயு 3:13-17ம் வசனங்களில் காணலாம். தவறு செய்த இஸ்ரயேலர்கள் மனந்திரும்புதலுக்குரிய ஞானஸ்நானத்தை யோவான் ஸ்நானகன் கொடுத்துக் கொண்டிருந்தார். நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாமல், பாவம் செய்த உணர்வை ஞானஸ்நானம் நிரூபித்தது. மேலும் இது மனந்திரும்பியதையும், இன்னும் சிறப்பாக செயல்படவும், தேவனோடு இசைந்திருப்பதற்கான விருப்பத்தையும் வெளிப்படுத்துகிறது. இயேசு ஞானஸ்நானம் பெற வரும்போது, அவர் பரிபூரணமாக இருந்ததையும், அவர் பாவம் செய்யாததினால், அவர் பாவத்திற்கு மனம் வருந்தவேண்டிய அவசியமில்லாததை யோவான் நன்கு அறிந்திருந்ததினால், முதலில் அவர் மறுத்தார்.

யோவான் ஸ்நானகன் கொடுத்த மற்ற ஞானஸ்நானத்தைக் காட்டிலும் , இயேசுவின் ஞானஸ்நானம் முற்றிலும் வேறுப்பட்டது என்று இயேசுவின் மென்மையான வலியுறுத்தல் காட்டியது. (1) மற்றவர்களின் பாவத்திற்கு, தம்முடைய ஜீவனையே பலியாக கொடுப்பதற்கு, தன்னுடைய விருப்பத்தை தேவனுக்கு மனப்பூர்வமான தீர்மானத்தை இது காட்டியது. (2) அவரைப் பின்பற்றக் கூடியவர்களுக்கு, அர்ப்பணிப்புக்கான ஒரு அடையாளமாக தண்ணீர் ஞானஸ்நானம் நியமிக்கப் பட்டது. பாவத்திலிருந்து மனந்திரும்புதலுக்கான யோவானுடைய ஞானஸ்நானத்திற்கும் , பலியின் மரணத்திற்குள்ளான, இயேசுவின் ஞானஸ்நானத்திற்கும் உள்ள வேறுபாட்டை புரிந்துக்கொள்வது மிக அவசியம்.

### வனாந்திரத்தில் இயேசுவின் சோதனை

(1) "அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார். அவர் இரவும் பகலும் நாற்பதுநாள் உபவாசமாயிருந்தபின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று. அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து: நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான். அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்." (மத்தேயு 4:1-4) என்று நாம் வாசிக்கிறோம்.

ஆவிக்குரிய கிருபைகளையும், வல்லமைகளையும், தம்முடைய சொந்த லாபத்திற்கு பயன்படுத்தும்படியாக இயேசு சோதிக்கப்பட்டார். "நீர் பசியாயிருக்கிறீர், உம்முடைய மாம்ச பசியை திருப்திப்படுத்திக் கொள்ள, உம்முடைய வல்லமையை பயன்படுத்தி, இந்த கல்லுகளை அப்பமாகும்படி அற்புதம் செய்யும்." என்று சாத்தான் இயேசுவிடம் கூறியது. நமக்கு இந்த சோதனை எதிர் திசையிலிருந்து வருகிறது - உங்கள் ஆன்மீகத் தன்மையை எளிதாக்கிக் கொள்ளுங்கள், இல்லையெனில் நீங்கள் ஏற்கனவே அனுபவித்துள்ள சில மாமிச நலன்களையும் நன்மைகளையும் இழந்து விடுவீர்கள். பள்ளியில் புகழ், அண்டை மற்றும் சக தொழிலாளர்கள் மத்தியில் நீங்கள் ஒரு பெரிய மனிதராக மதிக்கப்படுதல் போன்றவைகள். இயேசுவின் திட்டமான பதிலை கவனியுங்கள். இதுவே எதிரிக்கு எதிரான போரை வெற்றி அடைய செய்யும் திறவுகோலாகும் . அவன் விடாமுயற்சியோடு மறுபடியும் முயலுவான். நாம் நம்முடைய மறுப்பை உறுதியுடன் எப்போதும் தெரிவிக்கவேண்டும். இயேசு தேவனுடைய குமாரன் என்பதை நிரூபிக்க இந்த சோதனையின் கீழ் சாத்தானுடைய ஒரு சவால் இருந்தது. மற்றொரு வார்த்தைகளில் சொல்லப்போனால், "நீர் தான் மேசியா என்பதை என்னிடம் நிரூபிக்கவேண்டும்." ஆனால்

சாத்தானிடம் இயேசு எதையும் நிரூபிக்கவேண்டிய அவசியம் இல்லை. அவர் பிதாவினிடம் மட்டுமே, தன்னை நிரூபிக்க வேண்டியதாக இருந்தது. நாமும் கூட இந்த உலகத்தால் சவாலிடப்படலாம். நம்முடைய பிதாவாகிய தேவனுக்கும், அவருடைய குமாரனுக்கும் நம்மை நிரூபித்துக் கொள்வதில் இருந்து திசைத்திருப்பப்படலாம். பிதாவையும், குமாரனையும் தவிர நம்முடைய அர்ப்பணிப்பை யாரிடமும் நிரூபிக்கவேண்டிய அவசியமில்லை.

(2) வனாந்திரத்தில் நடந்த இயேசுவின் இரண்டாவது சோதனை மத்தேயு 4:5-7ம் வசனங்களில் காணலாம் - "அப்பொழுது பிசாசு அவரைப் பரிசுத்த நகரத்திற்குக் கொண்டுபோய், தேவாலயத்து உப்பரிகையின்மேல் அவரை நிறுத்தி: நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்; ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக் கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது என்று சொன்னான். அதற்கு இயேசு: உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே என்றார்."

இது முதலாம் சோதனையை எதிரொலிக்கிறது. "நீர் தேவனுடைய குமாரனேயானால்" என்ற அதே சவால் இங்கும் காணப்படுகிறது. இந்த முறை பொதுவான ஜனங்களுக்கு முன் நிரூபிக்கவேண்டிய சவாலாக இருந்தது. "எல்லோரும் பார்க்கும்படி அல்லது கேட்கும்படி ஒரு பெரிய காட்சியை உருவாக்கு, அப்போது முழு தேசமே உம்மை மேசியாவாக அங்கீகரிப்பார்கள். இதை தானே நீர் விரும்புகிறீர் ?" முதல் சோதனையைப் போல இந்த சோதனையில் உள்ள இரண்டாவது ஒற்றுமை என்னவெனில், இயேசு தம் சொந்த நலனுக்காகவும் பாதுகாப்பிற்காகவும் அவருடைய வல்லமைகளை பயன்படுத்துவதற்கான ஆலோசனையாக இருந்தது. நம்முடைய செயல்கள் மற்றும் விருப்பமான தேர்வுகளுக்கு இசைவாக, தேவனை நாம் கட்டாயப்படுத்தக்கூடாது என்று இதிலிருந்து நாம் கற்றுக்கொள்கிறோம். நாம் விரும்பி வடிவமைத்ததை, தேவன் செயல்படுத்தும்படியான சூழ்நிலையை நாம் ஏற்படுத்தி விடக்கூடாது. நாம் தேவனை சோதிக்கக்கூடாது என்று மிக திறமையாக இயேசு பதில் அளித்தார். நம்முடைய வாழ்க்கையை வடிவமைக்காமல், நம்முடைய சித்தங்களை நிறைவேற்றாமல், தேவன் நமக்கு வகுத்த பாதையில் தாழ்மையுடன் நடக்க வேண்டும்.

(3) வனாந்திரத்தில் நடந்த இயேசுவின் மூன்றாவது சோதனை மத்தேயு 4:8-10ம் வசனத்தில் காணலாம் . "மறுபடியும், பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து: நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான். அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்."

இந்த முறை தேவனுடைய குமாரனாக இருப்பதை நிரூபிக்கும்படி சாத்தான் இயேசுவிடம் கேட்டுக்கொள்வதற்கு பதிலாக, இயேசுவின் நோக்கத்தை எளிதாக செயல்படுத்த அவனோடுகூட "ஒத்துழைக்க" ஒரு வாய்ப்பளித்தான். ஆனால் அதன் கிரயத்தின் நிமித்தம் அதை அவர் விலக்கினார். அதற்கு பதிலாக, இயேசுவோடு துணைபுரியவும், அவரின் பணியை இன்னும் எளிதாக நிறைவேற்றுவதற்காய அவர் ஒப்புக்கொடுத்தார், சரியான விளைவுகளை பெற, தவறான வழிகளை பயன்படுத்துவதே, இந்த விலைக்கிரயத்தின் சமரசமாக இருந்தது. தேவனை தவிர வேறு ஒருவரையும் இப்பிரபஞ்சத்தின் ஆட்சியாளராக வணங்கக் கூடாது என்று இயேசு அறிவித்தார். தேவன் நமக்கு ஏற்படுத்தின பாதையைப் பின்பற்ற வேண்டும், மாறாக நம்மால் முடிந்த வரையில் அதை எளிதாக்கிக்கொள்ள முயற்சிக்கக் கூடாது.

"உங்களுடைய வேலைகளை சுலபமாக்கிக் கொள்ள உங்கள் சக்திகளைப் பயன்படுத்துங்கள்" என்பதே சாத்தானின் சோதனைகளில் உள்ள பொதுவான கருத்தாகும். நீர் பசியாக இருந்தால், இந்த கல்லுகளை அப்பமாகும்படி செய்யும். நீங்கள் எதையாகிலும் பெறவேண்டுமானால், ஒரே இரவில் உங்களை அற்புதவிதமாக காப்பாற்றும்படி தேவனை கட்டாயப்படுத்துங்கள். நீர் இஸ்ரயேலுக்கு இராஜாவாக வேண்டும். என்னுடைய கிரயத்தை செலுத்தினால், நான் உனக்கு உதவி செய்வேன். அனைத்திற்கும் பொதுவாக, "எழுதியிருக்கிறபடி" என்று இயேசு பதில் அளித்தார். இயேசு தம் சொந்த வாதங்களை கொண்டு சாத்தானுடைய போதனைகளை சரிக்கு சரியாக வாதிடாமல் அதற்கு பதிலாக, அவர் நினைவில் வைத்திருந்த சரியான வசனங்களை தேர்ந்தெடுத்து, அவனுடைய தந்திரமான வழிகளை எதிர்த்தார்.

### இயேசுவின் முதல் அற்புதம்

இயேசு செய்த முதல் அற்புதத்தில் (யோவான் 2:1-11), கலிலேயாவிலுள்ள கானா ஊரில், ஒரு கலியாணத்தில் தண்ணீர் திராட்சரசமாக மாற்றப்பட்டதில், நாம் பல பாடங்களைக் கண்டிருக்கிறோம். முதலாவது, இயேசு ஒரு மதசார்பற்ற விழாவுக்கு சென்றார், நம்முடைய அர்ப்பணிக்கப்படாத குடும்பங்கள் மற்றும் நண்பர்களின் விழாக்கள் அதிகமாக உலகத்தை சார்ந்திராததினால், அவ்விழாக்களுக்கு செல்லுவதை நாம் தவிர்க்க வேண்டியதில்லை என்று இக்காரியம் கூறுகிறது. இயேசுவைப்போல சுத்தமனசாட்சியோடு, நாம் கலந்துக் கொள்ளலாம். இருப்பினும், நாம் கிறிஸ்தவ கண்ணியத்தையும் நடத்தையையும் காத்துக் கொள்ள வேண்டும்.

"திராட்சைரசம் இல்லை" என்று மரியாள் இயேசுவிடம் கூறியபோது, நான்காம் வசனத்தில் அவர் சொன்ன பதில் குறிப்பிடத்தக்கது. "ஸ்திரீயே, எனக்கும் உனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லை என்றார். "மேலோட்டமாக பார்க்கும் போது இது கடிந்துக் கொள்ளக் கூடியதும், அவமரியாதைக்குரிய வார்த்தைகள் போல தோன்றலாம். ஆனால் இந்த வார்த்தைகளில் காணப்படும் உள்ளுணர்வு என்னவெனில், "பிரியமான பெண்ணே, உங்களுக்கு கவலை வேண்டாம், சரியான நேரத்தில் பொருத்தமானதை நான் செய்வேன்." என்பதேயாகும். அந்நாளில், இயேசு தண்ணீரை சிறந்த ரசமாக மாற்றி,

உண்மையில் ஒரு பொருத்தமான காரியத்தை செய்தார்.

இதில் நாம் அடையாளமான அர்த்தத்தையும் காணலாம். இயேசு அந்த வீட்டு வேலைக்காரர்களிடம் பாத்திரங்களை (களிமண் பாத்திரங்களாக இருக்கக்கூடும்) சேகரித்து, அதில் தண்ணீர் நிரப்பும்படி கூறினார். நாம் காலியான மண்பாத்திரங்களை போலிருக்கிறோம். (2கொரிந்தியர் 4:7) நாம் தேவனுடைய திட்டத்தையும், அதில் நம்முடைய பங்கையும் முதலில் கேட்கும் போது, நாம் சத்தியமாகிய தண்ணீரினால் நிரப்பப்பட்டு, அதற்கு பின் இந்த உலகிற்கு மீட்பின் ரசம் கொடுப்பதற்கு ஆயத்தமாகிவிடுகிறோம்.

இறுதியான ஒரு கேள்வி, இயேசு ஏன் அற்புதங்களைச் செய்தார்? குறைந்தபட்சம் இரண்டு காரணங்கள் உள்ளது. (1) அற்புதங்களைப் பெறுபவர்களுடைய விசுவாசத்திற்கு பரிசளிக்கும்படியாக (எடுத்துக்காட்டாக, மாற்கு 5:34, இயேசுவின் வஸ்திர தொங்கலை தொட்ட அந்த ஸ்திரீ) இவர் தேவனுடைய குமாரன் என்றும், அவர் தேவனால் அனுப்பப்பட்டவர் என்றும் ஆதி சபை தேவன் மற்றும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தை உறுதிப்படுத்துவதற்கும் இது உதவியது. இதை தவிர அந்நாளில் மற்ற அனைத்து "அற்புதமான வேலைகளும்", சுகமளிப்பவர்களும், குறிசொல்லு பவர்களும் மோசடிக்காரர்களாக இருந்தார்கள்.

(2) முழு மனுக்குலமும் மரணத்திலிருந்து எழுப்பப்பட்டு, பரிபூரண நிலையை அடையும்போது, இராஜ்யத்திற்கு வரும் ஆசீர்வாதங்களை இது எடுத்துக்காட்டுகிறது. (யோவான் 5:28ம் வசனத்தை காண்க, பெதஸ்தா குளத்தில் ஒரு முடவனை இயேசு சொஸ்தப்படுத்திய பின், "இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம், பிரேதக குழியில் உள்ள அனைவரும் அவருடைய சத்தத்தை கேட்கும் காலம் வரும்" என்று அவர் கூறினார்.") இயேசு நூற்றுக்கணக்கான பேர்களை உயிரோடு எழுப்பியிருக்கலாம், ஆயிரக்கணக்கான பேர்களை அவர் குணப்படுத்தியிருக்கலாம், ஆனால் அவர் அப்படி செய்யவில்லை, ஏனெனில், மனுக்குலத்தின் உயிர்த்தெழுதலின் காலமாக அது இருக்கவில்லை.

நம்முடைய நன்மைக்காக அல்லது நமக்கு தேவைப்படுவதற்காக, அற்புதங்கள் செய்யப்பட வேண்டும் என்று நாம் எதிர்ப்பார்க்கக்கூடாது. நம்முடைய வாழ்வாதாரத்திற்கு எது, எப்போது தேவை என்பதை நம்முடைய ஆண்டவர் சரியாக தீர்மானிக்கிறார். இயேசு செய்த முதல் அற்புதத்தின் போது, அவருடைய தாயைப் பார்த்து, "நீங்கள் கவலைப் படாதீர்கள், சரியான நேரத்தில் பொருத்தமான காரியத்தை நான் செய்வேன்" என்று அவர் கூறியது போல, நாம் எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக இருக்கிறோம்!

"ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே... அவருக்குள் நடந்துகொள்வோம்." (கொலோசேயர் 2:6)



# குணலட்சணங்களைப் பற்றிய இயேசுவின் போதனைகள்

"உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்." (மத்தேயு 6:21)

நம்முடைய கர்த்தரின் வாழ்க்கையை நாம் ஆய்வு செய்யும் போது, முக்கியத்துவம் வாய்ந்த சத்தியத்தின் உபதேசங்களை அடிக்கடி, நாம் புரட்டிபார்ப்போம். ஈடுபலி மற்றும் பாவநிவாரணத்தை பற்றிய புரிந்துக்கொள்ளுதல், இரட்சிப்பின் அர்த்தத்தைப் பற்றிய அற்புதமான முன்னோக்கை அளிக்கிறது. மனுக்குலத்தின் உயிர்த்தெழுதல் மற்றும் பரிபூரண பூமியின் எதிர்பார்ப்பை பற்றி நாம் அறிந்துக்கொள்வதில் சந்தோஷம் அடைகிறோம். பரம அழைப்பு இன்னும் திறந்திருக்கிறது, இராஜ்யத்தின் வேலைகளில் பங்கு பெறுதலுக்கான நம்பிக்கை நமக்கு இன்னும் உள்ளான ஊக்கத்தை ஊட்டுகிறது. அவரோடு ஆட்சிபுரியும் வேலைகளுக்கு நம்மை தயாரிக்க உதவுகிறது, மேலும் இதற்கு நம்முடைய குணலட்சணங்களின் வளர்ச்சி மிக அவசியம் என்பதை இயேசு அறிந்திருக்கிறார். புது சிருஷ்டிகளாக வளர்ச்சி அடைவதற்கு மிக முக்கியமான பாடங்களை கொடுத்திருக்கிறார். இவைகளை கற்றுக்கொண்டு நாம் பயன்படுத்த வேண்டும்.

**மன்னிக்காத ஊழியக்காரன்**

எத்தனை முறை நாம் பாவத்தை மன்னிக்க வேண்டும் என்று பேதுரு இயேசுவிடம் கேட்ட போது, ஆண்டவர் ஒரு குறிப்பிட்ட உவமையைக் கொண்டு பதில் அளித்தார். (மத்தேயு 18 :23-35) "எப்படியெனில், பரலோகராஜ்யம் தன் ஊழியக்காரரிடத்தில் கணக்குப் பார்க்க வேண்டுமென்றிருந்த ஒரு இராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது." என்று அவர் துவங்கினார். பரலோக இராஜ்யத்தைப் பற்றிய உவமைகளைப் போலவே, இயேசு தம்முடைய ஜனங்கள் அனைவரும், இந்த யுகத்தில் மட்டும் அல்ல, வரக்கூடிய யுகத்திலும் வாழக்கூடிய ஒரு தெய்வீக கொள்கையை பகிர்ந்துக்கொள்கிறார். இந்த தனித்தன்மை, பின்வரும் பாடத்தில் வலியுறுத்தப்படுகிறது.

இராஜா தன் ஊழியக்காரருடைய கணக்கைப் பார்க்க தொடங்கினபோது, ஒருவனுக்கு அவர் ஒரு பெரிய தொகையாக 10,000 தாலந்துகள் கடனாக கொடுத்திருந்தார். 10,000 என்ற கிரேக்க வார்த்தைக்கு, "பல, எண்ணற்ற பல" என்று பொருள் (Strong's #3463).. "எண்ணற்ற தாலந்துகள், கிரேக்க கணிதக் குறியீட்டில் அறியப்பட்ட அதிகபட்ச எண்ணிக்கை" என்று ஆதாம் கிலார்க்கு கூறுகிறார். சிலர் இயேசுவின் வார்த்தைகளுக்கு ஒரு உண்மையான நாணய மதிப்பை கணக்கிட முயன்றனர். ஆனால் இராஜாவுக்குக் கொடுக்க வேண்டிய ஒரு குறிப்பிட்ட தொகையைக் குறிப்பிடுவதற்கு பதிலாக, திருப்பிச் செலுத்த முடியாத அளவுக்கு மிகப்பெரிய தொகை என்று இயேசு சுட்டிக்காட்டினார். பெரும் கடன்பட்டதினால், அந்தக் கடனை செலுத்துவதற்கு அவனோடு அவனுடைய மனைவியையும், அவனுடைய பிள்ளைகளையும் இராஜா விற்கவேண்டியதாக இருந்தது. இதை கேட்ட அந்த ஊழியக்காரன், " தாழ விழுந்து, வணங்கி - ஆண்டவனே, என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உனக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்றான். அந்த ஊழியக்காரனுடைய ஆண்டவன் மனதிரங்கி, அவனை விடுதலைபண்ணி, கடனையும் மன்னித்துவிட்டான்." (வசனம் 26,27)

பேதுரு தனது முதல் கேள்வியை கேட்டபோது, ஏழு தடவை மன்னித்தால் போதுமாக இருக்கும் என்று எண்ணினார். ஆனால், கணக்கிடுவதே தவறு என்று இயேசுவின் பதில் குறிப்பிட்டது. தேவன் கொடுக்கும் மன்னிப்புக்கு அளவே இல்லை. இந்த ஒரு மாதிரியை பேதுரு பின்பற்றவேண்டியதாக இருந்தது.

அந்த ஊழியக்காரன் இராஜாவின் சமூகத்தை விட்டு வெளியே வந்தபோது, அவனிடம் 100 தினாரி கடன்பட்ட ஒரு சக ஊழியக்காரனை கண்டு, தொண்டையை நெரித்து, அந்த கடனை திருப்பிச் செலுத்தும்படி கட்டாயப்படுத்தினான். ஒரு தினாரி என்பது வேலைக்காரர்களுக்கு ஒரு நாள் ஊதியமாக இருந்ததது. ஆகவே இந்த பணம் நாலு மாதங்கள் வேலைக்கான ஊதியத்திற்கு சமமாக இருந்தது. முதலாவது ஊழியக்காரன் இராஜாவிடம் வேண்டிக்கொண்டது போலவே, இரண்டாவது ஊழியக்காரனும் அவனிடம் மன்றாடினான். ஆனால் அந்த ஊழியக்காரன் அவனுக்கு செவிகொடுக்காமல், அந்த 100 தினாரிகளை அவன் செலுத்தும் வரையில், அவனை சிறையில் அடைத்தான்.

"நடந்ததை அவனுடைய உடன் வேலைக்காரர் கண்டு, மிகவும் துக்கப்பட்டு, ஆண்டவனிடத்தில் வந்து, நடந்ததையெல்லாம் அறிவித்தார்கள். அப்பொழுது, அவனுடைய ஆண்டவன் அவனை அழைப்பித்து - பொல்லாத ஊழியக்காரனே, நீ என்னை வேண்டிக்கொண்டபடியினால் அந்தக் கடன் முழுவதையும் உனக்கு மன்னித்துவிட்டேன். நான் உனக்கு இரங்கினது போல, நீயும் உன் உடன்வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ ...."(31-33)

முதலாவது வேலைக்காரன் இந்த குறிப்பை எப்படி தவறவிட்டான் ? தீர்க்க முடியாத கடனுக்கு மன்னிப்பை பெற்று அனுபவத்தை வாங்கின பின் அவனால் எப்படி இரக்கம் காட்டாமல் இருக்க முடிந்தது ?அவனுக்கு மன்னிக்கப்பட்ட கடனின் அளவை அவன் புரிந்துக்கொள்ளாமல் இருந்திருக்க வேண்டும் என்ற ஒரு நியாயமான முடிவுக்கு வரலாம். இராஜா மிகவும் தாராள குணமுள்ளவர் என்பதை அவன் உணர்ந்திருக்கலாம். ஆனால் அதே தவறை அவன் செய்யாமல், தனக்கு நியாயமாக சேரவேண்டியதை அவன்

பெற்றுக்கொள்ளவேண்டும் என்று தீர்மானித்தான்.

அவனுடைய நியாயங்கள் எதுவாக இருந்தாலும் சரி, அவன் மிகப் பெரிய தவறு செய்தான். அவனுடைய இரக்கமற்ற செயலுக்கு, மிகுதியாக செலுத்த வேண்டியதாக இருந்தது. "அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான்." (வசனம் 34) எவ்வளவு துரதிஷ்டம், அவனது கடன் மிக அதிகமாக இருந்ததினால் அவனால் மீண்டும் ஒருபோதும் விடுவிக்கப்பட முடியாது. "நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்" (35) என்று கூறி இயேசு இந்த பாடத்திற்கு விளக்கம் அளித்தார்.

மன்னிப்பு வழங்குவதற்கு வரம்புகள் உண்டு என்று எண்ணின பேதுருவை இயேசுவின் வார்த்தைகள் தடுமாறச் செய்தது. பேதுருவோடு கூட, நாமும் திருப்பி கொடுக்க முடியாத கடன்களிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறோம். நம்முடைய பாவங்களுக்காக நம்முடைய ஆண்டவரின் பலி செலுத்தப்பட்டது. உண்மையில் இதனுடைய புரிந்துக்கொள்ளுதல் நம்மை மாற்ற வேண்டும். மற்றவர்கள் நமக்கெதிராக பாவம் செய்யும்போது, நாம் மன்னிக்கப்பட்டதை நம்முடைய அறிவு நமக்கு நினைப்பூட்ட வேண்டும். மாம்சம் தனது நியாயமான கோரிக்கைளை வைத்தாலும், தேவனுடைய இரக்கங்களைப் பற்றிய நம்முடைய புரிந்துக்கொள்ளுதல், நமக்குள் மன்னிக்கக்கூடிய இருதயத்தை உருவாக்க வேண்டும். தேவனுடைய இரக்கத்தின் ஆழத்தை நாம் சிந்தித்துப் பார்க்கையில், முதலில் நாம் பெற்ற இரக்கத்தையும், கருணையையும் திரும்ப செலுத்துவதே நம்முடைய இலக்காக இருக்கவேண்டும். ஒரு உபதேசம் எவ்வாறு ஒரு குணலட்சணத்தை உருவாக்க வேண்டும் என்பதை இந்த உவமையிலிருந்து நாம் புரிந்துக்கொள்கிறோம். ஈடுபலி என்பது ஒரு அடிப்படையான உபதேசம். அத்தகைய தியாகத்தை தூண்டக்கூடிய குணம் அன்பே. உபதேசத்தின் உண்மைகளை புரிந்துக்கொள்வது போதாது. அதை அடிப்படையாகக் கொண்டிருக்கும் கொள்கைகளை நாம் புரிந்துக்கொண்டு, உபயோகிக்க வேண்டும்.

**குணமடைந்த பத்து குஷ்டரோகிகள்**

குஷ்டரோகத்தால் பாதிக்கப்பட்ட பத்து மனிதர்களை இயேசு குணப்படுத்தியபோது, அவர் கற்பித்த ஒரு பாடம் நமக்கு மற்றொரு உதாரணம். (லூக்கா 17:11-19) எருசலேமுக்கு செல்லும் வழியில், இயேசு ஒரு குறிப்பிட்ட கிராமத்தை கடந்து செல்லுகையில், தூரத்திலிருந்து பத்து குஷ்டரோகிகள் அவரை நோக்கி, "இயேசு ஐயரே, எங்களுக்கு இரங்கும்" என்று சத்தமிட்டார்கள். அவர்களை அவர் பார்த்து - நீங்கள் போய், ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் என்றார். அந்தப்படி அவர்கள் போகையில் சுத்தமானார்கள். அவர்களில் ஒருவன் தான் ஆரோக்கியமானதைக் கண்டு, திரும்பிவந்து, உரத்த சத்தத்தோடே தேவனை மகிமைப்படுத்தி, அவருடைய பாதத்தருகே முகங்குப்புற விழுந்து, அவருக்கு ஸ்தோத்திரஞ்செலுத்தினான், அவன் சமாரியனாயிருந்தான். (14-16)

அந்த பத்து மனுஷரும், ஆசாரியனிடம் தங்களை காண்பிப்பதற்கு செல்லும் போது குணமடைந்தார்கள். குணமடைவதற்கு முன்னே, இவர்கள் இயேசுவின் கட்டளைகளுக்கு கீழ்படிந்தது மிக சுவாரஸ்யமாக உள்ளது. அவர்களின் கீழ்படிதலில், ஒரு அளவான விசுவாசத்தை செயலாற்றினார்கள். ஒரு ஆசாரியன் மட்டுமே குஷ்டரோகத்தை சுத்திகரிக்கவும், சுத்திகரிக்கப்பட்டவரை சமுதாயத்திற்கு திரும்ப அனுமதிக்கவும் முடியும் என்ற மோசேயின் சட்டத்திற்கு இணங்க, ஆண்டவருடைய கட்டளைகள் இருப்பதை அவர்கள் அறிந்திருக்கலாம். (லேவியராகமம் 14:2) எனினும், இந்த கொடூரமான, பலவீனமான நோயிலிருந்து குணமடைந்த பத்து நபர்களில் ஒரு சமாரியன் மட்டுமே அவருடைய இருதயப் பூர்வமான பாராட்டுகளை வெளிப்படுத்தினார். இது இயேசுவுக்கு ஆச்சரியமூட்டியது. "சுத்தமானவர்கள் பத்துப்பேர் அல்லவா, மற்ற ஒன்பதுபேர் எங்கே ? தேவனை மகிமைப்படுத்துகிறதற்கும், இந்த அந்நியனே ஒழிய மற்றொருவனும் திரும்பிவரக்காணோமே என்று சொல்லி, அவனை நோக்கி, நீ எழுந்துபோ, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார்." (வசனம் 17-19)

நன்றி சொல்லவும், தேவனை மகிமைப் படுத்தவும், அந்த ஒன்பது பேர் ஏன் வரவில்லை ? அவர்களின் சிந்தனையைப் பற்றி நமக்கு சொல்லப்படவில்லை. கடந்த உவமையில் அந்த நன்றி அறியாத ஊழியக்காரனைப் பற்றி பார்த்ததுபோல, இவர்களுக்கும் அதே மனநிலை இருந்திருக்கலாம். அவர்களுக்கு செய்யப்பட்ட காரியம் இன்னதென்பதை அவர்கள் முழுமையாக புரிந்துக்கொள்ள இயலாதவர்களாக இருக்கக்கூடுமா ? அல்லது அவர்கள் இயேசுவுக்கு வெறுமனே கீழ்ப்படிந்து, சமுதாயத்திற்கு திரும்புவதற்கான மகிழ்ச்சியை எதிர்பார்க்கிறார்களா ? நாம் அவர்களின் சிந்தைகளை ஊகிக்க மட்டுமே முடியும். ஆனால் இந்த ஒரு மனுஷனுக்கு செய்ய வேண்டியதற்கு ஒரு முக்கியமான காரியம் இருந்தது. அத்தகைய பரிசுக்கு அவர் நன்றி சொல்ல வேண்டும். மற்றும் ஒரு சிறப்பம்சமிக்க ஒரு பாடம் இங்கு காண்பிக்கப்படுகிறது.

நன்றியுணர்வு, தேவைப்படும் ஒரு குணாதிசயம். ஏனெனில், இது ஒரு சரியான மனநிலையை குறிப்பிடுகிறது. வெறுமனே நன்றியுணர்வு போதாது, இருதய உணர்ச்சிகள் சரியாக வெளிப்படுத்தப் படவேண்டும். சில நேரங்களில் வார்த்தைகளினாலும், சில நேரங்களில் கிரியைகளினாலும் சரியாக வெளிப்படுத்தவேண்டும். ஆழ்ந்த இருதயத்தின் உந்துதலினால் செய்யப்படும் வேலைகள் தேவனால் பொக்கிஷமாக காக்கப்படுகிறது. "நீ எழுந்து போ உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்று இயேசு அந்த சமாரியனை பார்த்து சொன்னபோது, மற்றவர்களை விட இவர் உயர்த்தப்பட்டார் என்பதை இது குறிப்பிடுகிறது. அவர்களும் குணமடைந்தார்கள், ஆனால் இந்த மனுஷன் இரட்சிக்கப்பட்டான். அவனுடைய விசுவாசம் அவனை இரட்சித்தது என்று கிரேக்கில் பொருள்படுகிறது. மற்றவர்கள் இயல்பான வாழ்க்கைக்கு திரும்பியிருப்பார்கள். ஆனால், சமாரியன் தேவனை மகிமைப்படுத்தி, இயேசுவின் பாதத்தில் விழுந்து வணங்கியதால், அதிகமாக ஆசீர்வதிக்

கப்பட்டார். அந்த சமாரியன் இயேசுவின் அற்புதத்தின் முழு தாக்கத்தையும் தெளிவாக புரிந்துக்கொண்டார். மீண்டுமாக, புரிந்துக்கொள்ளுதல், எவ்வாறு குணலட்சணத்தை உருவாக்குகிறது என்பதை பார்க்கிறோம்.

**நல்ல சமாரியன்**

நியாய சாஸ்திரீ ஒருவன் எழுந்திருந்து, அவரைச் சோதிக்கும்படி - போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கு நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர் நியாயப்பிரமாணத்தில் என்ன எழுதியிருக்கிறது ? நீ வாசித்திருக்கிறது என்ன என்றார். அவன் பிரதியுத்தரமாக - உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச் சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று எழுதியிருக்கிறது என்றான். அவர் அவனை நோக்கி - நிதானமாய் உத்தரவு சொன்னாய் - அப்படியே செய் என்றார். அப்பொழுது அவன் இயேசுவுக்கு சவாலாக, "யார் என் பிறன் ? " என்று கேட்டான். அப்போது இயேசு நல்ல சமாரியனைப் பற்றிய உவமையை கூறி, இந்த கேள்விக்கான விடையை கூறினார்.

ஒரு மனுஷன் திருடப்பட்டு, வஸ்திரங்கள் உரியப் பட்டு, காயப்படுத்தப்பட்டு, குற்றுயிராக விடப்பட்டதாக இந்த உவமை விவரிக்கிறது. அவன் சாலையின் ஓரமாக கிடந்தான். ஒரு ஆசாரியன், அதற்குபின் ஒரு லேவியன் அந்த மனுஷனுக்கு விலகி சென்றார்கள். அந்த வழியாக வந்த ஒரு சமாரியன் அந்த மனுஷனை கண்டு அவன் மேல் மனதுருகினார். அவர் தன் வாகனத்தின் மேல் ஏற்றி, ஒரு சத்திரத்திற்கு கொண்டுவந்து, அவனை பராமரிக்கும்படிக்கு அந்த சத்திரக்காரனிடம் இரண்டு காசுகளை கொடுத்தார். (லூக்கா 10:25-37) இவனுக்கு அதிகமாய் ஏதாகிலும் செலவழித்தால், நான் திரும்பி வரும்போது அதை உனக்குத் தருவேன் என்றும் அவர் கூறினார்.

"இப்படியிருக்க, கள்ளர்கையில் அகப் பட்டவனுக்கு இந்த மூன்று பேரில் எவன் பிறனாயிருந்தான்? உனக்கு எப்படித் தோன்றுகிறது என்றார். அதற்கு அவன் அவனுக்கு இரக்கஞ்செய்தவனே என்றான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி - நீயும் போய் அந்தப்படியே செய் என்றார்." (வசனம் 36,37)

நியாயசாஸ்திரீ பாடத்தை புரிந்துக்கொண்டார். நம் அருகில் இருக்கும் அண்டைக்காரர்கள் மட்டும் அல்ல, சூழ்நிலைகள் ஏற்புடையதாக இருக்கும்போது, நாம் சக மனிதருக்கு உதவக்கூடிய ஒரு உயர்வான பொறுப்புகளை பெற்றிருக்கிறோம். அந்த ஆசாரியன் மற்றும் லேவியர் இருவருமே, ஆலயத்தில் பணிபுரிய எருசலேமுக்கு சென்று கொண்டிருந்திருக்கலாம். இது ஒரு முக்கியமான கடமை. ஆயினும், அவர்களது கடமை ஆலயத்திற்கு வருமுன் துவங்கியது. காயமடைந்த மனுஷனுக்கு உதவுவதற்கு கடமைப்பட்டிருந்தனர்.

இரக்கம் மற்றும் கருணையின் முக்கியத்துவத்தை இயேசு மீண்டும் வலியுறுத்தினார். இது அன்பான இருதயத்தின் வெளிப்புறமான வெளிப்பாடாகும். "மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" (லூக்கா 6:31) என்ற பொன்னான பிரமாணத்தின் உண்மையின் படி அந்த சமாரியன் வாழ்ந்து வந்தார். தேவனுக்கு பணிபுரிவதாக நினைத்த ஆசாரியனும், லேவியனும் அந்த மனிதனுக்கு உதவி செய்வதை தவிர்த்து, மிக முக்கியமான சிலாக்கியத்தை இழந்தார்கள். மற்றவர்களுக்கு உதவியையும், ஆசீர் அளிப்பதன் மூலமே தேவனுக்கு நாம் செய்யும் பெரும்பாலான கடமைகள் நிறைவடைகிறது.

மனத்தாழ்மை மற்றும் சுய-தியாகம் என்ற பாடத்தையும், சமாரியனால் செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. காயமடைந்த மனிதருக்கு உதவ தனது சொந்த திட்டங்களை மாற்றுவதில் ஏற்படும் சிரமத்தை அவர் ஏற்றுக்கொண்டு, தனது பணத்தையும் செலவழிக்கத் தயாராக இருந்தார். ஆசாரியரோ அல்லது லேவியரோ, எந்த விதமான மேன்மையும் இல்லை. அவர் தன்னை தாழ்த்தி மற்றவர்களின் தேவைகளுக்காக பலிசெலுத்தினார். ஒரு அந்நியனின் முழு நலனுக்காக அவர் செயல்படத் தயாராக இருப்பதே போதுமானதாக இருந்தது. எனவே, மீண்டுமாக ஒரு எளிய கதையின் மூலம் இயேசு குணலட்சணத்திற்கான பாடங்களை வெளிப்படுத்தினார்.

**விதவையால் இயன்றது அல்லது சிறியகொடை**

இயேசு காணிக்கைப் பெட்டிக்கு எதிராக உட்கார்ந்து, ஜனங்கள் காணிக்கைப் பெட்டியில் பணம் போடுகிறதைப் பார்த்துக் கொண்டிருந்தார், ஐசுவரியவான்கள் அநேகர் அதிகமாய்ப் போட்டார்கள். ஏழையான ஒரு விதவையும் வந்து, ஒரு துட்டுக்குச் சரியான இரண்டு காசைப் போட்டாள். (மாற்கு 12:41-43) அக்காலத்தில் ஒரு காசு என்பது ஒரு சிறிய தாமிர நாணயமாக இருந்தது. ஆனால், "காணிக்கைப் பெட்டியில் பணம் போட்ட மற்றெல்லாரைப் பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய்ப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." என்று இயேசு கூறினார். ஐசுவரியவான்கள் காணிக்கைச் செலுத்துவதைக் குறித்து தவறாகவோ, பாவமாகவோ இயேசு குறிப்பிடவில்லை. ஆனால், ஜீவ பலிக்குரிய *மதிப்பை அவர் குறிப்பிட்டார். அந்த ஸ்திரீ ஏழையாகவும்,* விதவையாகவும் இருந்தாள். ஆயினும் அவள் தன்னால் இயன்றதை கொடுத்தாள். அதை அவள் தாழ்மையோடும், அமைதியோடும், மற்றவர்கள் அதைக் காணாதபடிக்கும் கொடுத்தாள்.

"நம்முடைய தாலந்துகள் எவ்வளவு சிறியதாக இருந்தாலும் சரி, எவ்வளவு குறைவாக இருந்தாலும் சரி அல்லது ஊழியத்திற்கான நம்முடைய வாய்ப்புகள் வரையறுக்கப்பட்டதாக இருந்தாலும் சரி, நம்முடைய பலிகள் அசட்டைபண்ணப்படுவதில்லை ஆனால் அவர்களின் பலியின் உண்மையான ஆவிக்கு ஏற்றவாறு பலனளிக்கப்படுகிறது " என்று சகோதரர் ரசல் இந்த வேத பகுதியைப் பற்றி கருத்துரைக்கிறார் (R3863:6). சிறிய காணிக்கைகளுக்கும் நம்முடைய பரலோகத் தகப்பன் எவ்வளவு மதிப்பு கொடுக்கிறார் பாருங்கள். அவைகளுக்கு பின்னிருக்கும் உண்மையான உற்சாகத்தை பார்த்து, அவர் மதிப்பிடுகிறார். தேவன் மேல் உள்ள உண்மையான பக்தி, ஜீவ பலியின் வழியாக வெளிப்படும். விதவையின் சிறிய அளவிலான காணிக்கை, நன்றியுணர்வால் பிறந்தது. நன்றியுள்ள

இருதயம் கிறிஸ்தவ குணத்தின் ஒரு முக்கிய அம்சமாகும்.

### அவர் மாதிரிகளின் வழியாக கற்பித்தார்

இயேசு கற்பித்த பாடங்கள், நம்முடைய வளர்ச்சிக்கும், புரிந்துக்கொள்ளுதலுக்கும் இன்றியமையாததாக இருக்கிறது. ஆனால், அவர் படிப்பினைகளைவிட அதிகமானவைகளை விட்டுச் சென்றிருக்கிறார். அவர் தேவனை போன்று ஒரு வாழ்க்கையை வாழ்ந்து நமக்கொரு மாதிரியை விட்டுச்சென்றார். தேவன் போல் குணலட்சணங்கள் உடைய , வாழும் உதாரணத்தை அவர் விட்டுச் சென்றார். "ஆதலால் கிறிஸ்துவுக்குள் யாதொரு ஆறுதலும், அன்பினாலே யாதொரு தேறுதலும், ஆவியின் யாதொரு ஐக்கியமும், யாதொரு உருக்கமான பட்சமும் இரக்கங்களும் உண்டானால், நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். ஒன்றையும் வாதினாலாவது, வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவா்னாக. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்." என்று அவர் கூறினார். (பிலிப்பியர் 2:1-8)

அன்பு, மனத்தாழ்மை, கீழ்ப்படிதல், சுய தியாகம், ஆகியவற்றால் தூண்டப்பட்ட இரக்கத்தை இயேசு நமக்கு பரம்பரைச் சொத்தாக விட்டுச் சென்றார். மனுக்குலத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நம்மை ஆயத்தப்படுத்தும் படியாக, நமக்கு தேவையான போதனைகள், வளர்ச்சி, ஆவிக்குரிய செழுமை மற்றும் இன்னும் அதிகமானவைகளை அவர் நமக்களித்திருக்கிறார்.

### ஐசுவரியவான், கோதுமை மற்றும் களைகள்

# மூன்று முக்கிய உவமைகள்



"உவமைகளினாலேயன்றி அவர்களுக்கு ஒன்றும் சொல்லவில்லை; அவர் தம்முடைய சீஷரோடே தனித்திருக்கும் போது, அவர்களுக்கு எல்லாவற்றையும் விவரித்துச் சொன்னார்." (மாற்கு 4:34)

*Nathan Austin*

நம்முடைய ஆண்டவரின் போதனைகள் மற்றும் அவருடைய அப்போஸ்தலர்களின் எழுத்துக்களினனால் நமக்கு அளிக்கப்பட்ட அனைத்தும் மிக முக்கியமானது. பல்வேறு பாடங்கள் மற்றும் உவமைகளை ஒப்பிடுவது, நம் குழந்தைகளை ஒப்பிடுவது போலுள்ளது. நாம் அனைவரையும் நேசிக்கிறோம், ஒரு குழந்தை மற்றொரு குழந்தையைவிட அதிகமாக மதிப்பிடப் படுவதில்லை. எனவே, ஒன்றைக் காட்டிலும் மற்றொன்று எந்தவிதத்திலும் முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல என்று கூறி, நம் ஆண்டவர் கொடுத்த மூ ன்று உவமைகளின் மேல் நாம் கவனம் செலுத்துகிறோம். இருப்பினும், ஒவ்வொரு உவமையும் வல்லமையுள்ள படிப்பினைகளை அளிக்கின்றது, மேலும் இந்த பாடங்கள் நன்கு புரிந்து கொள்ளப்பட்டு, நன்கு தெரிந்திருந்தாலும் கூட இவைகளைக் குறித்து சிந்திப்பது நல்லது.

ஐசவரியவான் மற்றும் லாசரு (லூக்கா 16:19-31), கோதுமை மற்றும் களைகள் (மத்தேயு 13:24-43) மற்றும் புத்தியுள்ள மற்றும் புத்தியில்லாத கன்னிகைகள் (மத்தேயு 25:1-13) உவமைகளைக் கவனிக்கலாம். இவை அவற்றின் பயன்பாடுகளில் மாறபாட்டிருந்தாலும், ஒவ்வொன்றும் சபை வகுப்பாரின் வளர்ச்சியைப் பற்றி நன்கு புரிந்து கொள்ள நமது கண்களை திறக்கச் செய்கிறது. மேலும் கடைசிக் காலத்தில் அதின் தாக்கத்தைக் காணும்போது அதின் முக்கியத்துவமும் வளர்ந்து வருகிறது.

**ஐசுரியவான் மற்றும் லாசரு**

(அ) பெரும்பாலான உவமைகளை, சொல்லர்த்தமாக படிப்பதற்கு, அதிகமாக ஈர்க்கிறது. மற்றும் (ஆ) முறையான விளக்கம் இன்றி, முரண்பட்ட விளக்கங்களை ஒத்திசைவாக காண்பிப்பதற்கு முயற்சிக்கும் படியாக, உருமாற்றங்களைத் தவறாகப் பயன்படுத்துவதற்கும் சாத்தியம் உள்ளது. ஆகிய இவ்விரண்டுமே ஐசுவரியவான் மற்றும் லாசரு போன்ற உவமைக்கு சவாலாக அமைகிறது.

நம்முடைய கிறிஸ்தவ நண்பர்களில் பலர் அதை வாசித்து, உடனடியாக நரகத்தின் நித்திய வேதனையைப் பற்றிய அவர்களுடைய கருத்தை நியாயப்படுத்தும் விதமாக, உக்கிரமான வேதனையைப் துரிதமாக பற்றி கொள்ளலாம் . கூடுதலாக, இவ்விருவருக்கும் இடையில் இணைக்கப்பட முடியாத வெற்றிடத்தை வைத்து, ஆபிரகாமின் மடியில் எடுத்து செல்லப்படுவது, "பரலோகம்" என்ற கருத்துடன் பொருத்தலாம். "மற்ற எந்த உவமைகளில், சொல்லப்பட்ட வார்த்தைகள் இந்த அளவுக்கு சொல்லர்த்தமாக புரிந்துக்கொள்ளப்படுகிறது ?" என்று நாம் அவர்களிடம் கேட்க்கலாம் . கோதுமை மற்றும் களைகள் பற்றிய உவமை சொல்லர்த்தமான அறுவடையைப் பற்றியதா ? விலையேறப் பெற்ற முத்து, உண்மையான முத்தைப் பற்றியதா ? உண்மையில் இயேசு சொல்லர்த்தமாக கனிக்கொடுக்காத அத்திமரத்தைப் பற்றி பேசினாரா ? வேறு எந்த சூழ்நிலையிலும் நம்முடைய ஆண்டவர் அவர் சொல்வதை சரியாக அர்த்தப்படுத்தியிருந்தால், நிச்சயமாக இந்த உவமையிலும் அத்தகைய வழியை பயன்படுத்துவது சரியே.

இயேசு பரிசேயர்களிடம் பேசிக்கொண்டிருப்பதாக லூக்கா 16: 14,15ம் வசனங்கள் காட்டுகிறது. அத்தகைய சந்தர்ப்பங்களில் இயேசு உபதேசிக்கும் போது, அவர் உவமைகளைப் பயன்படுத்தினார். "உவமைகளினாலேயன்றி அவர்களுக்கு ஒன்றும் சொல்லவில்லை" (மாற்கு 4:34) இங்கும் இயேசு ஒரு உவமையை பயன்படுத்தினார் என்பது குறிப்பிடப் படுகிறது. இந்த பகுதி, நிச்சயமாக ஒரு உவமை என்பதை இதைப் பற்றிய விளக்கவுரைகள் துல்லியமாக காட்டுகிறது. கூடுதலாக, "மோசே மற்றும் தீர்க்கதரிசிகள்" (வசனம் 29) அந்த ஐசுவரியவானின் ஐந்து சகோதரர்கள் என்று இயேசு குறிப்பிடுகிறார். நாம உவமையின் சரியான விளக்கத்தை தேடுகையில், இது மிக உதவியாக இருக்கும். அந்த ஏழை மனிதம் புறஜாதிகளையும், ஐசுவரியவான் இஸ்ரயேலையும் அடையாளப்படுத்துவதாக நாம் ஒரு முறை ஏற்றுக்கொண்டால், உருவகங்களின் விளக்கம் தெளிவாகிறது. இந்த கதையின் புதுமையான பல அம்சங்களை குறிப்பிடுவதே இந்த விளக்கத்தின் வலிமையாகும்.

**இந்த உவமையின் புதுமையான அம்சங்கள்**

புதுமையான அம்சம் - 1: லாசருவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. வேறு எந்த உவமையிலும் இயேசு எந்தவொரு பெயரையும் குறிப்பிடவில்லை. ஆயினும், இந்த விஷயத்தில், நம்பத்தகுந்த ஆதாரங்களை முன்னறிவித்தாலும், நம்புவதற்கு இஸ்ரயேல் தயக்கம் காட்டியது. ஏழை மனிதருக்கு லாசரு என்ற பெயரைக் கொடுத்தபோது, அவர்களின் அவநம்பிக்கை இன்னும் வலுவடைந்தது. நிகழ்வுகளை சரியான நேரத்திற்குள் பொருத்துவது கடினமாக உள்ளது, ஆனால் இந்த உவமை லாசருவை எழுப்புவதற்கு ஒரு வாரம் அல்லது இரண்டு வாரத்திற்கு முன் கூறியிருக்கவேண்டும் என தோன்றுகிறது!

புதுமையான அம்சம் - 2: எந்த பாவமும் செய்யாத ஐசுவரியவான், செல்வந்தராக இருந்ததினால் மட்டுமே தண்டிக்கப்படுகிறார்! அவர் பணக்காரராக இருப்பதால் மட்டுமே பாவியானார் என்ற முடிவுக்கு நாம் வருவோமேயானால், அவர் அனுகூலமற்ற நிலைக்கு தள்ளப்பட்டதன் நியாயமான காரணங்களைத் தேட வேண்டும். மரணத்தின் நிலைப்பாட்டிலிருந்து நாம் இதை பார்த்தால், யுகத்தின் ஒரு மாற்றத்தை

குறிப்பிடுகிறதாக உள்ளது. அந்த ஐசுவரியவான் முன்பு தேவனுடைய இரக்கம் பெற்றிருந்தார், பின்பு அந்த இரக்கம் நிறுத்தப்பட்டது.

அந்த ஐசுவரியவான் இஸ்ரேயல் தேசத்தை அடையாளப்படுத்துகிறார் என்று நாம் கருதினால், சில விளக்கங்கள் சில இடங்களில் சரியாக பொருந்துகிறது. எடுத்துக்காட்டாக, இஸ்ரயேல் தேசம் தேவனுடைய வாக்குத்தத்தங்களினால் நிறைந்திருந்தது. அவருடைய விலையேறப்பெற்ற வஸ்திரம் , நீதியின் அடையாளம் - தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட ஜனங்கள், நியாயப்பிரமாணத்தை கடைப்பிடிப்பதன் மூலம் நீதிமான்களாக எண்ணப்பட்டதை எவ்வளவு அற்புதமாக சித்தரிக்கிறது. மேலும், அவர்கள் தேவனுடைய இரக்கத்தினிமித்தம் உயர்ந்த பதவியில் இருந்ததினால், இரத்தாம்பரம் இராஜரீகத்திற்கு அடையாளமாக இருக்கிறது. இந்த ஆடம்பரம் மற்றும் ஆசீர்வாதங்கள் இருந்தபோதிலும், அவர்கள் தேவனுடைய கிருபையிலிருந்து விலகினார்கள், அவர்களுக்கு பதிலாக புறஜாதிகள் இடம் பெற்றார்கள்.

புதுமையான அம்சம் - 3 : அக்கினியான நரகம், வேதப்பூர்வமற்றது என்று நாம் நன்கு புரிந்துக் கொண்டிருக்க, ஐசுவரியவானின் உபத்திரவம் இந்த கதைக்குள் எவ்வாறு பொருந்தும் ? ஐசுவரியவான் இரக்கத்தை இழந்து, ஏழை மனிதன் அதை பெற்றுக்கொள்ளும், மாறுதலை நாம் காணும் போது, இது யூத யுகத்திலிருந்து சுவிசேஷ யுகத்திற்கு மாற்றப்படும் செயலை சித்தரிக்கிறது. அவிசுவாசத்தின் காரணத்தினாலே, இஸ்ரயேல் தேவனோடு தாங்கள் கொண்டிருந்த கிருபையின் நிலைப்பாட்டை இழந்துவிட்டு, சுவிசேஷ யுகத்தில் கடினமான உபத்திரவத்தில் அகப்பட்டதை காணலாம். ஐசுவரியவான் மேல் சுமத்தப்பட்ட கொடுமைகள், இந்த மோசமான நிலைப்பாட்டை காட்டுகிறது.

நம் ஆண்டவரின் நாளில், யூதர்கள் புறஜாதிகளை நாய்களாக எண்ணி, மிக கீழ்த்தரமாக நடத்தினார்கள். மத்தேயு 15:21-28ல் சொல்லப்படும் கானானிய ஸ்திரீ இதற்கு ஒரு நல்ல முன்மாதிரி. முதலில், இயேசு அவளை விட்டு விலகினார், சீஷர்கள் அவளை அனுப்பிவிடும்படிக்கு வேண்டிக் கொண்டார்கள். ஆயினும் அவர் அவளுடன் பேசினார். முதலாவதாக இஸ்ரயேலின் தொலைந்த ஆடுகளுக்கு மட்டுமே அவர் அனுப்பப்பட்டார் என்று விளக்கினார். (வசனம் 24) மேலும், தொடர்ந்து பிள்ளைகளின் அப்பத்தை நாய்களுக்கு எறிவது நல்லதல்ல என்றும் அவளுக்கு கூறினார். (வசனம் 26) "மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே" என்று அவள் பதில் அளித்தார். இந்த இணையான கருத்து இந்த உவமையில் கூறப்பட்டுள்ளது. ஐசுவரியவானின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளினால் போஷிக்கப்படுவதற்கு ஏங்கிக் கொண்டிருப்பதாக லாசரு இங்கு விவரிக்கப்படுகிறார். (லூக்கா 16:21) கிறிஸ்துவுக்குள் வந்த புறஜாதியாகிய லாசரு, "நாய்கள்" என்று அடையாளப்படுத்தப்படுகிறார்.

யூதர்களுக்கு கொடுக்கப்பட்ட ஒவ்வொரு வாய்ப்பையும் அவர்கள் விட்டுவிட்டதை இந்த உவமை தெளிவாக காட்டுகிறது. ஒருவேளை முழு அர்த்தமும் மறைக்கப்பட்டிருந்தாலும், லாசருவின் உயிர்த்தெழுதலுக்கும், இவர்கள் தேடிவந்த மேசியா இவர் தான் என்ற உட்குறிப்புக்கும் மறுப்பு தெரிவிக்கும் அளவுக்கு அது மிகவும் கடுமையானதாக இருந்திருக்கும். அவர்கள் சொல்வதைக் கேட்டு, அதன் தொடர்பை புரிந்துக் கொண்டவர்கள் தங்கள் விசுவாசத்தின் இன்னும் பலப்பட்டிருப்பார்கள். அதுமட்டுமல்ல, முன்னதாகவே இஸ்ரயேலுக்கு ஒதுக்கப்பட்ட அநேக கிருபைகள் புறஜாதிகளுக்கு கொடுக்கப்பட்டதற்கு இது ஒரு உறுதி. இது தேவனுடைய திட்டத்தின் முன்னேற்றத்திற்கான ஒரு அறிகுறியாகவும், அந்த திட்டத்தை பற்றிய நமது புரிதல் அவருடைய விருப்பத்திற்கு இசைவாக இருப்பதையும் உறுதிப்படுத்துகிறது.

**நிலையான ஒரு இடைவெளி**

"அதுவுமல்லாமல், இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்துவரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்றான்." (லூக்கா 16:26)

ஐசுவரியவான் மற்றும் லாசருவுக்கு இடையில் உள்ள பெரும்பிளப்பு, சுவிசேஷ சபைக்கும் யூதருக்கும் உள்ள மிக விரிவான வேறுபாட்டை அடையாளப் படுத்துகிறது. (Reprint 2604). கிறிஸ்து யார் என நிதானிக்க தவறிய இஸ்ரயேலின் இயலாமை, சாதகம் மற்றும் பாதகமான சூழலின் மத்தியிலான இந்த மாபெரும் பிளவை உண்டாக்கியது. ஆயினும், இது நிரந்தரமான பிரிவு அல்ல. "பிளவு" என்பதற்கான கிரேக்க வார்த்தை (Strong's 5490), நேரத்தைப் பற்றிய ஒரு குறிப்பைக் கொண்டிருக்கலாம். ஸ்டிராங்கஸ் அகராதி இந்த வார்த்தையை, "இடைவெளி அல்லது காலியிடம் (நிலையற்ற இடைவெளி)" என்று பொருள் விளக்கம் அளிக்கிறது. இந்த விளக்கம் சபை மற்றும் இஸ்ரயேலுக்கு இடையேயான தத்துவ ஞானம் வேறுபாட்டிற்கு, நேரடியாகப் பொருந்தக் கூடியதாக இருந்தாலும், ஒரு வலுவான ஆலோசனையானது, ஒரு "முடிவற்ற இடைவெளி" என்பது அந்த பிளவை இணைக்க முடியாத காலப் பகுதியை விவரிக்கக் கூடும் என்று கருதுகிறது. இது இஸ்ரயேலின் சாதகமற்ற நிலையான 1845 வருடங்களோடு இணைத்து பார்ப்பதற்கு சாத்தியமாக உள்ளது. இது நிச்சயமாக உவமையின் பொருளுக்கு பொருந்தும்.

பெர்லின் நாடுகளின் கூட்டமைப்பு, யூதர்கள் இஸ்ரயேலில் நிலத்தை வாங்குவதற்கான வழிவகையைத் துவக்கியபோது, யூதர்களின் இரட்டிப்பான தண்டனையின் காலம் கிபி 1878 வில் முடிவுக்கு வந்தது. அந்த பிளவு, இணைக்கப்படுவதற்கான ஒரு துவக்கத்தை இது குறிப்பிடுகிறது. தேசிய அளவிலான ஆதரவு படிப்படியாக இஸ்ரயேலுக்கு திரும்பியது. சகரியா 12:19ல் குறிப்பிட்டபடி, இறுதியாக இஸ்ரயேல் இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொள்ளும்போது, அந்த பிளவு முழுமையாக இணைக்கப்படும். அந்த ஐசுவரியவான் மறுபடியும் முழுமையான தெய்வீக இரக்கங்களை பெறுவார். இந்த செயல்முறை எசேக்கியேல் 37ல், உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கில் உள்ள எலும்புகள்

படிப்படியாக ஜீவனைப் பெறுவதில் சுட்டிக் காட்டப்படுகிறது.

**கோதுமை மற்றும் களைகள்**

கோதுமை மற்றும் களைகளின் உவமையில், சுவிசேஷ யுகத்திற்கு சம்பந்தப்பட்ட சில விவரங்களை நாம் ஆராய்கிறோம். பயனுள்ள கோதுமை மற்றும் பயனற்ற களைகள், இரண்டுமே கலந்திருப்பதை நாம் காண்கிறோம். நிலத்தின் உரிமையாளரின் பயிர் வளர்ச்சி மற்றும் அறுவடைக்கு இடையூறு விளைவிக்கும் முயற்சியில் எதிராளியினால் களைகள் விதைக்கப்பட்டது. இயேசு தம் சீஷர்களிடம் இதற்கான விளக்கத்தை அளித்ததினால், இந்த உவமையை நாம் புரிந்து கொள்வது எளிது. (வசனங்கள 37-43)

வயல் இந்த உலகத்தையும், கோதுமை இராஜ்யத்தின் புத்திரர்களையும், களைகள் பொல்லாங்கின் புத்திரர்களையும் அடையாளப் படுத்துகிறது. இன்னும் ஆழமான சிந்தனைகள் அடுத்து சில அற்புதமான காரியங்களை வெளிப்படுத்துகிறது - கோதுமையும், களைகளும் பெரும்பாலும் ஒரே விதமாக தோற்றம் அளிக்கும். அவற்றின் கனிகளின் மூலமாகவே, அவைகளை வேறுபடுத்தி அறிய முடியும். கனமான கோதுமையை விளைவிக்கும் செடிகள் தாழ்மையுடன் குனிந்து வணக்கமாக நிற்கும், அதே வேளையில், கனியற்ற களைகள் நேராக நிமிர்ந்து நிற்கும். ஆண்டவரின் பணியில நமது கனிகள் மற்றும் தாலந்துகளை வளர்ப்பதன் முக்கியத்துவத்தின் ஒரு அர்த்தமுள்ள பாடத்தை இது தருகிறது.

பிலிப்பு பட்டணத்தில் உள்ள சகோதரர்களுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் சொன்ன புத்திமதிகளை முக்கியமாக நினைவில் கொள்ள வேண்டும்."கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ள வைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவை களெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்."(பிலிப்பியர் 4:8)

இவைகளின்படி நாம் வாழ்ந்தால், நம் மனதில் ஆவியின் கனியே முதன்மையாக இருக்கும் - "ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை." (கலாத்தியர் 5:22,23)

இந்த உவமை இயேசுவின் சீஷர்களுக்கு சொல்லப்பட்டிருந்தாலும், மீதியுள்ள குறிப்பிட்ட கருத்துக்கள் நம்முடைய சிந்தனைக்கு விடப் பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, உண்மையில் இது எந்த காலப் பகுதியில் நடைப்பெறுகிறது ? "யார் இராஜ்யத்தின் புத்திரர்கள் ? " அல்லது "யார் பொல்லாங்கின் புத்திரர்கள் ? " சுவிசேஷ யுகம் முழுவதிலும் உள்ள தேவ ஜனங்கள் கோதுமையையும், (அவைகளின் கனிகள் இன்றி வேறுபாட்டை கண்டறிய கடினமாக இருக்கும்) அவைகளுக்குள் கலந்திருக்கும் பொய்யான விசுவாசிகள் மற்றும் போதகர்கள் களைகளையும் அடையாளப்படுத்துவதாக ஒரு பரந்த விளக்கம் கூறுகிறது. யுகத்தை திரும்பி பார்க்கையில், கோதுமையின் வயல், களைகளால் நிரப்பப்பட்டது போல் தோன்றுகிறது. போப் அமைப்பின் ஆளுமை முழுவதிலும் உள்ள அனைத்து எதிரான சூழல்களிலும் சத்தியத்தை தேடிக்கொண்டவர்கள் , களைகளின் நடுவில் வளரக்கூடிய கோதுமை வகுப்பின் ஒரு பகுதியாக இருந்தனர்.

கோதுமை வகுப்பாரின் அறுவடை, மிக உகந்த நேரமாகிய சுவிசேஷ யுகத்தின் அறுவடையின் போது நடைபெறுகிறது என்று சகோதரர் ரசல் மறுபதிப்பு 4635 ல் கருதுகிறார். இவர்கள் "ஆயிர ஆண்டு இராஜ்யத்தின் மகிமையில் கிறிஸ்துவோடு இணைந்திருப்பதற்கு பொருத்தமானவர்களாக" எண்ணப்படுகிறார்கள். மேலும், களஞ்சியத்தில் சேகரிக்கப்படுபவை, அறுவடை செய்யப்பட்டவர்கள், உயிர்த்தெழுதலில் அடைந்த மாற்றத்தை அடையாளப்படுத்துகிறது. மேலும், கட்டுகளாக கட்டப்படும் களைகள் சமூகங்கள், வகுப்புகள் மற்றும் கட்சிகளுடன் ஒருமித்து கூடும் "போலியான" பின்னடியார்களின் ஒரு காட்சியாக இருக்கிறது என்று சகோதரர் ரசல் கருதுகிறார். எனவே, நாம் இவ்வகையான அமைப்புகளின் ஒரு பகுதியாக சேர்ந்துவிடக் கூடாது என்று நினைப்பூட்டப்படுகிறோம். இல்லையென்றால், நாம் அவைகளின் தவறுகளில் இழுக்கப்பட்டு அல்லது சாய்ந்து விடுவோம்.

அறுவடை தொடரும் போது அறுவடையாளர் கோதுமையை களஞ்சியத்தில் சேர்க்கும் நாளுக்கென்று எப்போதும் ஆயத்தமாகவும், உறுதியாகவும், நேர்மையாகவும் இருக்கவேண்டும் என்று கூறப்படும் புத்திமதியே இதிலிருந்து எடுக்கவேண்டிய ஒரு முக்கிமான பாடமாகும். அதே நேரத்தில் களைகள் சுட்டெரிப்பதற்காக கட்டுகளாக கட்டப்படுகிறது. (இது தனிப்பட்ட நபர்களின் அழிவு அல்ல, மாறாக தவறுகளை அடிப்படையாக கொண்ட அமைப்புகளின் அழிவாகும்) உங்கள் சகோதரர்களுடன் உறுதியாக நில்லுங்கள், அவரது சாயலில் வளர முயலுங்கள், மகா பரிசுத்தமான விசுவாசத்தில் ஒருவரை ஒருவர் கட்டி எழுப்புங்கள்.

**புத்தியுள்ள மற்றும் புத்தியில்லாத கன்னிகைகள்**

இந்த மூன்றாவது உவமையோடு, சுவிசேஷ யுகத்தின் முழுமையான முடிவுக்கு வந்துவிட்டோம். மணவாளனின் வருகையை பத்து கன்னிகளும் எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் அனைவரும் உற்சாகத்துடன் தங்கள் விளக்குகளை தயார் செய்து அவரை சந்திக்க வெளியே சென்றனர். ஆனால், அதில் ஐந்து பேர் மட்டும் கூடுதல் எண்ணெயைக் கொண்டு வருவதற்கான ஞானத்தைப் பெற்று, ஆவிக்குரிய வாழ்க்கையில் ஆயத்தமாக இருந்தார்கள்.

மணவாளன் வர தாமதித்தபோது, பத்து கன்னிகைகளும் தூங்கிவிட்டார்கள். 1843 ல் பின்னர் 1844ல் இலையுதிர் காலத்தில், ஆண்டவருடைய வருகையை எதிர்ப்பார்த்த மில்லர் இயக்கத்தை இது விவரிக்கிறது. இந்த முன்கூட்டிய எதிர்பார்ப்பு, தீர்க்கதரிசனத்தில் பலருடைய ஆர்வத்தை இழக்க வழிவகுத்தது. இந்த சம்பவத்திற்கு பின், மணவாளனின் உண்மையான வருகையை, நடு இரவில் "இதோ மணவாளன்" என்ற சத்தம், 1874 ம் வருடம் முதல், நித்திரையிலிருக்கும் கன்னிகை வகுப்பாரை எழுப்பிக் கொண்டிருப்பதாக சகோதரர் ரசல் கருதுகிறார்.

அக்காலம் முதல், சத்தியத்தின் வெளிச்சம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. கோதுமையின் அறுவடையும் முன்னேறி வருகிறது. "என் ஜனங்களே அவளை விட்டு வெளியே வாருங்கள்" என்று வெளிப்படுத்தல் 18 4ல் சொல்லப்பட்ட சத்தத்தைக் கேட்டு, கீழ்ப்படிந்தவர்கள், மிகுதியாக ஆசீர்வதிக் கப்பட்டார்கள். இவர்கள் ஆவியில் வளர்ச்சி அடைய சூழ்நிலை சாதகமானது. அதே நேரத்தில் ஆண்டவரின் பிரசன்னத்தை அறிவிக்கக்கூடிய குரல்களோடு இணைந்து, தங்களுடைய வெளிச்சத்தையும் பிரகாசிக்கிறார்கள். புத்தியில்லாத கன்னிகைகளோ ஆவியில் ஒரு "போதுமான" அளவில் திருப்தி அடைந்தவர்களாக, தங்களுடைய நேரத்தையும் கவனத்தையும் மற்ற காரியங்களில் செலவழிக் கிறார்கள். காலம் வரும்போது, அவர்கள் ஆவியில் குறைவுள்ளவர்களாக இருப்பதை உணர்ந்து, புத்தியுள்ளவர்களிடம் வந்து, தங்களுக்கு எண்ணெயைக் கேட்பார்கள். ஆனாலும், அவர்களுக்கு கிடைக்காது - புத்தியுள்ளவர்கள் அதை பகிர்ந்துக் கொடுக்கக் கூடிய மனநிலையில் இராததினால் அல்ல, பரிசுத்த ஆவி தேவனிடமிருந்து வருவதாலும், அதை ஒருவர் மற்றொருவருக்கு வழங்க முடியாததினாலும், புத்தியுள்ளவர்களால் அதை பகிர்ந்துக் கொடுக்க முடியாமல் போனது.

இப்போதும் கூட, அவருடைய பிரசன்னம், உரத்த சத்தமாக அறிவிக்கப்பட்டாலும், நமக்கு அவர் தாமதிக்கிறது போல தோன்றலாம். திருமண விருந்து மற்றும் இராஜ்யம் நிறுவப்பட வேண்டும் என்பதில், நாம் புரிந்துக்கொள்ளக்கூடிய ஆர்வத்துடன் உள்ளோம். காலகணக்கு பக்திவிருத்திக்கான ஒரு பாடமாக இருக்கலாம். அறுவடை முடிவுக்கான தேதியை ஒருவர் ஒரு தேதியையும், மற்றவர் மற்றொரு தேதியையும் கணக்கிடுவதற்கு காரணங்கள் உண்டு. இருப்பினும், நாம் பொறுமையாக முன்னேறி சென்று கொண்டே இருக்க வேண்டும். நம்முடைய பயணத்தின் முடிவு மிக நெருக்கமாக இருப்பதாக நம்புகிறோம். ஆயினும் ஆண்டவர் தம்முடைய சேகரிப்பில் வைத்திருக்கும் எதைவேண்டுமானாலும், பெற்றுக்கொள்ள ஆயத்தமுள்ளவர்களாக நாம் உறுதியுடன் தொடர வேண்டும்.

**பொதுத் தடங்கள்**

இந்த உவமைகளின் முடிவில், நாம் தேவ திட்டத்தின் பல்வேறு அம்சங்களைக் கண்டோம். இவைகளை தொடர்ந்து நாம் காணும்போது, அவைகள் நம்மை திருச்சபையின் வளர்ச்சியின் வழியாக சீராக நடத்துகிறது. சபையில் புறஜாதியாருக்கு அளிக்கப்பட்ட தயவு - லாசரு, ஆபிரகாமின் மடிக்கு உயர்த்தப்பட்டு, ஆபிரகாமின் வாக்குத்தத்தங்களின் பங்கு கிடைத்ததே முதல் அடையாளமாகும். அங்கிருந்து பார்க்கும்போது, சுவிசேஷ யுகத்தின் கோதுமை, துன்மார்க்கராகிய களைகளுடன் கலந்திருப்பதை, கண்டோம். அவைகள் மோசமான தாக்கத்தை உடையதாக இருப்பினும், கோதுமை வளர்ச்சி அடைந்து, யுகத்தின் முடிவில் அறுவடை செய்யப்படுகிறது. இறுதியாக, புத்தியுள்ள மற்றும் புத்தியற்ற கன்னிகைகள் மணவாளனின் பிரசன்னத்திற்குரிய சோதனையை சித்தரிக்கிறார்கள். இந்த கன்னிகைகள், முழுமையாக வளர்ச்சி அடைந்து, ஆண்டவருடைய வேலைகளில் விசுவாசமுள்ளவர்களாக, ஏற்ற கால சத்தியத்தின் புரிந்துக்கொள்ளுதலின் வழியாக தங்களுடைய வெளிச்சத்தை பிரகாசிக்கும் அளவுக்கு போதுமான பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறார்களா?

ஒவ்வொரு உவமையிலும், விசுவாசத்திற்கான ஒரு நடைமுறை பாடமும் உள்ளது. லாசருவை அடையாளப்படுத்திய வகுப்பார் விசுவாசித்தார்கள், ஆசீர்வதிக்கப்பட்டார்கள். கோதுமை வகுப்பார் வளமிக்க கனிகளை கொடுத்தார்கள், அவர்கள் தேவனுடைய பரலோக களஞ்சியத்தில் சேர்க்கப்பட்டனர். புத்தியுள்ள கன்னிகைகள் இன்னும் அதிகமான எண்ணெயை எடுத்து செல்லவும், விழித்திருக்கவும், மணவாளனுக்கு எதிராக செல்ல ஆயத்தமாக இருக்கவேண்டிய பொறுப்பை அறிந்திருந்தார்கள். சபை வகுப்பின் வளர்ச்சிக்காக ஏறெடுக்கப்படும் கண்காணிப்பையும், திட்டமிடுதலையும் பற்றி இந்த உவமைகளின் வழியாக, ஆண்டவர் நமக்கு காண்பித்திருக்கிறார். நிகழ்வுகள் அவரது திட்டத்துடன் ஒழுங்காக தொடர்ந்து முன்னேறிக்கொண்டே செல்கின்றன, மேலும் இவைகள் நமது விசுவாசத்தை வளர்த்து, அதிக முயற்சிகளுக்கு நம்மை தூண்டுகிறது.

நம் மனதில் அவரது திட்டத்தை முன்னெடுத்துச் செல்வோம். இந்த ஓட்டத்தை நாம் ஏன் ஓடுகிறோம் என்பதையும், அந்த ஓட்டத்தில் வெற்றிப் பெறுபவர்களுக்கு கிடைக்கும் பரிசை நாம் நினைவுப்படுத்திக் கொண்டு புத்துணர்வடைவோம். இராஜ்யத்தின் முழு ஸ்தாபனமும் நெருங்கி வருகிறது. அதில் பணிசெய்யத் தயாராக இருக்கக் கூடிய வகுப்பாராக நாம் இருக்க விரும்புகிறோம். இந்த கடைசி நாட்களில் நம்முடைய முயற்சிகளை இரட்டிப்பாக்குவோம், ஆண்டவருடைய ஆவியை அதிகதிகமாக தேடுவதற்கு, ஒருவரை ஒருவர் ஊக்குவிப்போம்.

**இயேசுவோடு - வாழ்க்கையை மாற்றும் உரையாடல்கள்**

# எஜமானரால் தொடப்படுதல்



"கர்த்தர் ஸ்தோத்திரஞ்செய்தபின்பு அவர்கள் அப்பம் சாப்பிட்ட இடத்துக்குச் சமீபமாய்த் திபேரியாவிலிருந்து வேறே படவுகள் வந்தது." (யோவான் 6:23)

*Tom Ruggirello*

இயேசுவின் வாழ்க்கையைப் பற்றி சிந்திக்கையில், அவருடைய தனிப்பட்ட உரையாடல்கள் சிலவற்றை ஆராய்வது, பலனளிக்கும் என்று நிரூபிக்கப்படுகிறது. இந்த விவாதங்கள் முக்கியமான மற்றும் விலையுயர்ந்த சத்தியங்களை வெளிப்படுத்தியிருக்கின்றன மேலும், அவற்றை பகிர்ந்து கொண்டவர்கள் மீது ஆழ்ந்த தாக்கத்தையும் ஏற்படுத்துவதை போல தோன்றுகிறது. இந்த விவாதங்கள் பெரும்பாலும், இயேசுவைப் பின்பற்றின திரளான கூட்டத்திலிருந்து தனித்து நடத்தப்பட்டது. இயற்கையாகவும் இது விலக்கப்பட்டிருந்தது. இந்த கட்டுரையில் விவாதிக்கப்பட்ட நான்கு நபர்கள் எஜமானரால் ஆழ்ந்த அளவில் தொடப்பட்டார்கள்.

"பஸ்கா பண்டிகையிலே அவர் எருசலேமிலிருக்கையில், அவர் செய்த அற்புதங்களை அநேகர் கண்டு, அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும், இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை."(யோவான் 2:23,24) அநேகர் இயேசுவின் மேல் நம்பிக்கை வைத்திருந்தாலும், அவர் இருதயங்களின் யோசனைகளை அறிந்திருந்தபடியால், அவர் அனைவரையும் நம்பவில்லை. "இயேசு அவர்களுடைய இருதயங்களின் மாயையை அறிந்திருந்தபடியால், அவர் அவர்களை நம்பவில்லை. ஆவிகளை கண்டறியக் கூடிய வரத்தை அவர் பெற்றிருந்ததால், ஒருவரும் அவரைக் குறித்துச் சாட்சிகொடுக்க வேண்டியதில்லை. ஏனெனில் அவர்கள் உள்ளத்தில் இருந்ததை அவர் அறிந்திருந்தார்." (Reprint 1696:4) ஆயினும், பரிசேயனாகிய நிக்கொதேமு இயேசுவிடம் வந்தபோது, அவரோடு சத்தியத்தை பகிர்ந்துக் கொள்வதற்கு அதிக விருப்பமுள்ளவராக இருந்தார்.

### நிக்கோதேமு

"அவன் இராக்காலத்திலே இயேசுவினிடத்தில் வந்து: ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான். இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். "(யோவான் 3:2,3) கூட்டத்தில் அவர் அனுபவித்த அனுபவங்களைப் போலன்றி, நிக்கோதேமுவுடன் வித்தியாசமாக பேசினார். அவருக்கு சத்தியத்தின் மேலுள்ள பசியை உணர்ந்தார். தேவனுடைய இராஜ்யத்தை காண ஒருவர் "மறுபடியும் பிறக்க" வேண்டும். இதற்கு கிரேக்க பொருள் - "புதிதாக பிறத்தல்" அல்லது "மேலிருந்து பிறத்தல்". "புதிதாக ஜெநிப்பிக்கப்படுதல்" என்ற அர்த்தத்தையும் இது கொண்டிருக்கலாம். இது நிக்கொதேமுக்கு குழப்பமாக இருந்தபடியால், "அதற்கு நிக்கொதேமு: ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இராண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்றான்?" (4-வசனம்) என்று வினவினார். ஆனால் மிக பெரிய சத்தியங்களை, சொல்லர்த்தமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இதற்கு பரிசுத்த ஆவி விசுவாசிகளுக்குள் கிரியை செய்ய வேண்டியதாக இருக்கிறது. தனிப்பட்ட நபர், ஆவியினால் ஜெநிப்பிக்கப்படும்போது, அவர் புது சிருஷ்டியாக வளர்ச்சி அடைந்து, இறுதியில் ஆவிக்குரிய ஜீவியாக பிறக்கும். ஒருவர் பரலோக இராஜ்யத்திற்குள் நுழைய அனுமதிக்கும் உருமாற்றத்தை ஒரு சித்திரமாக இது விளக்குகிறது. நிக்கொதேமு இந்த பரம அழைப்புக்கு பாத்திரமாக இருப்பதை இயேசு கண்டறிந்ததால், அவர் இந்த சத்தியத்தை அவரோடு பகிர்ந்துக் கொண்டார் என்று கருதப்படுகிறது.

### ஒரு வெண்கலம் (தாமிரம்)

புதிதாக பிறக்கிறவர்களைப் பற்றிய ஒப்புமையை நிக்கொதேமு, புரிந்துக்கொள்ளாவிட்டாலும், இயேசு தேவனுடைய திட்டத்தில் அவருடைய பங்கை தொடர்ந்து வெளிப்படுத்தினார். "சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டது போல மனுஷகுமாரனும்,தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும். தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன்

எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்."(யோவான் 3:14-17)

வேதாகமத்தில் அடிக்கடி மேற்கோள் காட்டப்பட்ட வசனங்கள் இந்த பகுதியில் உள்ளது. நியாயப்பிரமாணத்தைப் பற்றியோ அல்லது அதன் முக்கியத்துவத்தையோ இயேசு ஒருபோதும் குறிப்பிடவில்லை என்பதை பரிசேயனாகிய நிகோதேமு கவனித்திருக்க வேண்டும். இந்த உலகத்திற்கு நித்திய ஜீவனை கொடுப்பதற்காக, இயேசுவை அனுப்பியது, தேவனுடைய அன்பே. தேவனுடைய திட்டத்திலும், உலகத்தின் இரட்சிப்பிலும் இயேசு ஒரு முக்கிய பங்கு வகித்தார். வனாந்திரத்தில் மோசேயினால் சர்ப்பம் உயர்த்தப்பட்டது, நிக்கோதேமுவுக்கு நன்கு தெரிந்திருக்கவேண்டும். ஆனால், "மனுஷகுமாரனும் ... உயர்த்தப்படவேண்டும்." என்று இயேசு கூறினபோது, அதன் ஆழமான முக்கியத்துவம் வெளிப்பட்டது.

இயேசு குறிப்பட்ட இந்த காரியம், எண்ணாகமம் 21:4-9ல் காணப்படுகிறது. வனாந்திர பயணத்தின் நிமித்தம் இஸ்ரயேலர்கள், மோசேக்கும், தேவனுக்கும் எதிராக முறுமுறுத்தார்கள், அதனால் ஆண்டவர் அவர்கள் மத்தியில் கொள்ளிவாய் சர்ப்பங்களை அனுப்பினார், அநேகர் மரித்துபோனார்கள். மீதியுள்ளவர்கள் மனம் வருந்தி, மோசேவிடம் மன்றாடினபோது, சர்ப்பத்தினால் கடிக்கப்பட்ட எந்த இஸ்ரயேலனும் உயிர்ப்பிழைக்கும்படிக்கு, ஒரு வெண்கல (தாமிரம்) சர்ப்பத்தை செய்து, அதை ஒரு கம்பத்தின் மேல் வைக்கும்படி தேவன் மோசேவுக்கு கட்டளையிட்டார். உயர்த்தப்பட்ட சர்ப்பத்தை பார்த்த யாவரும் உயிர்ப்பிழைத்தார்கள்.

இயேசு குறிப்பிட்ட இந்த காட்சி மிக அழகான அடையாளத்தை வெளிப்படுத்துகிறது. வெண்கலம் (தாமிரம்) பரிபூரண மனித சுபாவத்தை அடையாளப்படுத்தும். (See *Tabernacle Shadows*, page 18, and *Notes on the Tabernacle*, Anton Frey, page 11) உயர்த்தப்பட்ட வெண்கல சர்ப்பமானது, இயேசுவின் பரிபூரண மனித சுபாவத்திற்கும், சர்ப்பத்தின் சொரூபமானது, பரிபூரணமான மாம்ச சுபாவத்திலிருக்கும் இயேசு, நமக்காக பாவமானார் என்பதற்கும் நிழலாக இருக்கிறது. "..அநேகருடைய பாவங்களை தாமே சுமந்து.."(ஏசாயா53:12)."நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்."(2கொரிந்தியர் 5:21)

"இந்த முழு உலகமும் பாவத்தினால் தீண்டப்பட்டுள்ளது, அப்போஸ்தலர் கூறுகிறபடி, அனைவரும் ஏகமாய் தவித்து வேதனைப்பட்டு மரித்துக் கொண்டிருக்கிறார்கள். (ரோமர் 8:22) " என்று சகோதரர் ரசல் இந்த அடையாளத்தைக் குறித்து விளக்குகிறார். (Reprint 4126) அவிசுவாவசமாகிய பாவத்திற்காக இஸ்ரயேலர்கள் மனம் திரும்பினாலும், உயர்த்தப்பட்ட அந்த சர்ப்பத்தை கண்டபின்னர் அவர்கள் குணமடைந்தார்கள். மனம் திரும்புதலும், இயேசுவின் மேல் விசுவாசமும் இரட்சிப்புக்கு மிக அவசியம் என்று இது குறிப்பிடுகிறது. யூதர்களின் மீட்புக்கு, தேவன் மோசேயின் மூலம் வழியை ஆயத்தம் செய்தது போல, நமக்காக அவருடைய குமாரனை உயர்த்த தேவன் தாமே பொறுப்பாளரானார்.

வரவிருக்கும் நாட்களில், பிரதிபலிக்கக்கூடிய வார்த்தைகளைப் பற்றி ஒரு புதிய மற்றும் ஆழமான ஒரு புரிந்துக்கொள்ளுதலை இது நிகொதேமுவுக்கு கொண்டுவந்தது. ஆயினும், அவர் அரிமத்தியா ஊரானாகிய யோசேப்புடன், இயேசுவின் உடலை சிலுவையில் இருந்து எடுக்கும்வரையில், இந்த அர்த்தத்தின் ஆழத்தை அவரால் புரிந்துக் கொண்டிருக்க முடியாது என்று தோன்றுகிறது. ஆம், நாம் ஜீவனைப் பெறுவதற்கு அவர் உயர்த்தப்பட்டார்!

**அந்த சமாரிய ஸ்திரீ**

"அப்பொழுது சமாரியா நாட்டாளாகிய ஒரு ஸ்திரீ தண்ணீர் மொள்ள வந்தாள். இயேசு அவளை நோக்கி: தாகத்துக்குத்தா என்றார்." (யோவான் 4:7 ) "யூதேயாவுக்கும் கலிலேயாவுக்கும் நடுவாக உள்ள இடப்பரப்புக்கு சமாரியா என்று பெயர்.... யூதர்கள் வணிக ரீதியாக அவர்களிடம் தொடர்புக் கொள்ளும் போது.... தெய்வீக கிருபைக்கு வெளியில் இருப்பதாக எண்ணிக்கொண்டு, அவர்களை எல்லா விதங்களிலும் புறஜாதியாரைப் போல நடத்தினார்கள். "(Reprint 2574) யூதர்களுக்கும், சமாரியர்களுக்கும் இடையில் உள்ள விரோதத்தை உணர்ந்த இயேசு, அந்த சமாரிய ஸ்திரீயிடம் உரையாடினது குறிப்பிடத்தக்கது. யூதர்கள் சமாரியர்களிடம் சம்பந்தங்கலவாதவர்களானபடியால், "தாகத்துக்குத்தா என்று" இயேசு சமாரிய ஸ்திரீயிடம் கேட்டது அவளுக்கு மிகுந்த ஆச்சரியத்தை தந்தது. (வசனம் 9)

அதற்கு இயேசு, குறிப்பிடத்தக்க சத்தியத்தோடு பதிலளித்தார். "இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: நீ தேவனுடைய ஈவையும், தாகத்துக்குத்தா என்று

உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார்." (வசனம் 10)

அருகிலுள்ள யாக்கோபின் கிணற்றிலிருந்து தண்ணீரை குறித்து இயேசு குறிப்பிட்டார் என்று அந்த ஸ்திரீ முதலில் நம்பினாள். ஆனால் அதற்குபின் இயேசு கிணற்று தண்ணீருக்கும், ஆவிக்குரிய தண்ணீருக்கும் உள்ள வேறுபாட்டை காட்டினார். "இந்த தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது, நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார். அந்த ஸ்திரீ அவரை நோக்கி ஆண்டவரே, எனக்குத் தாகமுண்டாகாமலும் நான் இங்கே மொண்டு கொள்ள வராமலுமிருக்கும்படி அந்தத் தண்ணீரை எனக்குத் தரவேண்டும் என்றாள்" (14,15)

இயேசு சொன்ன அர்த்தத்திற்கு, அவளுடைய கண்களை அவர் திறந்த விதம் ஆச்சரியமாக உள்ளது. அவளுடைய புருஷனை அழைத்து வரும்படி இயேசு அவளிடம் கட்டளையிட்டார். அவளுக்கு புருஷன் இல்லை என்று அவள் பதில் அளித்தாள். "இயேசு அவளை நோக்கி, எனக்குப் புருஷன் இல்லையென்று நீ சொன்னது சரிதான். எப்படியெனில், ஐந்து புருஷர் உனக்கிருந்தார்கள், இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல, இதை உள்ளபடி சொன்னாய் என்றார்."(17,18) "அப்பொழுது அந்த ஸ்திரீ அவரை நோக்கி - ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன்" (19)என்று பதில் அளித்தாள்.

அவர் வெறுமனே தன்னை குறித்து சொல்வதற்கு பதிலாக, அவளுடைய தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி தெரிந்துகொள்ளும் திறனை செயலாற்றினார். இது அவளை வியக்கவைத்தது. இயேசு விசேஷித்தவர் என்பதை அவள் உடனடியாக புரிந்துக்கொண்டாள். "அந்த சமாரியப் பெண் தன் சொந்த தன்மையையும், வாழ்க்கையையும் பற்றி , மேலும் விவாதங்களை தவிர்ப்பதில் கவனம் வைத்து, மிக திறமையாக அந்த கேள்வியை ஆன்மீகத்திற்குரியதாக மாற்றினாள் - தேவ ஆராதனையைப் பொறுத்த வரையில், சரியான முறையில், சரியான இடத்தில் தேவனை தொழுதுக் கொள்வதில், யூதர்கள் அல்லது சமாரியர்கள் -யாருடைய கருத்துக்கள் சரியானது என்று அவள் இயேசுவிடம் கேட்டாள். "(Reprint 2575)."உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக் கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்" (வசனம் 23,24) என்று இயேசு பதில் அளித்தார். உண்மையான ஆராதனையை யூதர்கள் அல்லது சமாரியர்களின் வழியாகவோ பெற இயலாது. அதற்கு தேவனையும், அவருடைய உண்மையான சத்தியத்தை தேடக்கூடிய ஒரு உண்மையான இருதயம் தேவைப்படுகிறது. முழுமையான தேவ ஆராதனைக்கு, பரிசுத்த ஆவியினால் அறிவூட்டப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். அவளுடன் பேசின தீர்க்கதரிசி, போதகரை காட்டிலும் மேசியா இன்னும் அற்புதமானவராக இருக்க முடியுமா என்று எண்ணி அவள் ஆச்சரியப்பட்டாள். அவள் நேரடியாக கேள்வி கேட்க விரும்பாமல், "கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன், அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார்" என்று அவள் மறைமுகமாக கூறினாள். நம்முடைய ஆண்டவர், அவளுடைய மனதில் உள்ள ஆயத்தநிலையை கண்டு, "உன்னுடனே பேசுகிற நானே அவர்" என்று மிக தெளிவாக தன்னை வெளிப்படுத்தினார். ஒருவேளை அவருடைய ஊழியத்தின்போது வேறு எவரிடமும் இவ்வளவு தெளிவாக தன்னை அவர் வெளிப்படுத்தவில்லை. " என்று அவளுடைய எதிர்வினை பற்றி சகோதரர் ரசல் கருத்துரைக்கிறார். (Reprint 4131)

இந்த பெண்ணில் ஒரு அற்புதமான ஆயத்தநிலை இருந்தது. அவள் விரைவாக நம்பினாள். அநேக அற்புத அடையாளங்களைக் கண்ட போதிலும், இயேசுவை ஏற்றுக்கொள்ள மறுத்த பரிசேயர்களை ஒப்பிட்டு பார்க்கும்போது எத்தனை வேறுபாடு. அவளுடைய திறந்த இருதயத்தை கண்டு நம்முடைய ஆண்டவர் திகைத்துபோய், அவளுடன் தெளிவாக பேசினார். உவமைகளால் பேசுவதற்கு அவசியமில்லை. மேசியாவை கண்டுபிடித்த உற்சாகத்தினால், அவள் கொண்டு வந்த குடத்தை அங்கேயே விட்டுவிட்டு, தன்னுடைய நண்பர்களுக்கும், அயலகத்தாருக்கும் இயேசுவைப் பற்றி அறிவிக்க ஊருக்குள் விரைந்தாள். தண்ணீர் மொள்ளவந்த அவளுடைய சொந்த வேலையின் மேல் கவனம் வைக்காமல், அதை காட்டிலும் மிக அவசரமான, மிக முக்கியமான வேலையை அவள் கண்டறிந்தாள். அவளுடைய இந்த உற்சாகத்தினால், அடுத்த இரண்டு நாட்கள் இயேசு சமாரியாவில்

போதித்து, அநேகருக்கு ஆசீர்வாதத்தை தந்தது. பலர் அவரை மேசியாவாக ஏற்றுக்கொண்டனர். சுவிசேஷம் புறஜாதிகளுக்கு திறக்கப்படும் போது, அவர்கள் அதைப் பெற்றுக்கொள்ள ஆயத்தப்படுத்த, நம்முடைய ஆண்டவர் இந்த புறஜாதிகளுக்குள் விதைத்துக் கொண்டிருந்தார். (அப்போஸ்தலர் 8)

நாம் திறந்த மனதுடன், சத்தியத்தை விரைவாக நம்பும் போது, நம் ஆண்டவர் எவ்வளவு மகிழ்ச்சி அடைகிறார் என்று இந்த சமாரிய ஸ்திரீயோடு நடந்த பரிமாற்றங்கள் ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது. நாமும் அவளைப் போல சத்தியத்தை கேட்டவுடன் உற்சாகத்தோடு அதை மற்றவர்களோடு பகிர்ந்துக் கொள்ள துரிதமாக செயல்படவேண்டும். உலகத்தில் பல சத்தியங்கள் உண்டு. ஆனால் இந்த சத்தியம் மட்டுமே நித்திய ஜீவனை தரும். நித்திய ஜீவனை பெறும்படியான, "ஜீவ தண்ணீரை" இயேசு அவளுக்கு கொடுத்தார். அவள் முற்றிலுமாக மாறியிருக்க வேண்டும்.

**நூற்றுக்கு அதிபதி**

கப்பர்நகூம், இயேசுவின் ஊழியத்தின் துவக்கத்திற்கு அடிதளமாக இருந்தது. (மத்தேயு4:13 மற்றும் 9:1) இயேசு அங்கிருப்பார் என்று நியாயமாக அனுமானிக்கப்பட்டது. நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரன் வியாதிப்பட்டு, மரிக்கும் தருவாயில் இருந்ததாக லூக்கா 7:1-10 ம் வசனங்கள் கூறுகிறது. அந்த வேலைக்காரன் திமிர்வாதமாய் கிடந்து கொடிய வேதனைப்படுகிறான் என்று மத்தேயு8:6ம் வசனம் கூறுகிறது. ஒரு ரோமன் தனது வேலைக்காரர் களுக்கோ, யூதர்களுக்கோ இப்படிப்பட்ட நன்மையான உணர்வுகளைப் பெற்றிருப்பது மிகவும் அசாதாரணமானது. நூற்றுக்கு அதிபதி நேரடியாக இயேசுவிடம் வந்ததாக மத்தேயு விவரிக்கிறார். மற்றும் லூக்காவில், இயேசுவை சந்திக்க " யூதர்களின் மூப்பர்கள்" அனுப்பப்பட்டதாக சொல்லப்படுகிறது. "அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவரைக் கருத்தாய் வேண்டிக்கொண்டு நீர் இந்தத் தயவு செய்கிறதற்கு அவன் பாத்திரனாயிருக்கிறான். அவன் நம்முடைய ஜனத்தை நேசிக்கிறான், நமக்கு ஒரு ஜெப ஆலயத்தையும் கட்டினான் என்று,.." இந்த யூதர்கள், ஒரு ரோமனின் சார்பாக இயேசுவிடம் பேசினார்கள். (வசனம் 4,5)

"இந்த நூற்றுக்கு அதிபதியின் நல்ல கிரியைகளை நாம் காணலாம். அவர் யூத மதத்தை மதித்து, அவரது செல்வத்தை பயன்படுத்தி, அவர்களுக்கு ஒரு ஜெப ஆலயத்தை கட்டி யெழுப்பினார். இவற்றின் இடிபாடுகள், சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. "இந்த இடிபாடுகள் பற்றி எடர்ஸ்ஹீம் என்ன கூறுகிறது என்றால், "பதினெட்டு நூற்றாண்டுகள் தாண்டி நிற்கும் இந்த எஞ்சியுள்ள பகுதியானது, அதினுடைய உச்சிதமான சிற்ப வேலைப்பாடுகளும் வரைப்பட்டிகைகளும், எழுத்துக்களும் சுவர்மாடங்களும், அவரை எவ்வாறு தாராளமான கைகளுடன் தன்னுடைய பக்தியின் நிமித்தம் செலுத்தப்பட்ட காணிக்கையை காண்பிக்கிறது."( Reprint 2620)

இந்த உயர்ந்த மனிதன், ரோம சமுதாயத்தில் மிகவும் பரவலாக இருந்த யூத மதம், புறமதத்திற்கு மேலாக இருந்ததை, மோசேயின் பிரமாணம் மற்றும் பழக்கவழக்கங்களை கண்டதினால், அவர் யூத சமுதாயத்தை உயர்த்துவதற்காக முற்பட்டிருக்கலாம். இயேசு அடிக்கடி கடிந்துக் கொண்ட வேதபாரகர், பரிசேயர்கள் மற்றும் சதுசேயர்களை போலிராத கபடற்ற, இறுமாப்பாக இல்லாத பல யூதர்கள் இருந்தார்கள். கப்பர்நகூமிலுள்ள ஜெப ஆலய தலைவன், யவீரின் குமாரத்தியை, இயேசு எழுப்பினார். (லூக்கா 8:41 ) எனவே, நூற்றுக்கு அதிபதி ஜனங்களின் நலனைக் கண்டறிந்து தன் சொந்த செலவில் கூட உதவி செய்யத் தயாராக இருந்தார்.

அவருடைய வேலைக்காரனுக்கு உதவி தேடுவது, ஒரு மென்மையான இருதயத்தைக் குறிக்கிறது. மத்தேயுவில் (மத்தேயு8:6) "குழந்தை" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை (Strong's 3816) வார்த்தையை அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த விளக்கத்தில் ஒரு அருமையான கருத்து இருக்கலாம். இவர் ஒரு யுத்த புருஷனைப் போல கடினமான மனிதர் அல்ல, மாறாக ஒரு மென்மையான மதிப்புக்குரிய தனிநபராக இருந்தார். மற்றவர்களுக்கும், யூதர்களுக்கும் மற்றும் அவருடைய வேலைக்காரர்களுக்கும் ஒரு ஆசீர்வாதமாக இருந்தார். இஸ்ரயேல் வீட்டிற்கு மட்டுமே செல்லவேண்டும் என்ற நடைமுறைக்கு விதிவிலக்காக இயேசு செய்த காரியம் வியக்கத்தக்கதாக உள்ளது. (மத்தேயு15:24காண்க)

யூத மூப்பர்களுடன் நூற்றுக்கு அதிபதியின் வீட்டிற்குச் சென்று அவருடைய வேலைக்காரனைக் குணமாக்க இயேசு ஒப்புக்கொண்டார். "வீட்டுக்குச் சமீபமான போது, நூற்றுக்கு அதிபதி தன் சிநேகிதரை நோக்கி - நீங்கள் அவரிடத்தில் போய், ஆண்டவரே, நீர் வருத்தப்பட வேண்டாம், நீர் என் வீட்டு வாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல, நான் உம்மிடத்தில்

வரவும் என்னைப் பாத்திரனாக எண்ணவில்லை, ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்." (லூக்கா 7:6,7) என்று சொன்னார். வேலைக்காரர்களை காட்டிலும் அவருடைய நண்பர்களை இயேசுவிடம் அனுப்பியது, அவர் இயேசுவின் மேல் வைத்திருந்த ஒரு மரியாதைக்குரிய அடையாளமாக இருந்தது. இயேசு செய்யக்கூடிய உதவிக்கு, அவர் தகுதியுள்ளவர் என்று முன்பு மூப்பர்கள் கூறினார்கள். ஆனால் அவர் தன்னுடைய நிலையை தாழ்த்தி எண்ணும் போது, இயேசு தம்முடைய வீட்டிற்குள் வருவதற்கு அவர் தகுதியற்றவர் என்பதை அவர் உணர்ந்தார்.

அவருடைய பதிலை கண்டு, இயேசு வியந்துப்போனார். "இயேசு இவைகளைக் கேட்டு அவனைக் குறித்து ஆச்சரியப்பட்டு, திரும்பி, தமக்குப் பின்செல்லுகிற திரளான ஜனங்களை நோக்கி, இஸ்ரயேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்." (லூக்கா7:9 ) ஆண்டவர் வியந்துபோன மற்ற ஒரே நிகழ்வு அவிசுவாசமாகும். "அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டு..."(மாற்கு 6:6) நியாயப்பிரமாணத்தை அறியாத ஒருவருக்குள், அத்தகைய விசுவாசத்தை கண்ட இயேசு எதிர்பாராத மகிழ்ச்சி அடைந்தார்.

"அனுப்பப்பட்டவர்கள் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது, வியாதியாய்க் கிடந்த வேலைக்காரன் சுகமடைந்திருக்கிறதைக் கண்டார்கள்" (வசனம் 10) விசுவாசத்திற்கு, இயேசுவின் அற்புதமான பதிலை, இந்த எளிமையான வாக்கியம் விவரிக்கிறது.

இயேசு மற்றும் நூற்றுக்கு அதிபதிக்கு இடையே நடந்த பரிமாற்றத்தில் சில அர்த்தமுள்ள பாடங்கள் உள்ளது. முதலாவது, விசுவாசத்தின் வெளிப்பாடுகளுக்கு இயேசு சாதகமாக பதில் அளித்தார். அவைகள் அவருக்கு மகிழ்ச்சியை தந்தது. இரண்டாவது, மற்றவர்களையும் அதிலும் முக்கியமான சமுதாயத்தில் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களையும் ஜனங்கள் எவ்வாறு நடத்தியுள்ளார்கள் என்பதில் அவர்களின் நற்குணங்கள் வெளிப்படுகிறது. அன்பும், நற்செயல்களும் கனிவான மற்றும் அன்பான இருதயத்தின் வெளிப்பாடுகள். மூன்றாவதாக, மற்றொரு எடுத்துக்காட்டிலும், தேவன் மனத்தாழ்மையின் முக்கியத்துவத்தை வேதவசனங்கள் வழியாக வெளிப்படுத்துகிறார். இது தேவனுடைய ஆசீர்வாதங்களையும், கொடைகளைப் பெறவும் ஆயத்தம் செய்யும்.

**பரிசேயனும் பாவியான ஸ்திரீயும்**

ஒரு முறை, இயேசு சீமோன் என்கிற பரிசேயன் வீட்டில் விருந்துக்கு அழைக்கப்பட்டார். (லூக்கா 7:36-50 ) சீமோனின் நோக்கம் தெளிவாக இல்லை. மேலும் அங்கு நடந்த உரையாடலில், தீர்ப்பு மற்றும் மன்னிப்பைப் பற்றிய ஒரு அர்த்தமுள்ள விவாதத்தை கேட்கிறோம். விருந்தின் போது, "பாவியாகிய ஒரு ஸ்திரீ" (வசனம் 37))என்று பெயரிடப்பட்ட ஒரு ஸ்திரீ, அழையா விருந்தாளியாக, வெள்ளைக் கல் பரணியோடு அங்கு வந்தாள். அவள்" அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுது கொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து பரிமளதைலத்தைப் பூசினாள்."(வசனம் 38) அவளுடைய கண்ணீர் குற்றம் உணர்ந்த மனப்பான்மையை வெளிப்படுத்தியிருக்கலாம். பாவம் செய்தவர்களுக்கும் அடிக்கடி இரக்கம் காட்டுபவருக்கும், மன்னிப்பிற்கான நம்பிக்கையை சிறிது சிறிதாக வழங்கியவருக்கும், மரியாதை செலுத்தும் விதமாக இவள் தைலம் பூசினாள்.

பரிசேயரின் வீட்டில் அவளது வருகை, பொருத்தமற்றதாக தோன்றுகிறது. ஆயினும், அங்கு அவளுக்கு வரவேற்பு கிடைக்காது என்று அவள் அறிந்திருந்தும் , அங்கு அவள் வந்தாள். அவள் ஒரு வேசியாக இருந்ததாக சிலர் கூறினர். "பாவி"(Strong's 268) என்ற கிரேக்க வார்த்தை, பொதுவாக பாவிகளுக்கு பயன்படுத்தப்பட்டதே தவிர, குறிப்பாக வேசிகளுக்கு மட்டும் பயன்படுத்தப்படவில்லை. (மத்தேயு 9:10, லூக்கா 6:32, கலாத்தியர் 2:15 வசனங்களை காண்க) ஆயினும், பாவியான ஒரு ஸ்திரீ என்று விவரிக்கப்படுவதினால், அந்த ஸ்தீரியின் முந்தய ஒழுக்கக்கேடான வாழ்க்கை முறையை, இந்த கருத்து ஆதரிக்கலாம்.

இந்த ஸ்திரீ மகதலேனா மரியாளாக இருக்கக்கூடும் என்று சிலர் கருதுகிறார்கள். ஆனால் இதற்கு சிறிதளவே ஆதரவு உள்ளது. பெரும்பாலான அறிஞர்கள் இக்கருத்தை நிராகரித்துள்ளனர். ஒரு தெய்வீக இரக்கத்தினால், இயேசுவின் பாதங்களைக் கழுவின அந்த பாவியின் பெயர் குறிப்பிடப்படாமல் இருக்கலாம். ஆயினும்கூட, அவள் எப்படிப்பட்ட ஒரு பாரம்பரியத்தை விட்டுச் சென்றிருக்கிறாள். பாரார் அந்த காட்சியை பற்றிய ஒரு அருமையான விளக்கத்தை வழங்குகிறார்.

"அவள் தேடலின் பொருள் கண்டுபிடிக்கப்பட்டது, அவர் பின்னால், மிக தாழ்மையுடன் நின்றாள், அவரை குறித்தும், அவள் விழுகையைக் குறித்தும் நினைத்து

பார்த்தாள் - அவருடைய கறையற்ற, பாவமில்லாத பரிசுத்தமான இளம் தீர்க்கதரிசியின் வாழ்க்கையையும், தன்னுடைய சீரழிந்த, அவமானத்திற்குரிய வாழ்க்கைகயையும் நினைத்தாள். அவள் அழுதாள், அவளுடைய கண்ணீர் பாதரட்சை இல்லாத அவருடைய பாதத்தில் மடமடவென விழுந்தது. அவள் மேலுள்ள குழப்பத்தையும், அவமானத்தையும் மறைக்க அவள் கொஞ்சம் கொஞ்சமாக குனிந்தாள். அத்தகைய ஒருவரின் தொடுதலுக்கும், அவளுடைய கண்ணீருக்கும் பிற்பாடு பரிசேயன் திகிலுடன் அங்கிருந்து சென்றிருப்பார், அவர் அருவருக்கத்தக்க மாசுபாட்டை துடைத்துவிட்டிருப்பார். சாபத்தோடு ஊடுருவியிருப்பதை துரத்திவிட்டிருப்பார். ஆனால் இயேசு அவளை அப்படி நடத்துவதில்லை என்பதை உள்ளுணர்வாக உணர்ந்திருந்தாள், அவருடைய மிக உயர்ந்த பாவமற்ற தன்மையும் ஆழ்ந்த பரிவுள்ள தன்மையையே அவள் உணர்ந்திருந்தாள், அவள் சக பாவிகளுடைய கடும் மதிப்பு எப்பொழுது தடுத்து நீக்கப்படுகிறதோ, அவளுடைய இரட்சகரின் பரிபூரண பரிசுத்தம் கிடைக்கும் என்பதை அவள் கண்டாள். வருத்தப்பட்டு பாரம் சுமப்போரே என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்னும் அந்த நாளில் கூறிவந்த அந்த எண்ணற்ற மென்மையான, கருணையுள்ள வார்த்தைகளை அவள் கேள்விப்பட்டிருக்கலாம். (The Life of Christ, Frederic Farrar, page 237). "அவரை அழைத்த பரிசேயன் அதைக் கண்டபோது, இவர் தீர்க்கதரிசியாயிருந்தால் தம்மைத் தொடுகிற ஸ்திரீ இன்னாளென்றும் இப்படிப்பட்டவளென்றும் அறிந்திருப்பார், இவள் பாவியாயிருக்கிறாளே என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்" (லூக்கா7:39 ) அந்த பெண்ணை சீமோன் கண்டவிதத்திற்கும், நம்முடைய ஆண்டவர் கண்டவிதத்திற்கும் ஒரு குறிப்பிட்ட வேறுபாடு உள்ளது. சீமோன் அவளுடைய பாவத்தை மட்டுமே கண்டார். மேலும் அவளுடைய தொடுதல் அவளுக்கு எவ்வாறு களங்கத்தை ஏற்படுத்தும் என்றும் யோசித்தார். இயேசு அவளுடைய நொருங்கிய, மனம் வருந்திய இருதயத்தையும், மன்னிப்பு தேடி, அவளுடைய அன்பை வெளிப்படுத்த விரும்பியதையும் அவர் கண்டார். சீமோனின் நியாயந்தீர்க்கும் மனப்பான்மை, இயேசுவின் இரக்கமுள்ள இருதயத்திற்கு முன் தரம் குறைந்தது. நம்முடைய ஆண்டவர் நம்முடைய பாவ இயல்புக்கு அப்பாற்பட்ட இருதயத்தை வாசிக்கக்கூடியவராக இருப்பதற்கு நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாய் இருக்கவேண்டும். அவருடைய விருந்தினராக வந்த இயேசுவுக்கு, வழக்கமாக செய்யப்படும் எந்த அன்பின் வெளிப்பாட்டையும் சீமோன் செய்யவில்லை. சீமோனுடைய அலட்சியத்தை கண்ட இயேசு,"ஸ்திரீயினிடமாய்த் திரும்பி, சீமோனை நோக்கி - இந்த ஸ்திரீயைப் பார்க்கிறாயே, நான் உன் வீட்டில் பிரவேசித்தேன், நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை, இவளோ, கண்ணீரினால் என் கால்களை நனைத்து, தன் தலைமயிரினால் அவைகளைத் துடைத்தாள். நீ என்னை முத்தஞ்செய்யவில்லை, இவளோ, நான் உட்பிரவேசித்தது முதல், என் பாதங்களை ஓயாமல் முத்தஞ்செய்தாள். நீ என் தலையில் எண்ணெய் பூசவில்லை, இவளோ என் பாதங்களில் பரிமளதைலம் பூசினாள்." என்றார். (லூக்கா 7:44-46)

இந்த விருந்தோம்பல்களை சீமோன் வழங்கவேண்டியதாக இருந்தது. ஆனால் அவருக்கு பதிலாக அந்த ஸ்திரீ வழங்கினாள். சீமோன் மற்றும் அந்த ஸ்திரீக்கும் இடையில் ஏன் இவ்வளவு வேறுபாடுகள் என்பதை இயேசு அறிந்திருந்தார். அதனுடைய உள்நோக்கத்தை ஒரு சிறிய உவமையில் அவர் வெளிப்படுத்தினார். "அப்பொழுது அவர் - ஒருவனிடத்தில் இரண்டுபேர் கடன்பட்டிருந்தார்கள். ஒருவன் ஐந்நூறு வெள்ளிக்காசும், மற்றவன் ஐம்பது வெள்ளிக்காசும் கொடுக்கவேண்டியதாயிருந்தது. கொடுக்க அவர்களுக்கு நிர்வாகமில்லாதபோது, இருவருக்கும் கடனை மன்னித்துவிட்டான். இப்படியிருக்க, அவர்களில் எவன் அவனிடத்தில் அதிக அன்பாயிருப்பான் ? அதைச் சொல் என்றார். சீமோன் பிரதியுத்தரமாக - எவனுக்கு அதிகமாய் மன்னித்துவிட்டானோ அவனே அதிக அன்பாயிருப்பான் என்று நினைக்கிறேன் என்றான், அதற்கு அவர் சரியாய் நிதானித்தாய் என்று சொன்னார்." (லூக்கா 7:41-43)

தன்னுடைய சொந்த குறைபாட்டை எவ்வாறு விவரிக்கிறது என்று சீமோனால் புரிந்துக் கொள்ள முடியவில்லை. பரிசேயனாக இருந்த அவருக்கு, இரக்கம் மற்றும் மன்னிப்பு தேவை என்பதை அவரால் நம்ப முடியவில்லை. ஆனால் அவளுக்கு ஒரு இரட்சகர் தேவை என்பதை அந்த ஸ்திரீ அறிந்திருந்தாள். அவளே "ஐந்நூறு வெள்ளிக்காசுகள்" கடன்பட்டிருந்தவள். அவளுக்கு அதிகமாக மன்னிக்கப்பட்டது. உவமையில், இயேசு கடனை மன்னித்ததற்கான பாராட்டை, கடன் கொடுத்தவர் மீதான அன்போடு கோர்க்கிறார், இது ஏற்ற பிரதியுத்தரமாகும். பாவத்திற்கான பிராயச்சித்தத்தைப் பெற்ற ஒவ்வொரு தேவனுடைய பிள்ளைகளுக்கு இது ஒரு முக்கியமான பாடமாகும். கிருபையாக மன்னிப்பை வழங்கியவருக்கு, இயல்பாகவே அன்பை பதிலாக அளிக்கவேண்டும்.

இந்த உவமைக்கு சீமோன் பதில் அளித்தது

போல வசனங்கள் விவரிக்கவில்லை. அவர் சாதகமாக பதிலளிக்கவில்லை என்று இது கருதுகிறது. ஆனால், இதுபோன்று மற்ற அநேக சந்தர்ப்பங்களில், எதிர்கால நேரங்களில் இதை பாடமாக படித்து , கட்டளை பெறுபவர்களுக்கு அதிக நன்மை உண்டு. சீமோன் தீர்ப்பு வழங்குபவராக இருந்தார். இயேசு இரக்கமுள்ளவராக இருந்தார். சீமோன் இறுமாப்புள்ளவராக இருந்தார்.அந்த ஸ்திரீ தாழ்மையுள்ளவளாக இருந்தாள். சீமோன் தனக்கு தேவைப்படும் மன்னிப்பை காணாதவராக இருந்தார். அதற்காக அந்த ஸ்திரீ ஏங்கினாள். ஆண்டவர் தனது ஜனங்களாக இருப்பவர்களின் இருதயங்களில் என்ன தேடுகிறார் என்பதை, இந்த அனுபவத்திலிருந்து தெளிவாகிறது. மனம் வருந்திய ஸ்திரீயை நோக்கி நம்முடைய ஆண்டவரின் இறுதி வார்த்தைகள் - "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது, என்றர். ..... உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ என்றார்" (லூக்கா 7:48,50) இந்த அன்பான வார்த்தைகளிலிருந்து அவள் எப்படிப்பட்ட ஆறுதலைப் பெற்றிருப்பாள். ஆனால் அவைகள் இரக்கத்தின் வெளிப்பாட்டை விட அதிகமாக இருந்தது. இவைகள் அனைவருக்காகவும், பரிசேயனாகிய சீமோனுக்கும், நிறைவேற்றவேண்டிய இரட்சிப்பின் வேலைக்கான அறிகுறியாக இருந்தது.

**ஒரு பொதுவான ஆய்வு**

இந்த நான்கு நபர்களுடன் இயேசு கொண்டிருந்த சுருக்கமான உரையாடல்கள் அறிவொளியூட்டக்கூடியதாக இருக்கிறது. இயேசு இவர்களை ஆசீர்வதிபதற்கு ஊக்குவித்த ஒரு பொதுவான கருப்பொருள் காணப்படுகிறது. அவருடைய நிலைப்பாட்டில் உள்ள பல தலைவர்களைப் போலன்றி, நிக்கொதேமு நேர்மையான கேள்விகளோடு, திறந்த மனதுடன் வந்தார்.

இதன் விளைவாக, பரலோக இராஜ்யத்தில் பங்குகொள்வதற்கான அறிவைப் பெற்றுக்கொண்டார். பாவத்திற்கு பலியாக அவர் எப்படி உயர்த்தப்படுவார் என்ற செய்தியை இயேசு அவரிடம் பகிரங்கமாக பகிர்ந்துக்கொண்டார். இந்த பெரிய சத்தியங்களைச் செயல்படுத்த நிக்கொதேமுவுக்கு நேரம் எடுத்தாலும், அவற்றை அவர் ஒருமுறை புரிந்துக்கொண்டபின், அவர் அளவிற்கு மீறி ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்.

அந்த சமாரிய ஸ்திரீ இஸ்ரயேலை சேர்ந்தவள் அல்ல, ஆயினும் இயேசு அவளிடம் பேசும் போது எந்த தவறான அபிப்ராயத்தையும் காட்டவில்லை. அவருடைய செய்தியை எளிதாக நம்புதற்கான அவளுடைய திறனை அவர் பார்த்து, மீண்டும் ஒருபோதும் தாகம் எடுக்காதபடிக்கு ஜீவ தண்ணீரை எப்படி பருகவேண்டும் என்று அவளுக்கு அறிவித்தார். அவள் அவருக்கு உடனடியாக செவிக்கொடுத்து, அந்த செய்தியை அவளுடைய குடும்பம் மற்றும் நண்பர்களுடன் பகிர்ந்துக்கொண்டாள்.

நூற்றுக்கு அதிபதி மற்றவர்கள் மீது அக்கறைக்கொண்ட ஒரு நல்ல மனிதராக இருந்தார். சாதாரண சூழ்நிலையில், அவருக்கு எதிரிகளாக இருந்திருக்கும், ஜனங்களுக்காக ஒரு ஜெப ஆலயத்தை கட்டிக்கொடுத்த ஒரு தாராள மனப்பான்மை உள்ளவராக இருந்தார். தாழ்ந்த நிலையில் உள்ள வேலைக்காரருக்கு அவர் காட்டின அக்கறை, இயேசுவிடம் உதவி வேண்டினார். அவர் பெற்ற அதிகாரம் ஜனங்களைப் பற்றிய அவருடைய பார்வையை சிதைக்காமல், அவருடைய வளங்களை பயன்படுத்தி, அவர்களை ஆசீர்வதிக்க அனுமதித்தது.

பாவியான அந்த ஸ்திரீ குற்றமுணர்ந்த வருத்தத்தை அதிகமாக வெளிப்படுத்தினாள். அவளுடைய அன்பை இயேசுவின் பாதத்தில் ஊற்றி, அவருடைய அன்பையும் ஊக்கமளிக்கும் கனிவான வார்த்தைகளையும், மன்னிப்பையும் பெற்றுக்கொண்டாள். அவள் மனந்திரும்புதலுக்கு ஒரு மாதிரியாக இருந்தாள்.

இந்த சுருக்கமான சந்திப்புகளில், நம்முடைய ஆண்டவர் உயர்வாக மதிப்பிடுகிற குணங்களை நமக்கு காட்டியுள்ளார் - நேர்மையான மற்றும் திறந்த இருதயங்கள், நம்ப தயாரான மனம் மற்றும் தன்னை தாழ்மையாக எண்ணக்கூடிய எண்ணங்கள், மற்றவர்களை கவனித்தல் மற்றும் அக்கறை காட்டுதல், கிறிஸ்துவின் சிந்தனையாகும். இந்த விலைமதிப்பற்ற நபர்களைப் பற்றி நாம் சிந்திக்கையில், அவர்களை போல நம்முடைய எஜமானன் நம்மை தொட்டதினால், நம்முடைய இருதயங்களில் நன்றியுணர்வை வளர்த்துக்கொள்வோம். ஆண்டவரையும் அவருடைய ஆவியையும் தேடுவதற்கு தொடர்ந்து முயற்சிப்போம்.

### கிறிஸ்துவின் வாழ்க்கை நமக்கு என்ன செய்திருக்கிறது

# கிறிஸ்துவுக்குள் நம்முடைய நன்மைகள்



"கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்." (சங்கீதம் 116:12)

கிறிஸ்துவின் வாழ்க்கை நமக்கு என்ன செய்திருக்கிறது

**கிறிஸ்துவுக்குள் நம்முடைய நன்மைகள்**

"கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்." (சங்கீதம் 116:12)

நம்முடைய ஆண்டவரின் பலி இல்லாமல், ஜீவனை பெறக்கூடிய நம்பிக்கை நிச்சயமாக இருந்திருக்காது. ஆனால் நம்பிக்கை வல்லமையுள்ளது. விசேஷமாக தேவனுடைய திட்டத்தினால் ஊக்குவிக்கப்படும்போது, "பரிசுத்தஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவார்."(ரோமர் 15:13) நாம் தேவனையும் அவருடைய திட்டத்தையும் உண்மையாக நம்பினால், அதன் விளைவாக மகிழ்ச்சியையும், சமாதானத்தையும் அடையலாம். சகலமும் அவர் கையில் இருப்பதை நாம் புரிந்துக்கொண்டபடியால், நாம் சமாதானம் பெற்றுள்ளோம். மேலும், இறுதியாக அனைவரையும் ஆசீர்வதிப்பதே அவருடைய நோக்கம் என்பதை நாம் அறிந்திருக்கிறபடியால் நாம் மகிழ்ச்சியைப் பெற்றுள்ளோம்.

**கிறிஸ்துவின் ஈடுபலி நம்பிக்கை அளிக்கிறது**

மரணம் எப்போதுமே மனுக்குலத்திற்கு எதிர்ப்பார்க்கப்பட்ட முடிவாக இருக்கவில்லை. மனித அனுபவத்தின் துவக்கத்தில், ஆதாம் மற்றும் ஏவாள் மரண பயமின்றி சிருஷ்டிக்கப்பட்டார்கள். மரணம் சாத்தியமாக இருந்தபோதிலும், அவர்கள் தேவனுக்கு கீழ்படியாமல் பாவம் செய்த வரையில் அது உண்மையாக நடக்கவில்லை. (ஆதியாகமம் 2:17, 3:17-19) ஆதாமும் அவருடைய சந்ததியும் நித்தியமாக ஜீவனை சந்தோஷமாக அனுபவிப்பதற்கு, ஆதாம் செய்த ஆதி பாவம் அவர்களுக்கு தடையாக இருந்தது. ஆதி பாவத்தை ஈடுசெய்வதற்கான விலைகிரயம் தோன்றுவதற்கு சுமார் நாலாயிரம் வருடங்கள் வரையில், மனுக்குலம் பாவத்தினால் கீழ்நோக்கி சென்றுக்கொண்டிருந்தது. தெய்வீக நீதியின் அளவை சமநிலைப்படுத்தும்போது, வாழ்வதற்கான ஒரு வாய்ப்பளிக்கப்படும். (1கொரிந்தியர் **15:22** ) நம்முடைய ஆண்டவரின் பரிபூரணமான மனிதநேயம், பரிபூரணமான மனுஷனாகிய ஆதாமுக்கு சரிநிகர் சமான விலையாக இருந்தது. (ரோமர் 5:17,18) நம்முடைய ஆண்டவரின் அங்கீகரிக்கப்பட்ட பலி, இப்பொழுது மனுக்குலத்தின் எதிர்காலத்திற்கான பெரும் நம்பிக்கையை தந்துள்ளது.

**நீதிமானாக்கப்படுதல்**

நீதிமானாக்கப்படுதல் ஒரு வேத வாக்கியம். இதை "நீதியுள்ள உச்சரிப்பின் செயல்" என்று *Vines Dictionary*(page 284) வரையறுக்கிறது. நீதிமான்களாக கருதப்படுவதற்கு தேவன் ஒரு தரநிலையை ஸ்தாபித்தார். கீழ்படியாமையின் காரணத்தினால், அவர் ஆதாமையும் அவருடைய சந்ததியாரையும் அநீதியானவர்கள் என்று அறிவித்தார். எனவே தேவன் மட்டுமே ஒருவரை நீதிமானாக அறிவிக்க முடியும். (ஆதியாகமம் 3:17-19 ) தேவனுடைய பார்வையில் நீதிமானாக்கப்பட்டால் மட்டுமே, நீதி மற்றும் ஜீவனுக்கான ஒரே வழியைப் பெறமுடியும்." இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். அவர் மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவமகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம்."(ரோமர் 5:1,2 )நீதிமானாக்கப்படும் நிலையை வழங்குவதற்கு முன், நீதிமானாக்கப்படுவதற்கான விசுவாசமே, தேவன் முன் வைக்கும் நிபந்தனையாகும். "இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே."(ரோமர் 5:9 )

நீதிமானாக்கப்படுதலுக்கு, கிறிஸ்துவின் இரத்தத்தின் மேலுள்ள விசுவாசம் அவசியம் தேவைப்படுகிறது. இது ஆதாமின் பாவத்திற்காக

நம்முடைய ஆண்டவரின் தியாக பலி முழுமையாக ஈடுசெய்தது என்ற இருதயப்பூர்வமான நம்பிக்கையை விவரிக்கிறது. இந்த நீதிமானாக்கப்பட்ட நிலை, நம்முடைய பரலோக தந்தையுடன் ஒரு சமாதானத் தையும், "நாம் நிற்கக்கூடிய இந்த கிருபாசனத்திற்கும்" நடத்துகிறது.

இந்த நீதிமானாக்கப்பட்ட நிலை, ஒரு உண்மையான பரிபூரண நிலை அல்ல. ஒரு அப்பூரணமான ஜீவி, தேவனுக்கு முன் எவ்வாறு நீதிமானாக இருக்க முடியும் என்பதை விவரிக்க, சில நேரங்களில் "நீதிமானாக எண்ணப்படுதல்" என்ற சொற்றொடர் பயன்படுத்தப்ப டுகிறது. உண்மையான நீதிமானாகிய தனிநபருக்கும், தனிப்பட்ட நபரின் பாவங்கள், கிறிஸ்துவின் இரத்தத்தினால் மூடப்பட்டு, நீதிமானாக எண்ணப்படு வதற்கும் இடையில் ஒரு வித்தியாசம் காணப்படுகிறது. இறுதியாக ஒருவரை உண்மையான நீதிமானாக கொண்டுவருவதே, நீதிமானாக எண்ணப்படுதலின் முக்கிய நோக்கமாகும். இந்நிலையை ஒருவர் திரைக்கு அப்பால் பெறுவார்.

**எங்கள் ஊக்கமான பாரம்பரியம்**

கிறிஸ்தவ குணநலன்களில் நிறைவான வளர்ச்சிப் பெற, ஒவ்வொருவருக்கும் தேவனுடைய வழிகாட்டுதலும் அறிவுரைகளும் அவசியம் தேவைப்படுகிறது. இயேசுவின் ஈடுபலி நம்முடைய நீதிமானாக்கப்படுதலை சாத்தியமாக்கினதால், இந்த ஒரு உதவி இப்போது நமக்கு கிடைத்துள்ளது. நாம் கொண்டிருக்கும் மிக பெரிய நன்மைகளில் இது ஒன்று. இப்போது பரிசுத்த கொள்கைகளை புரிந்துக்கொள்தவன் வழியாகவும், தேவனுடைய வார்த்தைகளில், பிரதிபலிக்கக்கூடிய அவருடைய குணநலன்களின் வழியாகவும் நாம் வளரலாம்.

இந்த செயல்முறை அப்போஸ்தலரால் விவரிக்கப்படுகிறது : "நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும்," (எபேசியர் 3:16 ) தேவனுடைய ஆவி பல வழிகளில் கிரியை செய்கிறது. "அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்." (எபேசியர் 1:14 ) நாம் இப்போது நீதிமான்களாக்கப்பட்டு, அவரால் ஏற்றுகொள்ளப்ப டுகிறோம் என்பதை நமக்குள் வாசமாயிருக்கும் தேவனுடைய ஆவியே, அவருடைய அங்கீகரிப்பை அல்லது "முத்திரை"குறிப்பிடுகிறது. இது நம்மை தேவனுடைய குமாரர்களாகவும், குமாரத்திகளாகவும் இருப்பதற்கான உறவைத் தருகிறது.

நம்முடைய எதிர்கால சுதந்திரத்திற்கு, பரிசுத்த ஆவி ஒரு "வாக்குறுதியாகவும்" (Strong's # 728), உள்ளது. நாம் கிறிஸ்துவின் மணவாட்டியாக வளர்ச்சி அடையும்போது, தேவனுடைய தாக்கம் நம் வழியாக மிகுந்த மகிமை அடையும். "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்." (யோவான் 14:12 ) நம்முடைய ஆண்டவர் நடப்பித்த கிரியைகளைக் காட்டிலும் மேலான கிரியைகள், நம்முடைய எதிர்கால சுதந்தரத்தின் பங்காக இருக்கும். இயேசு மரித்தோரை எழுப்பினதைவிட மேலான வேலையை கற்பனை செய்து பார்ப்பது மிக கடினாக உள்ளது.

ஆனால், சில நபர்களுக்கு மட்டுமே சுவிசேஷம் சென்றடையும்படிக்கும், இயேசுவின் ஊழியம் வெகு குறுகிய வருடங்களுக்கு வரையறுக் கப்பட்டிருந்தது. கர்த்தருடனான நமது எதிர்கால வேலைகளின் அளவானது உலகளாவியதாய், இதுவரை வாழ்ந்த ஒவ்வொரு மனிதனையும் தொடுவதாய் இருக்கும். மனிதனுடைய நித்தியமான எதிர்காலம் வரைக்கும் நீடித்திருக்குபடி இது ஆயிரம் ஆண்டுகள் முழுவதிலும் ஒரு மகத்தான தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே, நம்முடைய "மேலான கிரியைகள்" நீண்ட காலம் மற்றும் பரந்த அளவில் இருக்கும். உண்மையுள்ள பரிசுத்தவான்களின் நற்செயல்களுக்கு எதிர்காலத்தில் வைக்கப்பட்டுள்ள வாய்ப்புக்கள் எப்படிப்பட்டதாக உள்ளது.

**ஆபிரகாமின் உடன்படிக்கை**

"நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத் தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்."(கலாத்தியர் 3:29) ஆபிரகாமின் சந்ததியின் ஒரு பகுதியாகும் சிலாக்கியமே ,உண்மையுள்ள சபை கிறிஸ்துவின் மூலம் பெறும் நன்மையாகும். இது கனத்திற்கும் மேலானது. இது ஒரு வேறுபாட்டை ஏற்படுத்தி, மனுக்குலத்தை மேம்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாகும். நம்முடைய மனித குடும்பத்தின் தோள்களின் மேலுள்ள பாவத்தின் சுமைகளை அகற்ற விரும்புவதால், இது ஒரு அற்புதமான முன்னோக்கை நமக்கு அளிக்கிறது. இந்த உலகத்தை மேம்படுத்துவதற்கு அநேக உன்னதமான ஜனங்கள் தங்களையே அர்ப்பணித்து உழைக்கிறார்கள். இவர்கள் முயற்சிகள் உண்மையில் பாராட்டத்தக்கவைகள்.

இருப்பினும், அவர்களின் முயற்சிகள் வெற்றி அடைந்தாலும், இந்த உலகம் தொடர்ந்து பாதிப்புக்குள்ளாகிறது, மரணம் இன்னும் நிலையாக உள்ளது. ஆபிரகாமின் வித்தில் பங்குகொள்வது என்பது இன்னும் அதிக அர்த்தம் உடையதாயும் ஆழ்ந்த விளைவுகளைக் கொண்டுவரும். இந்த வேறுபாடு மிகைப்படுத்தப்பட முடியாது. கிறிஸ்துவின் வேலை இந்த உலகத்தை மாற்றும். மரித்துகொண்டிருக்கும் மனித இனத்தை மறுபடியும் ஜீவனுக்கு கொண்டுவரும். இது தேவனால் மட்டுமே ஏற்படுத்தக்கூடிய ஒரு வாய்ப்பாக உள்ளது. ஆசீர்வாதத்தின் வித்தாக இருப்பதற்கு அவசியமான யாவற்றையும் செய்ய இது நம்மை தூண்ட வேண்டும்.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வித்தின் ஒரு பகுதியாக இருப்பதற்கு எந்தவொரு தேவைகளும், நியாயமானதும், அவசியமானதுமாக உள்ளது. கொடுங்கோலன்கள் ஆட்சிபுரியும் போது, அழிவுகரமான முடிவுகளை இந்த உலகம் கண்டிருக்கிறது. ஆனால், இத்தகைய வல்லமையின் மேல் பசியுள்ள நபர்களைப் போலன்றி, கிறிஸ்துவோடு ஆட்சி புரிபவர்கள் பெறும் அதிகாரமும் வல்லமையும் ஒருபோதும் தவறாக பயன்படுத்தப்படாமல், ஞானமாகவும், நீதியாகவும் மற்றும் நன்மைக்காகவும் பயன்படுத்தப்படும். இதற்கு நீதியை நேசிக்கூடிய மற்றும் அன்புக்குரிய வழிகளில் இராஜ்யத்தை நீதியோடு நிர்வாகிக்கும், ஆளும் குழுவினர் தேவைப்படுகிறது. வேலை மிக பெரிதாக இருப்பதால், அந்த நிலை உயர்த்தப்படுகிறது, கிறிஸ்தவ பண்புகளின் வளர்ச்சி மிக அவசிமாக தேவைப்படுகிறது. திரையின் இப்பக்கத்தில் நாம் பெறும் பயிற்சி, முக்கியமாக மற்றவர்களை ஆசீர்வதிக்கக்கூடிய வேலைக்காகவே உள்ளது.

இப்போது, இராஜ்யத்தின் வேலைக்காக இன்னும் தயார் செய்யப்படாத ஒரு தோட்டமாக சபை சித்தரிக்கப்படுகிறது. "என் சகோதரியே! என் மணவாளியே! நீ அடைக்கப்பட்ட தோட்டமும், மறைவு கட்டப்பட்ட நீரூற்றும், முத்திரிக்கப்பட்ட கிணறுமாயிருக்கிறாய்." (உன்னதப்பாட்டு 4:12) இன்னும் கொஞ்சம் நாட்களில், மணவாட்டி தனது பூமிக்குரிய ஓட்டத்தை முடித்துவிட்டால், கனிதரும் தோட்டமும், நீரூற்றும் திறக்கப்படும். அப்போது இயேசுவின் வார்த்தைகள் நிறைவடையும். "வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்." (யோவான் 7:38 ) ஆவியின் கனிகளை கொடுப்பதற்கு இது எப்படிப்பட்ட தூண்டுவிசையாக உள்ளது!

**கிறிஸ்தவ ஐக்கியம்**

"ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்." (கலாத்தியர் 6:2) கிறிஸ்தவ பயணம் பெரும்பாலும் சிரமமானது. சில நேரங்களில் இது மீனின் எதிர் நீச்சலுக்கு ஒப்பிடப்படுகிறது. நீதியுள்ள வாழ்க்கை மற்றும் சுயத்தை - தியாகம் செய்யும் வாழ்க்கை, இந்த உலகத்தின் போக்கிற்கு எதிரிடையானது. ஆண்டவர் நம்முடைய உருவம் இன்னதென்றும் (சங்கீதம் 103:14), அதே நெருக்கமான பாதையில் நடப்போரின் ஐக்கியம் நமக்கு எப்படி தேவைப்படும் என்றும் அவர் அறிந்திருக்கிறார். பலத்திற்காகவும், உற்சாகத்திற்காகவும் நாம் சகோதரர்கள் மேல் சாய்ந்து, அவர்களின் வழியாக கிறிஸ்துவை காண்கிறோம். கிறிஸ்தவ ஐக்கியத்தின் நன்மைகள் இரண்டு மடங்காகும். மற்றவர்களிடமிருந்து கிடைக்கும் ஆதரவு பெறுபவர்கள் இயல்பாகவே உயர்த்தப்படுவார்கள். ஆனால் ஆதரவளிப்பவர்களும், மற்றவர்களுக்கு சேவை செய்யும், கிறிஸ்துவைப் போன்ற குணநலன்களை வெளிப்படுத்தும் போது பெலனடைகிறார்கள். (யோவான் 13:14) இது கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுதல் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்கும்போது, அது ஒரு சட்டத்திற்கு இயந்திரத்தனமான கீழ்படிதலாக இராமல், அன்பின் நிமித்தமாக சேவைச் செய்யும் மதிப்பை புரிந்துக்கொள்வதன் மூலம் நடப்பிக்க வேண்டும். இருவகுப்பாரும் ஊக்குவிக்கப்பட்டு, அவர்களின் ஐக்கியம் மேலும் வலுவடைகிறது.

**அறுவடைகாலத்தின் வலிமை**

"நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்." (யோவான் 14:3) இயேசுவை தனிப்பட்ட விதமாக அறிந்தவர்களுக்கு இந்த வார்த்தைகள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. வேதாகம பக்கங்களின் வழியாகவும், அவரின் பலியின் ஜீவியத்தில் பங்கு கொள்வதின் வாயிலாகவும் அவர் நமக்கு மெய்யானவராக மாறுவார்.

நாம் ஒரு தனிப்பட்ட நேரத்தில் வாழ்கிறோம். நம் ஆண்டவரின் பிரசன்னம் பல கேள்விகளுக்கு

விடையளித்து, இராஜ்யத்திற்கான மற்றும் நாம் அவருடன் இருக்கவேண்டும் என்ற நம் விருப்பங்களையும், ஊக்குவிக்கிறது. இந்த அறுவடை, வரவிருக்கும் நீதியின் ஆட்சியின் வேலையில் பங்குப்பெற ஆயத்தத்திற்கு ஒரு வாய்ப்பளிக்கிறது. (மத்தேயு6:33)

ஆனால் இது துரிதமான நேரமாக உள்ளது.நமது வேலைகளிலிருந்து, நம்மை விலகிச் செல்வதற்கான பல கவனச்சிதறல்கள் முயலுகிறது. கோதுமை மற்றும் களைகள் உவமையைப் பற்றி இயேசுவின் இறுதி வார்த்தைகள் நம் கவனத்தை திசை திருப்பலாம் என்பதை நமக்கு நினைவூட்டுகின்றன. "அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்." (மத்தேயு13:43)

அதற்குபின் நம்முடைய குறிக்கோள், இந்த உலகத்தின் அனைத்து சத்தங்களை மூடிவைத்து விட்டு, அவருடைய அறிவுரைகளைக் கேட்டு, மிகச் சிறந்த முறையில் அவைகளை பின்பற்றக்கூடியவர்களாக இருக்கவேண்டும். சத்தியத்தின் செய்தி விசேஷமானது, அதை விசுவாசிக்கிறவர்களுக்கு ஒரு பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இந்த பிரச்சனை நிறைந்த நேரங்களில் இது ஆறுதலளிக்கலாம். எனவே, கேட்கக்கூடிய காதுகளை உடையவர்களோடு நாம் இவைகளை பகிர்ந்துக்கொள்கிறோம். ". நித்திரையை விட்டு எழுந்திருக்கத்தக்க வேளையாயிற்றென்று, நாம் காலத்தை அறிந்தவர்களாய், இப்படிநடக்கவேண்டும்; நாம் விசுவாசிகளானபோது இரட்சிப்பு சமீபமாயிருந்த தைப்பார்க்கிலும் இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது."(ரோமர் 13:11) நம்முடைய ஆண்டவரின் பலியின் காரணமாக நாம் பெறும் அருமையான பலன்களைப் பார்த்து, "நான் கர்த்தருக்கு என்னத்தைச் செலுத்துவேன் ? " என்று சங்கீதக்காரரோடு, நாமும் சேர்ந்து கேட்போம்.

**இயேசுவிலிருந்த நமது மரபுரிமை**

# இயேசுவின் கடைசி நாட்கள்



"நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். " (யோவான் *13:15*)

*Todd Alexander*

இயேசு தம்முடைய ஊழியத்தின் கடைசி நாட்களில் அவருடைய அப்போஸ்தலர்களுக்கும் (மற்றும் நமக்கும்) பல அழகான சத்தியத்தின் கோட்பாடுகளைக் கற்றுக்கொடுத்தார். பட்டுபோன அத்திமரம், மத்தேயு 24ல், அவருடைய வருகையைப் பற்றிய மகத்தான தீர்க்கதரிசனம், திருமண விருந்து, புத்தியுள்ள மற்றும் புத்தியில்லா கன்னிகைகள், தாலந்துகள், வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் பற்றிய உவமைகள், ஆலயம் சுத்திகரித்தல் மற்றும் இன்னும் பல. இந்த சத்தியங்கள் இயேசுவின் பரிணாமத்தின் ஒரு பகுதியாக இருந்தன, அவை அவருடைய பூமிக்குரிய ஊழியத்திலிருந்து தங்கள் தனிப்பட்ட ஊழியங்களுக்கும், அவற்றிலிருந்து சுவிசேஷகால சபைக்கும் முக்கியமான பாலங்களை அமைத்தது.

இயேசுவும் அவரது சீஷர்களின் இருதயத்தில் சத்தியத்தின் ஒரு வலிமையான பாரம்பரிய சொத்தை விட்டுச் சென்றார். அப்போஸ்தலர்கள் ஒவ்வொருவருக்கும் அவர் காட்டின கனிவான அக்கறையானது, இயேசுவின் அதிர்ச்சியூட்டும் மாற்றத்தினால் ஏற்பட்ட பிரிவையும், தங்களுடைய சொந்த தோல்வி அடைந்த எதிர்ப்பார்ப்புகளையும், தாங்கிக்கொள்ளும் திறனையும் அவர்களுக்கு தந்து, வளர்ந்து வரும் அவர்களின் ஊழியத்தையும் வெற்றியடைய செய்தது. இயேசு தம் அப்போஸ்தலர்களின் அனுபவங்களை தனிப் பயனாக்கினார். தன்னுடைய அப்போஸ்தலர்களின் அனுபவங்களை இயேசு ஒவ்வொருவருக்கு ஏற்றப்படி தனிப்பட்ட விதமாய் உருவாக்கினார். மேல் வீட்டில், விலைமதிப்பற்ற தருணத்தையும், மிக நெருக்கமான வார்த்தைகளையும் அவர் பகிர்ந்துக்கொண்டார். அவர் ஊழியத் தலைமைக்கும், தேவனுடைய சித்தத்திற்கு தத்தம் செய்வதற்கும் செயல் விளக்கம் அளித்தார். இது அப்போஸ்தலர்களை பலப்படுத்தி, வரவிருக்கும் கடும் வேதனையிலிருந்து பெந்தெகொஸ்தே நாள் வரையிலும் நடந்துச் செல்ல அனுமதித்தது.

இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களின் இருதயங்களில் பாரம்பரிய சொத்தாக, விட்டுச் சென்ற சில சத்தியங்களை இந்த கட்டுரை ஆராய்கிறது.

**வெள்ளைக் கல் பரணியைக் கொண்டிருந்த ஸ்திரி (மத்தேயு 26:6-13)**

தன்னிடம் உள்ள ஆதாரமாகிய ஒரு வரவேற்பு பரிசைக் கொண்டு,இயேசுவை வணங்க வேண்டும் என்று அந்த ஸ்திரீ விரும்பினாள். இதை இயேசு மிகுதியாக பாராட்டினார். இது வரவிருக்கும் புயலில் நிச்சயமாக அவருக்கு உதிவியிருக்கும். அவருடைய சீஷர்கள் எப்படி நடந்துக்கொண்டார்கள் ? அவர்களுடைய கருத்தில், இயேசுவின் மேல் அவள் வைத்திருந்த உணர்ச்சி ரீதியான பக்தி, காரணத்திற்கு அப்பாற்பட்டதாக இருந்தது. சிலர் கோபமடைந்தார்கள், சிலர் பணத்தை வீணாக்குவதைக் குறித்து கேள்வி எழுப்பினார்கள். ஆனாலும், இயேசு அவர்களிடம் பொறுமையாக இருந்து, சில நேரங்களில் வீண்செலவு குறிப்பிட்ட நோக்கத்திற்கு பயனுள்ளதாக இருக்கும் என்பதை அவர்கள் புரிந்துக்கொள்ள உதவிச் செய்தார். இது அப்படிப்பட்ட ஒரு காலமாக இருந்தது. அவரை அடக்கம் பண்ணுவதற்காக அவள் அவரை அபிஷேகம் செய்தாள்.

இந்த அபிஷேகம் முடிந்தவுடன் உடனடியாக யூதாஸ் காரியோத் பிரதான ஆசாரியர்களிடம் சென்றது தற்செயலான நிகழ்வு அல்ல. இயேசுவின் போதனை நிறைந்த வார்த்தைகள் யூதாஸின் இருதயத்தில் உள்ள கலகத்தை அடக்கவில்லை. அதற்குபதிலாக, அவரது சுய-சித்தம் தனது திட்டத்தை செயல்படுத்த தூண்டியது. ரோமை கவிழ்க்கும் வெறியராய்/ தீவிரவாதியாய் இருந்த தனது நோக்கத்திற்கு இந்த திட்டம் பயன் சேர்க்கும் என யூதாஸ் கருதியிருக்கக்கூடும். எல்லாம் அவருடைய கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது என்று அவர் நிச்சயமாக நம்பினார். யூதாஸ் சுயமாக இயக்கின பாவத்தை இயேசு அனுமதித்து, தம்முடைய சீஷர்களுக்கு முக்கியமான படிப்பினைகளை கற்பித்தார். நல்ல திட்டம் இருக்கலாம் என்று நினைத்தாலும் கூட, தேவனுடைய சித்தம் மட்டுமே செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தை அவர்கள் இந்த எடுத்துக்காட்டில் கண்டிருப்பார்கள்.

**பஸ்காவிற்கான ஆயத்தங்கள் (லூக்கா 22:7-13)**

இயேசு பேதுருவையும் யோவானையும் பஸ்காவை ஆயத்தப்படுத்தும்படி கேட்டுக்கொண்டார். அதற்கு அவர்கள் எந்த இடத்தில் என்ற கேட்டார்கள். இயேசு ஒரு மேல் வீட்டு அறையைப் பற்றியும், அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய மனிதரையும் பற்றி தெளிவான விவரங்களை அவர்களுக்கு அறிவித்தார் ! இயேசு முன்னறிவித்தபடி, காரியங்கள் நடந்ததை பேதுருவும், யோவானும் கண்டபோது நிச்சயமான அவர்கள் ஊக்குவிக்கப்பட்டு, உற்சாகமடைந்திருப்பார்கள். இந்த ஆயத்தவேலைகளில் முன்னோக்கி செல்வதற்கு, அவர்கள் இயேசுவின்மேல் வைத்திருந்த வெளிப்படையான நம்பிக்கையானது, அவர்கள் வேலையில் ஈடுப்பட்டிருந்ததை இயேசுவுக்கு காண்பித்தது. தயார்ப்படுத்துதலில் முன்னோக்கிச் செல்ல இயேசுவின் மேல் அவர்கள் கொண்ட வெளிப்படையான நம்பிக்கை, அவர்கள் ஈடுபாடு கொண்டிருக்கின்றனர் என இயேசுவிற்கு காண்பித்தது.

**பஸ்கா இராவிருந்து (லூக்கா 22:14-38)**

இயேசு தம் அன்றாட வாழ்க்கையில் கூச்சல்களிலிருந்து தூரமான ஒரு இடத்தை குறிப்பிட்டார். இது அப்போஸ்தலர்கள் எவருக்கும் கூட தொடர்பு இல்லாத இடமாக இருந்தது. அவருடைய சீஷர்களின் வீடுகளில் சிக்கிக்கொள்ளாதபடிக்கு (முன்கூட்டியே தீர்மானித்தபடி) இந்த நடுநிலையான இடம், பாதங்களை கழுவும் அனுபவத்தில் ஒரு ஊழியக்காரனாக தம்முடைய பங்கை மனதார ஏற்றுக்கொள்வதற்கு அனுமதியளித்தது.

அப்போஸ்தலர்கள் இயேசுவோடு பரிசுத்த மாக்கப்பட்டவர்களாய் (தனியாக பிரிக்கப்பட்டு), சுதந்திரமாய் பங்குகொள்ளவும் முழு அர்த்தமுள்ள அனுபவத்தை அடையும்படியான இடத்தில் இருந்தனர். அது அவர்களின் ஆண்டவரோடு இருக்கும், ஒரு கடைசி பாதுகாப்பான புகலிடமாக இருந்தது, ஒரு கூடு, தங்களது எதிர்கால ஊழியக்காலங்களில் வரும் கஷ்ட நேரத்திலும், வேதனை (அ) துன்ப நேரத்திலும் பிரதிபலிக்கக்கூடிய ஒரு பாதுகாக்கப்பட்ட அனுபவமாகும்.

தேவனுடைய இராஜ்யம் வரும் வரையில் உங்களோடு நான் புசிக்க மாட்டேன் என்று இயேசு சொன்னபோது, அவர்கள் பின்னர் புரிந்துக் கொள்ளும்படியாக, ஒரு இரகசியத்தை உருவாக்கினார். சந்தேகத்திற்கு இடமின்றி அவர் மீது அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கை நிச்சயமாக இயேசுவுக்கு ஆசீர்வாதமாக இருந்தது. அது அவர்களின் வளரும் முதிர்ச்சிக்கு அறிகுறியாகவும் இருந்தது. அந்த மாலை முடிந்த பின், இயேசுவோடு அவர்களது அன்பின் ஐக்கியத்தை கைப்பற்ற ஒரு வழியை ஆயத்தம் செய்யும்படிக்கும், தம்முடைய சீஷர்கள் தம்மை ஒரு தனிப்பட்ட நபராக ஞாபகம் வைத்துக்கொள்ளுவதற்கும், அப்பம் மற்றும் பாத்திரத்தோடு, ஒரு உறுதியான நினைவுக்கூருதலை இயேசு அவர்களுக்கு கொடுத்தார். இயேசுவை பின்பற்றுவதில் உள்ள மகிழ்ச்சியிலும் துயரத்திலும் பங்குகொள்ள இது ஒரு வழியாக இருந்தது.

இயேசு சிலுவையில் தொங்கியபோது, 22ம் சங்கீதத்தின் ஒரு பகுதியை அவர் குறிப்பிட்டார்."என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்? எனக்கு உதவி செய்யாமலும், நான் கதறிச் சொல்லும் வார்த்தைகளைக் கேளாமலும் ஏன் தூரமாயிருக்கிறீர்?" (சங்கீதம் 22:1) இந்த முழு அதிகாரமும், ஆறு மணி நேரங்கள் இயேசுவின் உபத்திரவத்தின் போது அவர் கொண்டிருந்த சிந்தனைகளை பிரதிபலிக்கிறது.

அவருடைய உபத்திரவ சிந்தனைகளுக்கு மேலாக, அவருடைய யோசனைகள் 23ம் சங்கீதத்திலும் தொடருவதை போல காணப்படுகிறது. "நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும். என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது. என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன். "(சங்கீதம் 23:4-6) இயேசு புல்லுள்ள இடங்களுக்கும், அமர்ந்த தண்ணீர் அண்டைக்கும் நடத்தப்பட்டதுபோல, அதே புல்லுள்ள இடங்களுக்கும், அமர்ந்த தண்ணீர் அண்டைக்கும் அவர்களும் நடத்தப்படக்கூடிய ஆடுகளாக இருப்பதை சீஷர்கள் கண்டார்கள். இவர்களது தனிப்பட்ட ஊழியத்தில், இந்த இரண்டு காரியங்களும் (உபத்திரவம், புல்லுள்ள இடங்களுக்கு வழிநடத்தப்படுதல்) இணைவதற்கு முன், அதேபோல தொகுப்புள்ள அனுபவங்களைப் உட்புறமாக பெற்றுக்கொள்ள இப்போது வாய்ப்படைந்தார்கள், அதன் பின்னர் அவர்கள் எழுதப்பட்ட வார்த்தைகளினால் சுவிசேஷ யுக சபைக்கு அவைகளை அறிவித்தார்கள்.

**கால்களை கழுவுதல் (யோவான் 13:1-17)**

இந்த எளிய செயல் மூலம், இராஜ்யத்தில் யார் மிகப் பெரியவராக இருப்பார் என்ற சீஷர்களின் வாதத்திற்கு இயேசு பதில் அளித்தார். அவர் அவர்களை தண்டிக்கவோ அல்லது முட்டாள்களாக உணரவைக்கவோ முயலவில்லை. வெறுமனே அவர் தனது மேல் வஸ்திரத்தை கழற்றி, உலகபற்றிலிருந்து அவர்களை சுத்திகரிக்கக்கூடிய ஒரு பரிசுத்த வேலையை அவர் கருத்தில் கொண்டிருப்பதை காட்டினார். பாவத்திற்கு எதிரான போராட்டங்களில் ஒருவருக்கொருவர் எப்படி உதவுவது என்பதைக் காட்டும் ஒரு வழியாக, கால் - கழுவுதல், ஒரு தெளிவான (காணக்கூடிய) உவமையாக மாறியது. இயேசு யூதாஸின் கால்களையும் கழுவினார் என்பதையும், யூதாஸ் காட்டிக் கொடுக்கும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்னர் இயேசு அவரைப் பற்றி எதுவும் தவறாக பேசவில்லை என்பதையும் அவர்கள் நினைவில் வைத்திருப்பார்கள். இயேசு தம் அப்போஸ்தலர்களுக்கு முன் வைத்த முக்கியமான படிப்பினைகள் இவைகளே.

கால் கழுவுதலின் முடிவில், "நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா ? "(வசனம் 12) என்ற கேள்வியோடு இயேசு கற்பித்ததை கவனத்திற்கு கொண்டுவந்தார். அந்த கேள்வியோடு, அவர் செய்ததின் முக்கியத்துவத்தை சீஷர்கள் ஆழமாக சிந்திக்க அவர்களை ஏவினார். இது ஆதிகால சபையில் தலைவர் என்ற பதவிக்கு அவர்கள் ஆயத்தப்பட உதவியது. ஆயினும், யூதாஸ் இதற்குபதிலாக, அவருடைய தீர்மானத்தில், ஆண்டவரை காட்டிக் கொடுப்பதை தேர்ந்தெடுத்தார். இந்த சிறப்பு தருணங்களில், முன்மொழியப்படும் இத்தகைய ஆழ்ந்த கேள்விகள் நம்மை நிறுத்தி, சரியான பதிலைத் தேடச் செய்யவேண்டும். இராஜ்யத்தின் தலைமைக்கு ஒரு ஊழியக்காரரின் மனநிலை தேவைப்படுகிறது.

கால் கழுவுதல் நிறைவேறினபோது, "நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்." (வசனம் 17) என்று இயேசு கூறினார். எவ்வாறு சேவை செய்யவேண்டும் என்பதன் அறிவு மிக முக்கியமாக இருந்தாலும், அந்த அறிவைப் பயன்படுத்தினால் மட்டுமே அவர்கள் பாக்கியவான்களாக இருக்கமுடியும். யூதாஸ் இந்த சத்தியத்தை நன்கு "அறிந்திருந்தார்", ஆனால் அவர் அதை சரியாக "பயன்படுத்தவில்லை". யூதாஸின் காட்டிக்கொடுத்தலை கவனித்த மற்ற அப்போஸ்தலர்கள், விசுவாசத்தைப் பற்றிய ஒரு முக்கியமான பாடத்தை கற்றுக்கொண்டனர். இவைகளை அறிந்துக்கொள்வதோடு மட்டும் அல்ல "இவைகளைச் செய்து" தங்கள் சொந்த விசுவாசத்தை வெளிப்படுத்த அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருக்கும்.

**உணவுக்குபின் நடந்த விவாதம் (யோவான் 14:1-31)**

உணவருந்திய பின் இயேசு பேசின வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்ட நெருங்கிய தொடர்பு, அவருடைய கடைசி நாட்களில் மிகச் சிறந்த தருணங்களில் ஒன்றாக இருந்திருக்கவேண்டும். அவருடைய அன்பான அறிவுரைகள், அவருடைய சீஷர்களின் மனதில் மதிப்புமிக்க நினைவுகளாக நிச்சயமாக பதிந்திருக்கும். அநேக வாசஸ்தலங்களை கொண்ட ஒரு புதிய வீட்டை இயேசு ஆயத்தப்படுத்துவார் என்ற நம்பிக்கை, அவர்கள் மேலும் முன்னேறி செல்ல, ஊக்கமளித்திருக்க வேண்டும். இயேசுவின் வருகைக்குரிய வாக்குறுதி, அவர்களுடைய

புதிய வீட்டைப் பற்றிய தடயங்களை தேடுவதற்கு, அவர்களுடைய நினைவுகள் திரும்பிச் சென்றிருக்கும்.

அவரே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார் என்றும் தம்முடைய பிதாவை அணுகுவதற்கான ஒரே வழி அவரே என்றும் இயேசு அவர்களிடம் கூறினார். இயேசு அவர்களின் விசுவாச கண்களினால் அவர்களை பிதாவோடு இணைத்தார், பிதாவின் ஆவிக்குரிய கொடைகளினால் அவருடைய வல்லமையை அவர்கள் உணர்ந்தார்கள். பரிசுத்த ஆவியின் வாக்குறுதி அவர்களை ஆறுதல்படுத்தி, சுவிசேஷத்தின் சத்தியங்களை அவர்களுக்கு கற்பிப்பதோடு, அவர்களுக்கு பகுத்துணரக்கூடிய வல்லமையையும் தருகிறது. சீஷர்கள் இயேசுவை நம்பி, அவருடைய வார்த்தைகளின் வல்லமையைப் பயன்படுத்தவும் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருந்தார்கள். அவர்கள் அப்படி செய்ததினால், அவர்கள் உலக போதனைகளிலிருந்த சத்தியத்தை வேறுபடுத்தி பார்க்க முடிந்தது. இயேசு தம்முடைய சீஷர்களுக்கு தமது சமாதானத்தை கொடுத்தார். பயம் அறியாமையிலருநிந்து வருவதால், அவர்கள் பயப்படக் கூடாது என்று அவர் விரும்பினார். அவர் அவர்களுக்கு சத்தியம் கொடுத்தார். அவர்கள் மகிழ்ச்சியோடிருப்பதற்கு அவர்களை ஊக்குவித்தார். தேவனுடைய முன்னேற்பாட்டில் உள்ள மகிழ்ச்சியைக் அவர்களுக்கு இயேசு காண்பித்தார். தேவனுடைய பராமரிப்பில் களிக்கூறவும், அதுவே ஒரு நல்ல இடமாக இருப்பதை அவர்களுக்கு காட்டினார்.

**திராட்சைச் செடி மற்றும் கிளைகள் (யோவான் 15:1-11)**

காணக்கூடாத காரியங்களை விசுவாசத்தின் கண்கள் தெளிவாக காண்பதற்கே, அப்போஸ்தலனாகிய பவுல் விசுவாசத்தின் பாடத்தை கற்பித்தார். (எபிரெயர் 11:1 ) திராட்சைச் செடி மற்றும் கிளைகளின் உவமையுடன் இயேசு இதை நிறைவேற்றினார். அவர்களுக்காக தேவன் கொண்டிருந்த கனிவான அக்கறையை வெளிப்படுத்துவதற்காக அவர் இந்த அழகிய உருவகத்தைப் பயன்படுத்தினார். (எதிர்காலத்தில் அவர்களுக்குள் காணப்படவேண்டிய நற்குணங்களின் வளர்ச்சி மற்றும் நற்பண்புகளின் வெளிப்பாட்டையும் உள்ளடக்கக்கூடியவை - களை நருக்குதல் மற்றும் கனிக்கொடுத்தல் போன்ற உதாரணங்களை இயேசு பயன்படுத்தினார். சீரமைத்தல் மற்றும் கனிக்கொடுத்தலின் உவமைகளை இயேசு பயன்படுத்தியதன் நோக்கம் அவர்களது எதிர்கால குணங்களின் வளர்ச்சியின் உள்ளான கிரியை மற்றும் வெளிவேளையான குணங்களின் கனிக்கொடுத்தலை உள்ளடக்கவே. கனிகள் கொடுப்பதே நோக்கம் என்று இயேசு வலியுறுத்தினார், மேலும் திராட்சைச் செடியில் அவர்கள் கொண்டிருக்கும் தொடர்பு, ஆவிக்குரிய பெலத்தை தந்து, அதிக வல்லமைக்கு உட்படுத்தும். அவர்கள் திராட்சைச் செடியினால் போஷிக்கப் படாவிட்டால், கனி கொடுக்கமாட்டார்கள். அதன்பிறகு அவர்கள் ஜீவன் பெற முடியாது. அவருடைய வார்த்தைகள் அவர்களுடைய வலிமைக்கு ஆதாரமாக இருந்தன, ஆகவே அவர்கள் அவருடன் நெருக்கமாக இருக்க வேண்டியது அவசியமாக இருந்தது. உண்மையான அன்புக்கு கீழ்ப்படிதல் அவசியம் என்று இயேசு அவர்களிடம் சொன்னார். தேவனுடைய அன்பு இடமாற்றப்படவேண்டும் என்று இயேசு வலியுறுத்தினார். முதலில் தேவனிடமிருந்து இயேசுவிடத்திற்கும், அதற்குபின் இயேசுவிடமிருந்து அவருடைய சீஷர்களிடத்திற்கும், அதன் பின் சீஷர்களிடமிருந்து மற்றவர்களிடத்திற்கும். இவர்கள் சுவிசேஷத்திற்கு செய்யக்கூடிய சேவையின் வழியாக தங்களுடைய வாழ்க்கையில் பெற்ற தேவ அன்பை விசுவாசத்துடன் வெளிப்படுத்துவார்கள்.

இறுதியாக, அவர்களுடைய மகிழ்ச்சி நிறைவாக இருப்பதே இயேசுவின் விருப்பம் என்று அவர் வெளிப்படுத்தினார். இந்த மகிழ்ச்சி, விசேஷமாக கடைசி நாட்களில், இயேசுவிடமிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய சத்தியங்களை புரிந்துக்கொண்டு அதை நடைமுறையப்படுத்துவதினால் மட்டுமே பெறக்கூடியதாகும்.

**கெத்செமனேயில் ஜெபம் (லூக்கா 22:39-47, மத்தேயு26:36-46, மாற்கு 14:31-54)**

அப்போஸ்தலர்கள் நன்கு அறிந்த ஒரு இடத்திற்கு இயேசு அழைத்துச் சென்றார். ஒலிவ மலை - விழித்திருந்து, ஜெபிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்கான இடமாக இருந்திருக்கும். ஜெபம், இயேசு விட்டுச்சென்ற ஒரு பரம்பரை சொத்தாக இருந்தது. விசேஷமாக அவர்களின் ஊழியங்களுக்கு ஒரு முக்கிய கருவியாக பயன்பட்டது. அவர்கள் விழித்திருந்து கவனிப்பதற்கு ஆயத்தமாக இருக்கவில்லை, ஆனால் அந்த பாத்திரத்தை அகற்றுவதற்கு, அவருடைய ஜெபத்தில் ஒரு சக்திவாய்ந்த காரியத்தை அவர்களுக்கு கற்பித்தார். தேவனுடைய சித்தம் சில சமயங்களில் அவர்களுடைய சித்தத்தை விட வித்தியாசமாக இருக்கும். தேவனுடைய சித்தம் தொலை நோக்குடையது. அவர்கள் அவரை நம்ப வேண்டும். ஒருவேளை இந்த அகத்தூண்டுதல் பகுதியானது, பின்னாளில் பேதுருவை மேன்மையான வாக்குத்தத்தங்களின் மீதுள்ள விசுவாசத்தை வலியுறுத்த நடத்தியிருக்கலாம். இது உலகின் சோதனைகளிலிருந்து தப்பித்துக்கொள்ள அவருக்கு உதவிய ஒரு கருவியாக இருந்தது.

இயேசு அவர்களுக்காக உருவாக்கிய அமைதி மற்றும் பாதுகாப்பு என்னும் குமிழ், கெத்செமனேயின் குழப்பத்தில் வெடித்த போது,அவர்கள் விழித்தெழவும், விழித்து இருக்கவும் எந்த சிரமம் இல்லாமல் இருந்தது! ஒருவேளை பேதுரு இயேசுவோடு நெருங்கி இருந்ததினால், மிக அருமையான நன்மைகளில் ஒன்றான தேவன் மேல் உள்ள அதிகபட்சமான விசுவாசத்தை பெற்றிருக்கவேண்டும். அதாவது அவருடைய பரலோக தந்தையின் மேல் முழு நம்பிக்கையும் வைக்கக்கூடிய விசுவாசத்தை இது அனுமதித்தது. பிற்பாடு, அவரது ஆவிக்குரிய சகோதரனாகிய யாக்கோபு சில நாட்களுக்கு முன் உயிர் தியாகம் செய்திருந்தாலும், இந்த விசுவாசம், பேதுரு சிறையில் இருக்கும்போது நம்பிக்கையோடு நித்திரைச் செய்வதற்கு அவரை அனுமதித்திருக்கும். (அவர் தப்பித்துக்கொள்ள தேவதூதன் அவரை எழுப்ப வேண்டியதாக இருந்தது)

**இயேசுவை கைது செய்தல் மற்றும் பேதுருவின் மறுதலிப்பு (லூக்கா 22:48-62 , மாற்கு 14:53-72, யோவான் 18:3-27)**

கெத்செமனேயில் வெளிப்படும் காரியங்களுக்கு சீஷர்கள் தயாராக இருக்கவில்லை. யூதாஸ் மற்றும் தேவாலய காவலாளர்கள் தோட்டத்தில் நுழைந்த போது, "யாரை தேடுகிறீர்கள்" என்று இயேசு கேட்டார், அவருக்கு அவர்கள் பிரதியுத்தரமாக - நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள். அதற்கு இயேசு - நான்தான் என்றார். அவரைக் காட்டிக் கொடுத்த யூதாசும் அவர்களுடனேகூட நின்றான்." (யோவான் 18:4,5) இயேசுவின் வார்த்தைகள், அந்த காவலர்களை அதிசயமாய் பின்னிட்டு விழச் செய்தது. இதினிமித்தம் சுழ்நிலை கட்டுப்பாட்டில் இருப்பதாக இயேசு தெளிவுபடுத்தினார். ஆனால் பேதுரு ஒரு பட்டயத்தை வைத்திருந்ததினால், கர்த்தரை பாதுகாக்கும்படி, பிரதான ஆசாரிய ஊழியனாகிய மல்குசின் காதை வெட்டினார். "அப்போது இயேசு பேதுருவை நோக்கி - உன் பட்டயத்தை உறையிலே போடு, பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ என்றார்"(யோவான் 18:11 )

அவருடைய சீஷர்கள் அவரை புரிந்துக் கொள்வதற்கு இது ஒரு முக்கியமான பாடமாக இருந்தது. தேற்றரவாளரும், ஆசிரியருமாயிருக்கும் பரிசுத்த ஆவியை அவர்கள் விரைவில் பெற இருந்தார்கள். ஆனால், பாதகமான சூழ்நிலையில், இயேசுவின் கீழ்ப்படிதலைக் குறித்த இந்த உதாரணங்களில், இயேசு உணர்ச்சி ரீதியிலான வலிமையை வெளிப்படுத்தவும், சத்தியத்தை எவ்வாறு பேசவேண்டும் என்றும் தேவன் யுத்தத்தை செய்வதற்கு எவ்வாறு அனுமதிக்கவேண்டும் என்றும் செயல் விளக்கம் அளித்தார்.

தேவனுடைய சித்தத்திற்கு அர்ப்பணித்து, அவருடைய கையில் தம்முடைய ஜீவனை எப்படி ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று இயேசு தம் சீஷர்களுக்கு காட்டினார். அடிக்கப்படும் ஆட்டை போல இயேசுவை அவருடைய சீஷர்கள் கண்டார்கள். ஆனால் இயேசு உயிர்த்தெழுந்த பின் இயேசு அவர்களுக்காக தீர்க்கதரிசனங்களைத் தொகுத்து, பாடுப்பட்ட மேசியாவுக்குள் மறைந்திருக்கும் சித்திரத்தை வெளிப்படுத்தினார். கெத்சமனேயில், இயேசு சீஷர்களுக்கு தனது பரமபிதாவின் முழு கட்டுப்பாட்டுகுள்ளுளார் என்பதையும் தனக்கு உகந்த பாத்திரம் என தேவன் கண்ட பாத்திரத்தில் தான் பானம் பணிக்கொண்டு இருப்பதையும் காண்பித்தார்.

பிரதான ஆசாரியனின் முற்றத்தில் பேதுரு இயேசுவை மறுதலித்தது ஒரு அதிர்ச்சிகரமான அனுபவமாக இருந்தது. அவருடைய மறுதலிப்பைப் பற்றி இயேசு முன்னறிவித்த காரியங்கள், இப்போது சரியானவை என்று பேதுரு அறிந்துக்கொண்டார். ஆனால் காவலிலும், சாவிலும் உம்மைப் பின்பற்றிவர ஆயத்தமாயிருக்கிறேன் என்று தற்பெருமையுடன் சொன்னார். (லூக்கா 22:33) ஆண்டவரை மறுதலிக்கும் இந்த வேதனையுள்ள அனுபவம், ஒரு முறை இயேசுவினால் மறுசீரமைக்கப்பட்டு, சரியான முறையில் உள்ளத்தில் பயிற்சிக்கும்போது பேதுருவுக்கு அதிகதிகமான பலத்தை வளர்ச்சி அடையச்செய்தது. அவருடைய மிகுதியான தாழ்மை, அவருடைய அப்போஸ்தல பொறுப்புகள் கொடுக்கும் மதிப்பை எதிரீடுசெய்தது. பேதுரு தனது பரலோகத் தகப்பனின் சித்தத்தைச் செய்து, சுவிசேஷத்தை நம்பிக்கையோடு பிரசங்கித்து, அவருடைய எதிரிகளுக்கு முன் நின்று, அவருடைய யுத்தத்தை தேவன் செய்வதற்கு அனுமதிப்பதற்கு அவருடைய தனித்துவமான வரங்களையும் வாய்ப்புகளையும் பயன்படுத்தினார்

**தீர்மானம்**

நமக்கு முன் சென்ற விசுவாசமுள்ள சீஷர்கள், யூதாஸ், மற்ற பரிசுத்த புருஷரும் ஸ்திரீகளும், இன்னும் பலர் - அவர்கள் யார் என்றும், அவர்கள் என்ன நிலையை அடைவார்கள் என்பதை தீர்மானித்திருப்பார்கள். இவர்கள் இயேசுவையும் நம்முடைய பரலோக தகப்பனையும் சேவிப்பதற்கு ஒரு வாழ்க்கையை ஒப்புவிப்பார்களா அல்லது தங்களுடைய சுய சித்தத்தின் படி ஜீவிப்பார்களா? சுவிசேஷத்தின் சத்தியமே நாம் அனைவரும் எதிர்பார்க்கும் அனைத்துமாகும். அது பேதுருவை விரக்தியிலிருந்து காப்பாற்றியது, அது தர்சு பட்டணத்திலிருந்த சவுலைக் காப்பாற்றியது, அது யூதாசுக்கு அவனுடைய தவறான வழியை காட்டியது. இப்பொழுது சுவிசேஷத்தின் உள்ளான வேலை மற்றும் வெளிப்புறமான வேலைகளை நமக்குள்ளிருந்து செயல்படுவதற்கு சக்திவாய்ந்ததாக இருக்கிறது.

ஆனால் சத்தியம் மட்டும் போதாது என்று இயேசு தம்முடைய சீஷர்களுக்கு காட்டினார். அவர்கள் அறிந்த சத்தியத்தினால் மட்டுமே ஒரு வெற்றிகரமான ஆவிக்குரிய வாழ்க்கையை நடத்த முடியாது. மிகுந்த கனிகளைக் கொடுக்கும் பொருட்டு, சத்திய வார்த்தைகளை கடைபிடிப்பதற்கு இயேசு அவர்களுக்கு கற்பித்தார். கனிகொடுப்பதற்கு அவர்கள் பெற்ற "அறிவோடு" அதை "செயல் படுத்தவும்" அவசியமாக இருந்தது. உள்ளும், புறமுமான "வேலைகளை", காரணத்திற்கு அப்பாறப்பட்ட பொறுப்புகளாக மட்டுமே செய்யமுடியும். ஆகும். ஆபத்தை எதிர்நோக்கியும், அதன் விளைவாக வந்த மரணத்திலும், அநீதியின் கரத்திலும், அவருடைய கிரியைகளினால் இந்த அர்ப்பணிப்பை அவர்களின் மனதில் ஆழமாக பதியவைத்தார். சீஷர்களுக்கு இயேசு, தாங்கள் அறிந்திருந்ததை அவர்கள் செய்ததோடு கலந்து ஒன்றுபடபோதித்தார். மேலும் அவர்கள் முன்னோக்கி நகர சுவிசேஷ சத்தியத்தின் அங்கீகாரத்தையும் கொடுத்தார். இந்த சத்திய சுவிசேஷம், அவர்களில் கிரியை செய்து என்றும் சாகாத அர்ப்பணிப்பை வளர்த்தினதையே, அவரின் கடைசி நாட்களில் அவரின் அருமையான சீஷர்களின் மனதில் செலுத்தி வளரச்செய்தார் இயேசு. இன்றும் நமது மனதில் வைத்துச் சென்ற இயேசுவின் ஐஸ்வரியமான மரபாகும். அதனிடத்தில் நாம் செல்வோமாக! சத்திய சுவிசேஷமே வாழ்வதற்கும் மரிப்பதற்கும் ஏதுவானது!

# குடியேறுதலில் முரண்பாடு

"யாதொரு அந்நியன் உங்கள் தேசத்தில் உங்களோடே தங்கினால், அவனைச் சிறுமைப்படுத்த வேண்டாம். உங்களிடத்தில் வாசம் பண்ணுகிற அந்நியனைச் சுதேசி போல எண்ணி, நீங்கள் உங்களில் அன்புகூருகிறதுபோல அவனிலும் அன்புவருவீர்ககளாக, நீங்களும் எகப்து தேசத்தில் அந்நியராயிருந்தீர்களே, நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்."(லேவியராகமம் *19:33-34*)

2015ல் சிறிய அகதிகள், குடியேறுதலுக்கு தனிகவனம் கொண்டுவந்தனர். இருந்தபோதிலும் பல நாடுகள் அகதிகளை ஏற்றுக்கொள்ள ஒப்பந்தம் போட்டாலும், மீதம் இருக்கும் குடியேற்றம் நாடும் 90 சதவிதத்தினர் அரசியல் மற்றும் சமுதாய கிளர்ச்சியை உண்டாக்கினர், முக்கியமாக ஐக்கிய நாடுகளில்.

உலகமயமாதல் மக்களுக்குஅவசியமான இடங்களில் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தவில்லை. உலக மக்கள் தொலை கிட்டத்தட்ட பாதிக்கும் -3 பில்லியனுக்கும் அதிகமான மக்கள் -ஒரு நாளைக்கு 2.50டாலர்களுக்கும் குறைவான பணத்தை கொண்டே வாழ்கின்றனர். மற்றும் மற்றொரு 1.3 பில்லியன் மக்கள் தீவிர வருமையில் வாழ்க்கின்றனர். ஒருநாளைக்கு 1.25க்கு குறைவான டாலர்கள் செலவில் வாழ்கின்றனர்.

போதுமான உதவி இருந்திருந்தால், முன்னேற்றத்திற்கு உதவியாக இருந்திருக்கும். வேலைகள், சமூக திட்டங்கள் எங்கு உள்ளன என்பதை பற்றி அறிந்துகொள்ளலாம். முறையான நடைமுறையிலிருந்தும் கூட, குடியேற்றமானது உள்நாட்டு வேலை இல்லாத தொழிலாளர்களிடமிருந்து கூக்கூரள் ஏற்படுகிறது. உதாரணமாக அமெரிக்காவில், 2008 நிதி நெருக்கடியால், இடம்பெயர்ந்துள்ள தொழிலாளர்கள், வேலை தேடுபவர்கள் குடியேறுபவர்களை தடை செய்யவேண்டும் என்று வலியூறுத்தப்பட்டது. ஐக்கிய இராஜ்யத்தில் உள்ள பிரபல காட்சிகளில் உள்ள தொழிலாளர்களுக்கு என்ன எச்சரிக்கையாக சொல்லப்படுகிறது என்றால்,பிரதான கட்சிகளிலிருந்து கடுமையான குடியேற்ற கொள்கை வலியுறுத்துகிறது. மற்றும் ஸ்பேயினின் அரசாங்கம் உள்நாட்டு பற்றாக்குறை காரணமாக குடியேறுபவர்களை விடுவிக்கிறது. அரசாங்கமும் குற்றவாளிகளையும் மற்றும் உளவாளிகளையும் வெளியேற்ற விடாமுயற்சி கண்டிப்பாக எடுக்கவேண்டும்.

**சங்கிலி இடம் பெயர்தல்**

புலம்பெயர்ந்தோர் கொள்கை நிறுவனம் அமெரிக்கா புலம்பெயர்வுக்கான உயர்மட்ட இடமாக இருந்துவருகிறது என்று தெரிவிக்கிறது. உலலெங்கிலும் உள்ள 240 பில்லியன் மக்கள் தொகையில் 20 சதவிதம் அமெரிக்க மக்கள் தொகையில், (2017தற்போதைய மக்கள் தொகை கணக்கீட்டின்படி) ஆதார் கட்டுபாடுகளின் காரணமாக, வெறும் வருடத்திற்கு ஒரு மில்லியன் மக்கள் மட்டுமே குடியேற்ற அனுமதிக்கப்படுகின்றனர். பெரும்பான்மை யானவர்கள் சங்கிலி இடம்பெயர்வு என்று அழைக்கப்படுவதன் மூலமாகவே இடம்பெயர்கின்றனர்.

இந்த நடைமுறையில் கீழ் சட்டப்பூர்வமாக குடி உரிமை அல்லது நிரந்தர வசிப்பிடத்தை பெற்ற குடும்ப உறுப்பினர்களின் அனுசரணையில் வெளிநாட்டு பிறஜைகள் அமெரிக்காவுக்கு அனுமதி வழங்குகிறது. எண்கள் யு. எஸ் . காம் என்ற ஒரு சார்பற்ற குழு 1950 முதல் 2018 காலப்பகுதியில் 170 மில்லியன் முதல் 327 மில்லியன் வரையில் அமெரிக்கா மக்கள் தொகைகை இந்த நடைமுறை இரட்டிப்பாக்கி உள்ளது என்கின்றது. மிக முக்கியமான இயக்கத்தில், ஐரோப்பாவிலிருந்த லத்தீன் அமெரிக்கா மற்றும் ஆசியாவுக்கு செல்லும் உட்நாடுகளில் மாற்றம் ஏற்பட காரணமாக இருந்தது.

ஆண்டு முதலீட்டிருந்த நான்கு பிரிவுகளை கொண்ட சங்கிலி இடப்பெயர்ப்பு புதிய உள்ளீடுகளை ஒரு விரைவு பாதையில் தடுக்கிறது. 1990 களின் முதற்பகுதிகளில் முதலில் விண்ணப்பித்த பிலிபைன்ஸிலிருந்து அநேகருக்கு பச்சை கார்டுகள் சமீபத்தில் வழங்கப்பட்டன என்று வெளியுறவுத்துறை தெரிவிக்கிறது. இந்த முதலீடு மற்றும் நீண்ட கால தாமதங்கள் காரணமாக, பலர் உள்ளே நுழைந்து, சட்ட விரோதமாக குடியேறியுள்ளனர். சட்ட விரோதமாக நுழைவது கூட்டாட்சிக் குற்றமாக இருக்கும். அதேவேளை, ஆறு மாதம் சிறை தண்டனைகளும், நாடுகடத்தலும் சில நேரங்களில் ஏற்படுத்தப்படும்.

இருப்பினும், அமெரிக்காவின் தற்போதய நிர்வாகம், எந்த ஒரு விதிவிலக்கும் இல்லாமல், "ஜீரோ சகிப்பு தன்மை" என்ற கொள்கையை கடைபிடித்து வருகிறது. மற்றும் குடியேற்ற செயல்முறையை தவிர்க்க முயற்சி செய்கிறவர்களை நாடுகடத்த செய்கிறது.

**மோசேயால் மதிக்கப்பட்ட நில உரிமைகள்**

இஸ்ரயேல் தேசத்தில் "அந்நியனை" சூழ்ந்துக் கொள்ளும்படி இஸ்ரயேலுக்கு கட்டளையிட்ட போதிலும், வெளிநாட்டிற்குள் நுழைய விரும்புவோர், தேசிய எல்லைகளும், இறையாண்மைக்கும் மரியாதை காட்டுவதை பல சம்பவங்கள் காட்டுகின்றனர்.

"அவர்கள் தங்கள் தகப்பனாகிய ரெகுவேலிடத்தில் வந்தபோது, அவன்: நீங்கள் இன்று இத்தனை சீக்கிரமாய் வந்தது என்ன என்று கேட்டான்.அதற்கு அவர்கள்: எகிப்தியன் ஒருவன் மேய்ப்பரின் கைகளுக்கு எங்களைத் தப்புவித்து, எங்களுக்குத் தண்ணீர்மொண்டு கொடுத்து, ஆடுகளுக்கும் தண்ணீர் காட்டினான்

என்றார்கள். அப்பொழுது அவன் தன் குமாரத்திகளைப் பார்த்து: அவன் எங்கே? அந்த மனிதனை நீங்கள் விட்டுவந்தது என்ன? போஜனம்பண்ணும்படிக்கு அவனை அழைத்துக் கொண்டுவாருங்கள் என்றான். மோசே அந்த மனிதனிடத்தில் தங்கியிருக்கச் சம்மதித்தான். அவன் சிப்போராள் என்னும் தன் குமாரத்தியை மோசேக்குக் கொடுத்தான்.அவள் ஒரு குமாரனைப் பெற்றாள். நான் அந்நிய தேசத்தில் பரதேசியாய் **[Hebrew *ger*]** இருக்கிறேன் என்று சொல்லி, அவனுக்கு கெர்சோம் என்று பேரிட்டான்."(யாத்திராகமம் 2:18-22)

மோசே தன்னுடைய எபிரெய சகோதரர்களில் ஒருவரைத் தாக்கி ஒரு விசாரனைக்காரனை கொன்ற பிறகு எகிப்தை விட்டு ஓடிபோனார். அவர் சீனாய் வனாந்திரத்தை கடந்து மீதியானுக்கு பிரவேசித்து, (ஒருவேளை வடமேற்கு அரேபியாவாக இருக்கலாம்) எத்திரோவின் குமாரத்திகளை பாதுகாத்தார். விவரங்கள் குறைவாக இருந்தாலும், எத்திரோவின் நன்றியுணர்வின் காரணமாக, அவர் மூத்த குமாரத்தியை மோசேவுக்கு திருமணம் செய்துக் கொடுத்தார். மோசே 40 வருடங்களாக அவருடைய ஆடுகளை மெய்த்துக் கொண்டிருந்தார். (யாத்திராகமம் 3:1 )தேசத்தில் ஒரு ஆசாரியனாகிய எத்திரோவின் விருந்தோம்பலின் காரணமாக, மேசே தன்னை ஒரு "பரதேசியாய்" (*ger*) என்று அழைத்துக்கொண்டார். வெளிநாட்டில் (*nakhiriyah*) ஒரு "அந்நியனாக" (*nekhar*) தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளவில்லை.

அவர் அந்நியனாக இருந்து ஒரு பரதேசியாக மாறினதை பிரதிபலிக்கும்படிக்கு, மோசே, (*ger*) என்ற எபிரெய வார்த்தை கொண்ட கெர்சோம் என்று பெயரை தன்னுடைய குமாரனுக்கு சூட்டினார். "பின்பு மோசே காதேசிலிருந்து ஏதோமின் ராஜாவினிடத்துக்கு ஸ்தானாபதிகளை அனுப்பி: எங்கள் பிதாக்கள் எகிப்துக்குப்போனதும், நாங்கள் எகிப்திலே நெடுநாள் வாசம்பண்ணினதும்....கர்த்தரை நோக்கி நாங்கள் மன்றாடினோம்; ....ஒரு தூதனை அனுப்பி, எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்; ... காதேஸ் ஊரில் வந்திருக்கிறோம்.நாங்கள் உமது தேசத்தின் வழியாய்க் கடந்துபோகும்படி உத்தரவு கொடுக்கவேண்டும்; வயல்வெளிகள் வழியாகவும், திரட்சத்தோட்டங்கள் வழியாகவும் நாங்கள் போகாமலும், துரவுகளின் தண்ணீரைக் குடியாமலும் ராஜபாதையாகவே நடந்து, உமது எல்லையைக் கடந்துபோகுமட்டும், வலதுபுறம் இடதுபுறம் சாயாதிருப்போம் என்று, உமது சகோதரனாகிய இஸ்ரவேல் சொல்லி அனுப்புகிறான் என்று சொல்லச்சொன்னான். அதற்கு ஏதோம்: நீ என் தேசத்தின் வழியாய்க் கடந்துபோகக்கூடாது; போனால் பட்டயத்தோடே உன்னை எதிர்க்கப் புறப்படுவேன் என்று அவனுக்குச் சொல்லச்சொன்னான். அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் அவனை நோக்கி: நடப்பான பாதையின் வழியாய்ப் போவோம்; நாங்களும் எங்கள் மிருகங்களும் உன் தண்ணீரைக் குடித்தால், அதற்குக் கிரயங்கொடுப்போம்; வேறொன்றும் செய்யாமல், கால்நடையாய் மாத்திரம் கடந்துபோவோம் என்றார்கள். அதற்கு அவன்: நீ கடந்துபோகக்கூடாது என்று சொல்லி, வெகு ஜனங்களோடும் பலத்த கையோடும் அவர்களை எதிர்க்கப் புறப்பட்டான்.இப்படி ஏதோம் தன் எல்லைவழியாய்க் கடந்துபோகும்படி இஸ்ரவேலருக்கு உத்தரவு கொடுக்கவில்லை; ஆகையால் இஸ்ரவேலர் அவனை விட்டு விலகிப்போனார்கள்."(எண்ணாகமம் 20:14-21) 40 வருடங்கள் கழித்து இஸ்ரயேலர்கள் சீனாய் வனாந்திரத்தைவிட்டுச் சென்றபோது, யெகோவா தேவன், மோசேவை ஏதோமின் வழியாக செல்லும்படி வழிநடத்தினார். (இப்போது இருக்கும் தென் யோர்தான்) ஏதோமின் இராஜா (ஏசாவின் வழிவந்த ஏதோமியர்கள்) இவர்களின் கோரிக்கையை மறுத்து, எல்லைகளை பாதுகாக்க தனது சேனைகளை அனுப்பினான். பின்னர் இஸ்ரயேல் தேசத்திற்குள் செல்வதற்கு பதிலாக தென்புறமாக திரும்பினார்கள். (பிற்காலத்தில், அவர்கள் அங்கு நுழைந்தார்கள், ஆனால் ஏதோமிலிருந்து எதையாவது எடுத்துக்கொள்ளவதற்கு தடை விதிக்கப்பட்டது. உபாகமம்2:2-5)

"பார்வோன் அவனுடைய சகோதரரை நோக்கி: உங்கள் தொழில் என்ன என்று கேட்டான்; அதற்கு அவர்கள்: உமது அடியாராகிய நாங்களும் எங்கள் பிதாக்களும் மந்தை மேய்க்கிறவர்கள் என்று பார்வோனிடத்தில் சொன்னதுமன்றி,கானான் தேசத்திலே பஞ்சம் கொடிதாயிருக்கிறது; உமது அடியாரின் மந்தைகளுக்கு மேய்ச்சல் இல்லாமையால், இத்தேசத்திலே தங்கவந்தோம்; உமது அடியாராகிய நாங்கள் கோசேன் நாட்டிலே குடியிருக்கும்படி தயவுசெய்யவேண்டும் என்று வேண்டிக்கொண்டார்கள். அப்பொழுது பார்வோன் யோசேப்பை நோக்கி: உன் தகப்பனும் உன் சகோதரரும் உன்னிடத்தில் வந்திருக்கிறார்களே. எகிப்துதேசம் உனக்கு முன்பாக இருக்கிறது; தேசத்திலுள்ள நல்ல இடத்திலே உன் தகப்பனையும் உன் சகோதரரையும் குடியேறும்படி செய்; அவர்கள் கோசேன் நாட்டிலே குடியிருக்கலாம்; அவர்களுக்குள்ளே திறமையுள்ளவர்கள் உண்டென்று உனக்குத் தெரிந்திருந்தால், அவர்களை என் ஆடுமாடுகளை விசாரிக்கிறதற்குத் தலைவராக வைக்கலாம் என்றான்." (ஆதியாகமம்47:3-6)

யோசேப்பின் ஆலோசனையை தொடர்ந்து, யாக்கோபின் குடும்பம் மீண்டும் கோசேன் நாட்டில் குடியேற பார்வோனிடமிருந்து அனுமதி கேட்டார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது, அவர்கள் சட்ட குடியிருப்பாளர்கள் (*gers)* ஆனார்கள்.

"சபையாராகிய உங்களுக்கும் உங்களிடத்தில் தங்குகிற அந்நியனுக்கும் ஒரே பிரமாணம் இருக்கவேண்டும் என்பது உங்கள் தலைமுறைகளில் நித்திய கட்டளையாயிருக்கக்கடவது; கர்த்தருக்கு

முன்பாக அந்நியனும் உங்களைப்போலவே இருக்க வேண்டும்.உங்களுக்கும் உங்களிடத்தில் தங்குகிற அந்நியனுக்கும் ஒரே பிரமாணமும் ஒரே முறைமையும் இருக்கக்கடவது என்று சொல் என்றார்."(எண்ணாகமம் 15:15-16) இஸ்ரயேல் சமுதாயத்தில் (*ger*) பரதேசிகளாக இருப்பவர்கள் வயல்களில் அறுவடை முடிந்தவுடன் தானியங்களை சேகரிப்பதற்கும் (லேவியாராகமம் 19:9-10), தசமபாகங்களிலிருந்து பயனடையவும் (உபாகமம் 26:12-13), நியாயமான மற்றும் சரியான நேரத்தில் ஊதியம் பெறவும் (உபாகமம் 24:14-15 ) மற்றும் மதச்சார்பற்ற மற்றும் மத குடியுரிமை முழு சலுகைகள் (யாத்திராகமம் 12:43-49, லேவியராகமம் 16:29-30, 17:8-12) போன்ற சமுதாய நலன்களைப் பெற்றார்கள்.

இன்னும் குடியேற்றத்திற்கான வரம்புகள் இருந்தன. யெகோவா தேவனுக்காக தங்களுடைய முந்தைய பண்பாடுகளை கைவிட்டதன் நிமித்தம் ரெபேக்காள், ராகாப் மற்றும் ரூத் வரவேற்பு பெற்றார்கள். ஆனால் இஸ்ரயேல் புறஜாதி மணபெண்களை ஏற்றுக்கொள்ளவில்லை (எஸ்ரா 9 மற்றும் 10ம் அதிகாரங்கள்) மேலும் அந்நியர்கள் தேவனுடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கு எந்த பங்கும் பெறவில்லை. (ஏஸ்ரா 4: 1-3) இராஜ்யத்தில் உயிர்த்தெழுப்பட்ட ஜனங்கள் தங்கள் வழிகளை முற்றிலும் மாற்றிக் கொள்ளவேண்டும்.

### நிறைவான ஒரு இராஜியம்

" அவனவன் தன்தன் திராட்சச்செடியின் நிழலிலும், தன்தன் அத்திமரத்தின் நிழலிலும் பயப்படுத்துவார் இல்லாமல் உட்காருவான்; சேனைகளுடைய கர்த்தரின் வாய் இதைச் சொல்லிற்று. "(மீகா4:4 ) பூமியின் தற்போதைய ஏற்பாட்டின் கீழ் , வளங்கள் குறைவாக இருக்கின்றன மேலும் சிறந்த வாழ்வுக்கான கனவுகள், உண்மையான பாவம் மற்றும் சுயநலம் நிறைந்த உலகினால் குறுக்கிடப்படுகிறது. எப்போதும் இப்படி இருக்காது. முழு பூமியும் இஸ்ரயேல் துவங்கி, ஒரு பரதீஸாக மாறும் என்று வேதாகமம் வாக்குறுதி அளிக்கிறது. "வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து, புஷ்புத்தைப்போலச் செழிக்கும். "(ஏசாயா 35:1)"பூமி தன் பலனைத் தரும், தேவனாகிய எங்கள் தேவனே எங்களை ஆசீர்வதிப்பார்."(சங்கீதம் 67:6) தேவனுடைய இராஜ்யத்தில் மரித்தோரிலிருந்து எழுந்து, நீதியினால் கற்பிக்கப்பட்ட மனுஷர் அதிகபட்சமாக ஜீவனை பெறுவார். கீழ்ப்படிதல் உள்ள யாவரும் நித்திய ஜீவனுக்குரிய கிருபையான ஆசீர்வதங்களில் பங்கு பெறுவார்கள். "ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன்."(வெளிப்படுத்தல்22:17)